1099

# இரண்டாவது இந்திய திருயாத்திரை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 NOV 1935
MADRAS

இ6:4198
N35
68046

✠

மனுக்குல இரட்சணிய
பத்தொன்பதாவது நூற்றாண்டின்
ஜுபிலி பலன்களையடைய
1933—34-ல் நடத்தப்பெற்ற
இரண்டாவது

# இந்திய திருயாத்திரை.

உயர்திரு. M. S. பிள்ளை அவர்கள்
கடிதங்களினின்றும் எடுத்தெழுதப்பட்டது.

திருநெல்வேலி டவுண்,
ஹிலால் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1935.

Q6:4198
N35

34 02
922

68046

**Nihilobstat.**

FR. A. IGNATIUS MARIA,
*Censor Deputatu.*

CAPE - COMORIN,
St. Raphael's feast,
24—10—1935.

OFFICE OF THE REGISTRAR OF
29 NOV 1935
MADRAS

No. 1496.

As one among those who joined the Indian Second Pilgrimage we commend this book to all Christians.

The solid piety of the author is evident throughout.

*Imprimatur.*

✠ LAURENCE PEREIRA,
*Bishop of Kottar.*

KOTTAR,
*24th October, 1935,*



நமது யாத்திரிகர்

உயர் திருவாளர் M. S. பிள்ளை அவர்கள்

# முன்னுரை.

பூவலம் செய்தலின் புண்ணியத்தை எம்மறை யெத் திறத்தினரும் புகழ்ந்து, மக்கள் அத்திறங்கொண்டு பெறும் அளவிலா அறிவையும், உயர்வையும், உவகையையும், தகைமையையும் பாராட்டியுள்ளாரன்றோ? இவ்வலம் வருதற்குரிய பல நோக்கங்களில் முதல் நோக்கமாய இம்மை, மறுமை இன்பந்தரும் திருத்தலயாத்திரையே சிறந்ததென்பது எங்கும் நிறை இறைவனிடம் நிறைகொண்ட ஒவ்வொருவருக்கும் ஒப்ப முடிந்ததே. நம் தந்தையராம் இந்தியரும் இமய முதல் இலங்கைவரையிலேனும் உலவிவரார் மறுமை நெறி நன்கு அறியாரெனக்கொண்டிருந்தது அவர் சீரிய நாகரீகத்தைக் காட்டும் ஆதலின் என்றும் பாராட்டத் தக்கது.

உயரிய திருயாத்திரை வரலாறு நம் நற்றாய் மொழியாம் இனிய தமிழில் நம்மவரிடை அருமையாதலின், அத்தகைய ஒன்றை வாசித்தறிதல் செய்தறிதலின் இரண்டாவதாக மக்கள் மனதை அகலப்படுத்தி அறிவு வளர்த்துத் தூயதாக்கலேயன்றி வாய்த்தவிடத்து ஒன்றிவிறங்கவும் தூண்டுமென்ற நல்லெண்ணம் ஏவ, மனுக்குல இரட்சணிய பத்தொன்பதாம் நூற்றாண்டு கொண்டாடப்பெற்ற அருந்திருநல்விழாவைச் சார்ந்து இந்தியாவிலிருந்து சென்ற இரண்டாம் திருயாத்திரையிற் கலந்து நற்பங்குபெற்ற உயர்திரு. M.S.பிள்ளை அவர்கள் (Manager, Messrs. F. X. Pereira & Sons, Colombo) தங்கள் குடும்பத்திற்கு எழுதிய கடிதங்களை அம்முறையினின்றும் ஒருவாறு பிரித்துத் திருத்தி நூலியல்பும்பட அமைத்து வெளியிடத்துணிந்தனம். இப்பெரியார் அன்பும் இன்பமும் சிறக்க சுருக்கமாக வெனினும் உளத்தை உருக்கும் பான்மையாய் எல்லாம் வல்ல நல்லோன் பற்றுமிகுந்து அருள் துணை கொண்டெழுதியது எனும்படி விளக்கியிருக்கும்

இத்திருயாத்திரை வரலாறு, நம் தமிழ்க் கத்தோலிக்க் மக்கள் இத்திருத்தலங்களை அகக் கண்ணுற் கண்டு உளத்தால் அவ்வழகிய அரிய இடங்களில் உலவி உவகை கொள்வதன்றி, பிறநாடு நகரங்கள் நமது மறை மறையாளருண்மைகள் இவை பற்றிய அறிவு பெற்றுத்தெளிந்து உண்மை மதப்பற்று மிகுந்து சீர்மை அடைவர் என்பது எம் நம்பிக்கை.

தம் கடிதங்களை வெளியிட விடைதந்த நம் பெரியாருக்கும், இதிலடங்கிய அழகிய படங்களுக்கு அச்சு தந்துதவிய இலங்கை சேமநிதி நிலையக் காரியதரிசியும் திருயாத்திரைக்காரரில் ஒருவருமாய உயர்திரு. H. A. ஹாமெர் (Mr. H. A. Hamer, Secretary of the Ceylon Savings Bank, Colombo) அவர்களுக்கும், இந்நூல் வெளிவர மிக்க அவாவும் ஆர்வமும் கொண்டு எம்மை உற்சாகப்படுத்திய உயர்திரு. திவான் பகதூர் I. X. பெறைரா அவர்களுக்கும் எமது நன்றி உரியது.

பாளையங்கோட்டை }
அக்டோபர் '35. }

அ. ச.

# மதிப்புரை

கடல் புடைசூழ்ந்த இக்காசினியில் கத்தோலிக்கர்கள் கண்ணாரக்கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தேவாதிதேவனும் இராஜாதிஇராஜனும் திவ்விய ஜேசுவையும், பரலோக பூலோக இராஜேஸ்பரியாம் அவருடைய கன்னி மாதாவையும் ஸ்மரித்து அஞ்சலிசெய்து போற்றிப் புகழ்ந்து அவர்களுடைய அநுக்கிரகத்தையும் அடைக்கலத்தையும் அபரிமிதமாய் அடையும் சிரேஷ்டம் பெற்ற ஸ்தலங்கள் மூன்று உள. அவையாவெனில்: நரதேவனாகிய நமது அருமை இரட்சகர் பிறந்து வளர்ந்து பாடுபட்டு மரித்த பரிசுத்த பூமி பலஸ்தீனா நாடு ஒன்று. அவருடைய பிரதிநிதி திரிமகுடம் புனைந்த பரிசுத்த பாப்பரசர் செங்கோன்மை செலுத்தும் உரோமைமா நகர் மற்றொன்று. அமலனைப்பெற்ற அன்னை அமலோற்பவி அன்புடன் அனைவருக்கும் அருள் பொழியும் லூர்துபதி பிறிதொன்று என்க.

இம்மூன்று பிரதான ஸ்தலங்களையும் ஐரோப்பாவிலுள்ள ஏனைய புராதன க்ஷேத்திரங்களையும் தரிசிப்பது எல்லோராலும் சாத்தியமான கருமமன்று. இங்ஙனம் தரிசிக்கக் கூடாதவர்கள் தங்கள் மனோரூபிகரத்தால் தரிசித்து பயன் உய்யுமாறு இனிய தமிழில் தெள்ளிய நடையில் மிக்க அழகுவாய்ந்த படங்களைக் கூட்டிச்சேர்த்து "இரண்டாவது இந்திய திருயாத்திரை" யென நாமகரணஞ் சூட்டி இந்நூலை வெளியிட்டவர்களுக்குத் தமிழ்க் கத்தோலிக்கர்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இதை வாசிப்பவர்கள் தேச சரித்திரம், பூகோள சாஸ்திரம், நானாதேசத்தாருடைய பழக்க வழக்கங்கள் இது போன்ற இலௌகிக ஞானத்தைக் கற்றுக்கொள்ளுகிறதுமல்லாமல் சத்திய திருச்சபையின் மான்மியம், விசுவாசத்தின் மகத்துவம், ஆத்தும இரட்சணிய ஆவல், கத்தோலிக்க

ஊழியம் இதுபோன்ற வைதீக ஞானத்தையும் கற்றுக் கொள்ளுவார்களென்பது எமது துணிபு.

இது மாத்திரமல்ல. இந்த "இரண்டாவது இந்திய திருயாத்திரை" வரலாறுனது நமது மாபெரும் யாத்திரையை ஞாபகப்படுத்த வேண்டும். நாம் எல்லோரும் இப்பர தேசத்தில் யாத்திரிகர்கள். நாம் சேரவேண்டிய தேசம் மோக்ஷம். இப்பெரும் யாத்திரை நம் எல்லோருக்கும் சிந்தா யாத்திரையாய் முடிந்து மோக்ஷகரை சேர இராஜனும் ஜேசு கிருபை பாலிப்பாராக!

✠ FRANCIS TIBURTIUS ROCHE, S. J.,
BISHOP OF TUTICORIN.

தூத்துக்குடி,
அக்டோபர் 24-ம் தேதி,
அர்ச். இரபேல் சம்மனசு திருநாள்

# பொருளடக்கம்


பக்கம்

அத்தியாயம்—1
திருயாத்திரைக்குப் புறப்படுதல் ... ... 1

அத்தியாயம்—2
ஜாப்பிட்டி—கெயுரோ ... ... 6

அத்தியர்யம்—3
பாலஸ்தீனு நாடு—நசரேத் ... ... 11

அத்தியாயம்—4
பாலஸ்தீனு நாடு (தொடர்ச்சி)—ஜெருசலேம்—
பெத்லேகம்—கர்மேல் மலை... 14

அத்தியாயம்—5
நேப்பிள்ஸ்—பதுவா—வெனிஸ் ... ... 28

அத்தியாயம்—6
ரோமாபுரி—தேவாலயங்கள்—பாப்பரசர் பேட்டி ... 33

அத்தியாயம்—7
ரோமாபுரி (தொடர்ச்சி)—சுரங்க அறைகள் ... 41

அத்தியாயம்—8
ரோமாபுரி (தொடர்ச்சி) அர்ச். இராயப்பர் தேவாலயம் ... 46

அத்தியாயம்—9
ரோமாபுரி (தொடர்ச்சி)—காட்சி சாலைகள்—
தேவாலயங்கள் ... 50

அத்தியாயம்—10
ரோமாபுரி (தொடர்ச்சி)—அர்ச்சியசிஷ்ட பட்டம்
கொடுக்கும் சடங்கு ... 56

அத்தியாயம்—11

ரோமாபுரி (தொடர்ச்சி) ... ... 62

அத்தியாயம்—12

ஜினேவா ... ... 67

அத்தியாயம்—13

லூர்து நகர் ... ... 70

அத்தியாயம்—14

விசியே ... ... 81

அத்தியாயம்—15

பாரீஸ்—லண்டன் ... ... 84

அத்தியாயம்—16

பாரெலமோனியா—லையன்ஸ்—ஆர்ஸ்—மார்சேல்ஸ் ... 90

அத்தியாயம்—17

சுவேஸ் கால்வாய்—ஏடன் ... ... 93

அத்தியாயம்—18

திருயாத்திரையின் முடிவு ... ... 95

# படங்கள்


எதிர்ப் பக்கம்

1. நமது யாத்திரிகர் உயர் திருவாளர் M. S. பிள்ளை அவர்கள் ... iv
2. திருயாத்திரையில் கலந்துகொண்ட சில முக்கிய தென்னிந்தியர் ... xii
3. சங். வெதெல்லியார் சுவாமிகள் ... ... 4
4. மங்கள வார்த்தை கோயிலின் உட்புறம் — நசரேத் ... 10
5. மரியாயின் புதுமை ஊற்று — நசரேத் ... 12
6. திபேரியா ஏரி ... ... ... 14
7. திருக்கல்லறைக் கோயில் — ஜெருசலேம் ... 16
8. யூதர்களின் பிரலாப ஸ்தலம் — ஜெருசலேம் ... 18
9. கர்த்தர் பிறந்த கோவில் — பெத்லேகம் ... 22
10. ஜெத்சமெனி பூங்காவனம் — ஜெருசலேம் ... 24
11. ஒலிவமலை — ஜெருசலேம் ... ... 26
12. அர்ச். அருளப்பர் தேவாலயம் — ரோமாபுரி ... 34
13. பரிசுத்த பாப்பரசர் 11-ம் பத்திநாதர் ... ... 38
14. அர்ச். சின்னப்பர் தேவாலயம் — ரோமாபுரி ... 42
15. அர்ச். இராயப்பர் தேவாலயம் — ரோமாபுரி ... 46
16. அர்ச். இராயப்பர் தேவாலயம் உட்புறம் ... 48
17. அர்ச்சிக்கப்பட்ட படிகள் — ரோமாபுரி ... 52
18. அர்ச். மரியாயின் மேஜர் தேவாலயம் — ரோமாபுரி ... 54
19. பரிசுத்த பாப்பரசர் அர்ச். இராயப்பர் தேவாலயத்திற்கு பவனி செல்லுதல் ... 56
20. கல்லறைத் தோட்டத்தின் ஓர் பகுதி — ஜினேவா ... 68

21. லூர்து நகர் தேவாலயம் ... ... ... 70
22. லூர்து கெபி ... ... ... 74
23. கர்மேல் மடத்துக் கோவில் — லிசியே ... ... 82
24. திருஇருதயக் கோவில் — பாரீஸ் ... ... 84
25. திருஇருதயக் கோவிலின் உட்புறம் — பாரீஸ் ... 86
26. யாத்திரிகர் தரிசித்த ஸ்தலங்களின் படம் (Map) ... 98



திருயாத்திரையில் கலந்துகொண்ட
சில முக்கிய தென்னிந்தியர்

# அத்தியாயம் 1.

## திருயாத்திரைக்குப் புறப்படுதல்

நமது பாப்பரசர் 11-ம் பத்திநாதர் தயவுடன் அளித்த பரிசுத்த வருட ஜுபிலி பலன்களை அடைய சங். லெதெல்லியார் சுவாமிகளால் மிகவும் வெற்றிகரமாக மூன்று திருயாத்திரைகள் நடத்தப்பெற்றன. இதற்காக தமக்கொன்றின்றி பிறர் பயனுறுங்கருத்தோடு, அன்னவர்கள் எடுத்துக்கொண்ட அரிய பிரயாசையும் பட்ட கஷ்டங்களும் சொல்லுந் தரமன்று.

இத்திருயாத்திரைகளில் இரண்டாவது திருயாத்திரை மிகவும் விசேஷமானது. ஏனெனில் அத்திருயாத்திரைக்காக ஒரு தனிக் கப்பலை ஏற்படுத்திக்கொண்டு 5 மேற்றிராணிமார்களும், 47 குருக்களும், 170 ஆண்களும், 184 பெண்களுமாக மொத்தம் 406 பேர் சென்றனர். அத்தோடு நமது நன்மையையே சதா கோரி நிற்கும் நம் நல்ல ஆண்டவர் அன்பின் தேவத்திரவிய அனுமானமாகிய நற்கருணையின் மூலமாக இராப் பகலாய் அக்கப்பலில் வீற்றிருந்தார். இப்படி இதுவரையில் கீழ்த்திசையின் சமுத்திரங்களில் ஒரு கப்பலிலாவது திவ்விய நற்கருணை ஸ்தாபகம் இருந்ததே கிடையாது. முதல் தடவையாக பாப்பானவர் இக்கப்பலுக்குத்தான் இத்தகைய விசேஷ உத்தரவு பிறப்பித்திருக்கிறார். கொந்தழித்த கடலை ஒரே வார்த்தையில் அமைதியாக்கினவரும், நம்மை ஒவ்வொரு நிமிஷமும் பாதுகாத்து வருபவருமாகிய இயேசுபிரான் எத்தருணமும் பேட்டி கொடுக்க யாத்திரிகள் மத்தியில் தயாராயிருக்கும்பொழுது அக்கப்பலில் பயணம் செய்த ஜனங்களுக்கு சற்றேனும் கவலையோ பயமோ இருந்திருக்க முடியுமா? இப்பேர்ப்பட்ட விசேஷமான இரண்டாவது திருயாத்திரையில் கலந்துகொண்ட 136 இலங்கைப் பிரயாணிகளில் நானும் ஒருவன். இப்பெரும் பாக்கியத்தை எனக்குக் கொடுத்த

சேசு மரி திரு இருதயங்களுக்கு என் தாழ்மையான நன்றி என்றும் உரித்தாகுக.

1934-ம் வருஷம் மார்ச்சு மாதம் 2-ம் தேதி வெள்ளிக் கிழமை சாயங்காலம் 4-30 மணிக்கு புறக்கோட்டை சிந்தாத் திரை மாதா கோவிலில் 136 இலங்கைத் திருயாத்திரிகளும் ஒன்றுகூடினோம். அப்பொழுது கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவரவர்கள் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் கொடுத் தார்கள். ஆசீர்வாதத்துக்குபின் அதிமேற்றிராணி ஆண்ட வரவர்கள் ஒரு அருமையான பிரசங்கம் செய்தார்கள். அப் பிரசங்கத்தில் திருயாத்திரையின் நோக்கத்தைப்பற்றியும், அதை எப்படி பயபக்தியுடன் முடித்துக்கொள்ள வேண்டு மென்பதைப்பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள். அதோடு பாலஸ்தீனாவிலும், ரோமாபுரியிலும், லூர்துகெபி யிலும், சுருக்கமாக திருயாத்திரைக்காரர் தரிசிக்கும் ஒவ் வொரு புண்ணிய ஸ்தலத்திலும் தங்களுக்காக மாத்திரமல் லாமல், தங்கள் பந்துமித்திரர்களுக்காகவும், தங்களைப்போல் தரிசிக்கும் பாக்கியம் பெறாத மற்றக் கிறிஸ்துவர்களுக்காக வும், விசேஷமாக நமது தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக் காகவும் வேண்டிக் கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். அதன்பின் அவர்களும் திருக்கோணமலை மேற்றிராணி ஆண் டவரவர்களும் எங்களை ஆசீர்வதித்து எங்கள் பிரயாணம் சுகமே நடந்தேறும்படி அந்தச் சிந்தாத்திரை மாதாவின் அடைக்கலத்தில் எங்களை ஒப்படைத்தார்கள். பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டது.

3-ம் தேதியாகிய சனியன்று பகல் ஒரு மணிக்கு திரு யாத்திரைக் கப்பல் "சாண்டிலி" என்பது சென்னையிலிருந்து 270 இந்திய பர்மீய யாத்திரிகளுடன் கொழும்பு துறை முகம் வந்து சேர்ந்தது. மாலை 4 மணிக்கு இலங்கை யாத் திரிகள் கூட்டம் கூட்டமாக பிரிவுபசாரங்களுக்கும், கை குலுக்குகளுக்கும், ஆரவாரங்களுக்கும் நடுவில் கப்பலில் ஏறினார்கள். ஏறக்குறைய இரவு 9 மணிக்கு கப்பல் கொழும்பு துறை முகத்தை விட்டது.

'கப்பலிலிருந்த திருயாத்திரிகள் தங்களுக்குச் சென்னை யில் நடந்த பிரிவுபசாரத்தைப்பற்றி எனக்கு அறி வித்ததை நான் கீழே தருகிறேன். சென்னையில் கப்பலேறு முன் சகலரும் அதிமேற்றிராசன ஆலயஞ் சென்று இதற் காகவே பெங்களூரிலிருந்து சென்னை வந்திருந்த 'பாப்பு வின் ஸ்தானாதிபதியாகிய மகா. வந். கியர்கெல்ஸ் ஆண்ட வரவர்களும் சென்னை அதிமேற்றிராணியாரும் ஆற்றிய அருமையான சொற்பொழிவுகளைக் கேட்டபின் அவர்கள் ஆசீரைப் பெற்றார்களாம். பின் பாடுபட்ட சுரூபம் முன்னே எடுத்துச் செல்ல எல்லோரும் வரிசையாக தேவ கீதங்களைப் பாடிக்கொண்டு பின்சென்று கப்பல் ஏறினார்களாம். கரை யில் பல்லாயிரம் ஜனங்கள் குழுமியிருக்க, குருக்கள் புடை சூழ, மகா. வந். கியர்கெல்ஸ் ஆண்டவரவர்கள் கப்பலையும் பிரயாணிகளையும் ஆசீர்வதிக்க இரவு சரியாய் 11-30 மணிக்கு செவிடுபடும்படியான பெரிய கரகோஷத்தினிடையே கப்பல் புறப்பட்டதாம்.


கப்பலில் தமிழ், சிங்களம், மலையாளம், கொங்கணம் முதலிய பல பாஷைகள் பேசுகிறவர்களும், பல நடை, உடை, பாவனை உள்ளவர்களும் இருந்தபோதிலும் ஒருவருக் கொருவர் யாதொரு வித்தியாசமும் பாராட்டாமல் ஒரே குடும்பத்தில் வாழும் சகோதரர்களைப்போல் நடந்துகொண்ட தானது மிகவும் பாராட்டத்தக்கது.

"சாண்டிவி" என்னும் கப்பல் மிகவும் பெரியது. கொஞ்சமும் அசைவில்லை. பெரிய மாளிகைகளில் வசிப்பது போலிருந்தது. சாப்பாடோ மிகவும் திருப்தி. கப்பலி லிருந்த 406 பிரயாணிகளில் 15 பேர் பதிதர், ஒருவர் இந்து, இருவர் புத்த மதஸ்தர், ஏனையோர் கத்தோலிக்கர். பிர யாணிகள் யாபேரும் பணக்காரர்களென்று எண்ணிக் கொள்ளவேண்டாம். பலர் தங்கள் காலமெல்லாம் சம்பா தித்து தேடிவைத்த சொற்பப் பணத்தைச் செலவழித்து வந்திருக்கிறார்கள். இன்னும் சிலர் அடுத்தவர்கள் உதவியை நாடி அப்பணத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்.

ஞான விஷயமாய் இதுவரை இவ்வளவு அநுகூலமான பிரயாணம் இருந்திருக்கவே முடியாது. எப்பொழுதும் திவ்விய நற்கருணை ஸ்தாபகம். காலையில் குறைந்தது 5 பூசைகளாவது காணலாம். பூசைக்குப்பின் சிறிது நேரம் தியானப் பிரசங்கமிருந்தது. இரவு 8½ மணிக்கு செபமாலையும், பிரசங்கமும், திவ்விய நற்கருணை ஆசிர்வாதமும் முறையே நடந்தன. இதனிடையே கூட்டம் கூட்டமாகப் பிரிந்து, சிலுவைப் பாதை, சூசையப்பர் வணக்கம், வியாகுலப் பிரசங்கம் வாசித்தல் முதலிய புண்ணியக் கிரியைகள் நடத்தப்பட்டன. இவ்விதமாக "சாண்டிலி" ஒரு மிதக்கும் கோவிலாகவே விளங்கியது.

4-ம் தேதி மாலையிலிருந்து அர்ச். சவேரியாரின் தவருத அநுகூலந்தரும் வரப்பிரசாத நவநாளை பொதுவில் செய்தோம். அவ்வமயம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் பிரசங்கம் செய்தார்கள். 8-ம் தேதி இரவு தூத்துக்குடி, சரி. வந். ரோச் ஆண்டவரவர்கள், "அர்ச். சவேரியாரும் நமது திவ்விய அன்னையும்" என்னும் விஷயத்தைப்பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பரிசுத்த பாப்பானவருக்கு ஜூபிலி காணிக்கையாக சமர்ப்பிக்க கோவையிலிருந்து கொண்டுவரப்பட்ட அர்ச். சவேரியாரின் திருச்சரீரத்தின் ஒரு சிறு பாகம் நவ நாட்களின்போது பீடத்தில் வைக்கப் பட்டிருந்தது. வெள்ளியால் செய்து நவரத்தினக் கற்கள் பதித்தும், கோவாவில் அர்ச்சியசிஷ்டவரின் சடலத்தை சேமித்திருக்கும் பேழையை ஒத்ததுமான ஒரு சிறு பெட்டியில் இத்திருப்பண்டம் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

நாங்கள் நிலத்தைப் பார்த்து 7 நாட்கள் ஆய்விட்டன. எப்பக்கம் திரும்பினாலும் ஒரே தண்ணீராக இருக்கிறது. இக்கடல் நீர் அதிகமிருப்பினும், அதன் உப்புத் தன்மையால், பிறர்க்கு பயனற்றதாக இருப்பது போலவே, பெருஞ்செல்வம் படைத்திருப்பவர்கள் உலோபிகளாக விருப்பின் அவர்களுடைய செல்வத்தால் யாதொரு பயனும் இல்லை என்னும் ஓர்



சங். லெதேல்லியார் சுவாமிகள்

பாடத்தை இச்சமுத்திரம் எங்களுக்கு கற்பிப்பது போலிருந்தது.

9-ம் தேதி காலையில் வடகிழக்கு ஆப்பிரிக்காவின் கரை தெரிந்தது. இது இத்தாலியருக்குச் சொந்தமான சோமாலிலாண்டின் கார்டிபியூ முனை. ஏறக்குறைய 40 மைல் தூரம் சமுத்திரத்தை யொட்டி மலைத் தொடர் இருக்கிறது. இந்த மலையில் புல்லேனும் இருக்கிறதாகக் காணவில்லை. தனிப் பாறையாகவே இருக்கிறது. ஜனங்களாவது மிருக ஜீவன்களாவது இருக்கமுடியுமென்று தெரியவில்லை. 7 நாட்களுக்குப் பின் நிலத்தைப் பார்த்தது எங்களெல்லோருக்கும் ஆனந்தமாயிருந்தது.

இன்று கப்பலில் ஓர் விசேஷ ஞாபகார்த்த சடங்கு நடந்தது. 1932-ம் வருடம் மே மாதம் 16-ம் தேதியன்று "ஜார்ஜ் பிலிப்பர்" என்ற பெரியதொரு பிரஞ்சுக் கப்பல் தீப்பற்றி 54 பேருடன் மூழ்கிப்போன இடத்தை நாங்கள் கடந்து செல்லவேண்டியதிருந்தது. இந்த இடம் கொழும்புக் கரையிலிருந்து சுமார் 2000 மைலுக்கப்பால் இருக்கிறது. இவ்விடத்திற்கு வரும் முன்னே இறந்துபோனவர்களுக்காக பெரிய துக்கப்பாட்டுப் பூசை நடந்தது. இந்தச் சடங்கை நிறைவேற்றினவர் சென்னை அதிமேற்றிராணியார். ஆங்கிலேயத்திலும் பிரஞ்சு பாஷையிலும் சங். லெதெல்லியார் சுவாமிகள், "மரணத்தின் எதிர்பாராத நேரமும் நாம் படைத்தோன் முன் ஏக எப்பொழுதும் தயாராயிருத்தலும்" என்பதைப்பற்றி கல்லும் கரையுமாறு ஓர் உபந்நியாசம் செய்தார்கள். 9 மணிக்கு அக்கப்பல் சேதமான இடத்தில் எங்களுடைய கப்பல் நின்றது. கப்பலிலுள்ள பிரயாணிகளும் கப்பல் வேலைக்காரர்களும் கறுப்பு உடைகள் தரித்து மேல் தட்டில் கூடினார்கள். மேல் தட்டில் ஒரு பாகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டு புஷ்பங்களாலான சிலுவைகளால் நிரப்பப்பட்டிருந்தது. வெகு உருக்கமான பிரசங்கங்களும், செபங்களும், துக்கப் பாடல்களும், மரித்தோர்களுக்காக அடக்கச் சடங்குகளும் நடந்த பின்னர் குழியில் மண்

போடுகிற மேரையாய் பூச்சிலுவைகளை கடலில் எறிந்தார்கள். இச்சடங்குகள் வெகு பக்தியாயும் உருக்கமாயுமிருந்ததால், பலர் மனமிளகி மாலை மாலையாய் கண்ணீர் சொரிந்தார்கள். கடினமான அனேகரின் இருதயங்கள் இளகியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. சேசுவின் திரு இருதயத்திற்குத் தோத்திரம் உண்டாவதாக. திருயாத்திரையின் முதற் பலனை நாங்கள் பெற்றுவிட்டதாகவே சொல்லவேண்டும்.

---

## அத்தியாயம் 2.

### ஜூப்பிட்டி — கெயுரோ

இதுவரை சீதோஷ்ண ஸ்திதியில் ஒரு மாற்றமுமில்லை. நம் சொந்த ஊரிலும் வீட்டிலும் இருப்பது போலவே இருந்தது. கடலில் கொந்தளிப்பு ஒன்றுமில்லை. ஒருவருக்கும் கடற்காய்ச்சலுமில்லை.

10-ம் தேதி ஜூப்பிட்டி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டது. இது பிரஞ்சுக்காரர்களுக்கு ஒரு முக்கிய துறைமுகம். இரவு 7 மணிக்கு கப்பல் இங்கு வந்து சேர்ந்தது. $8\frac{1}{2}$ மணிக்கு நீராவிப் படகுகளில் இறங்கி கரைக்குப்போய்ப் பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கலானோம். இது பதினையாயிரம் பேர்களடங்கிய ஒரு சிறிய பட்டணம். கட்டிடங்கள் வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பட்டணத்தை அடுத்திருப்பது அபிசினியா தேசம். அத் தேசத்திற்கும் ஏற்றுமதி இறக்குமதி ஸ்தலம் இச் ஜூப்பிட்டிதான். இங்கே ஜோவான் தெ ஆர்ஸ் என்னும் அர்ச்சியசிஷ்டவர் பேரால் ஒரு சிறு அழகான கோவில் இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து விட்டு 10 மணிக்கு கப்பல்போய்ச் சேர்ந்தோம். நடு நிசியில் கப்பல் பிரயாணப்பட்டது.

11-ம் தேதியன்று காலை 6-மணிக்கு கப்பல் யந்திரத்தில் ஒரு சிறு குற்றம் ஏற்பட்டதால், மணிக்கு 13மைல் வேகத்தில்

போய்க்கொண்டிருந்த கப்பல் மணிக்கு 7 மைல் வேகத்தில் போயிற்று. அச்சமையம் கப்பல் 900 மைல் நீளமும் 120 மைல் அகலமுமுள்ள செங்கடலில் பிரவேசித்தது. இந்த வேகத்தில் போனால் இரண்டு அல்லது மூன்று நாட்கள் பிந்திப்போகுமென்பதையும், முன் ஏற்பாட்டின்படி எல்லா இடங்களையும் பார்க்க முடியாதென்பதையும், செங்கடல் உஷ்ணத்தையும் நினைத்து பிரயாணிகள் மிக்க கவலையுற்றார்கள். அன்று மதியம் சங். லெதெல்லியார்சுவாமிகள் இக்கஷ்டங்களையெல்லாம் நீக்குவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு யென்றும் அந்த நல்ல வழி நம்பிக்கையான செபம் தானென்றும் பிரசங்கித்தார்கள். மனிதன் இயல்பாகவே தனக்கு கஷ்ட நஷ்டங்கள் வரும்பொழுது கடவுளைத் தேடி அண்டிப் போகும் வழக்கமுடையவனாதலால் கப்பலில் எல்லோரும் இதுவரைக்கும் செபங்கள் செய்தது போலில்லாமல் அன்று விசேஷவிதமாக செபித்தார்கள்.

13-ம் தேதி மாலை அர்ச். சவேரியாரின் நவநாள் முடிவு பெற்றது. அர்ச்சியசிஷ்டவருடைய திருப்பண்டம் எல்லாருக்கும் முத்தி செய்யக் கொடுக்கப்பட்டது. கப்பல் எங்கும் தங்காமல் கூடிய சீக்கிரம் பழய வேகத்தில் போக ஒரு விசேஷ செபம் செய்தோம். என்னே செபத்தின் வல்லமை! எங்கள் வேண்டுகோள் கேட்கப்பட்டது. யேசுவின் நேச இருதயத்திற்குத் தோத்திரம். யந்திரத்தில் ஏற்பட்ட கோளாறை திருத்தமுடியாவிட்டாலும் ஆண்டவரின் விசேஷ இரக்கத்தால் கப்பல் மணிக்கு 11 மைல் வேகத்தில் போக ஆரம்பித்தது.

13, 14-ம் தேதிகளில் கடலில் அலைகள் கொஞ்சம் அதிகமாய் அடித்ததால் சில பிரயாணிகள் முதன் முதலாக சற்றே கஷ்டப்பட்டார்கள். 15-ம் தேதி கடலில் அமைதி யேற்பட்டது. இன்னும் அன்பனின் இரக்கத்தை யென்னென்றுரைப்பது. எப்பொழுதும் உஷ்ணமாயிருக்கும் செங்கடல் அன்று, எங்களுக்கு யாதொரு வித்தியாசத்தையும் காட்டாது குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது.

சூவெஸ் கால்வாய்க்குச் செல்லும் வழியில் இரண்டு பக்கமும் மலைத் தொடர்ச்சியாகவே இருக்கிறது. கீழ் பக்கத்து மலைத்தொடரில் மோயீசனுக்கு பத்துக்கற்பனை பலகை கொடுக்கப்பட்ட சீனாய் மலை தென்பட்டது. இந்த மலையைக் கடந்து செல்லுங்கால் கப்பல் மேல்தட்டிலிருந்த பிரயாணிகள் முழங்கால்படியிட்டு செபித்தார்கள். சூவெஸ் கால்வாயின் பக்கத்தில் மோயீசன் பாரவோன் அரசனிடத்திலிருந்து இஸ்ரவேலரை மீட்டுக்கொண்டு போகும்பொழுது செங்கடலைக் கடந்த பாகத்தையும் பார்வையிட்டோம்.

16-ம் தேதி காலை $1\frac{1}{2}$ மணிக்கு கப்பல் சூவெஸ் வந்து நங்கூரம் இறக்கியது. உடனே நாங்கள் படுக்கையிலிருந்து யெழுந்து விட்டோம். 2 மணி சுமாருக்கு "சூவெஸ்" படைவீரரும், சுகாதார உத்தியோகஸ்தர்களும் வந்து எங்களெல்லோரையும் பார்வையிட்டார்கள். $4\frac{1}{2}$-மணிக்கு காலை போஜனம் முடித்ததும் படகுகளில் ஏறி கரை போய்ச் சேர்ந்தோம். 158 மைலுக்கப்பாலுள்ள கெயுரோவுக்குச் செல்ல பிரயாணிகளுக்கென்று ரெயில் தயாராய் நின்றது. எங்களில் சுமார் 250 பேர் ரெயிலில் ஏறி புறப்பட்டோம். கெயுரோ எகிப்தின் தலைநகர். இதற்கு சகாரா பாலைவனத்தின் வழியாகச் செல்லவேண்டும். உஷ்ணத்தின் அகோரத்தினாலும் காற்று மணலை வாரி இறைப்பதாலும் ரெயிலின் கண்ணாடிக் கதவுகளை அடைத்துக்கொண்டோம். ஒரே மணற் காடாயிருந்தாலும் ஆங்காங்கு சிறு குன்றுகளும் களிமண் குடிசைகளும் ஒன்றிரண்டு ஈச்சமரங்களும் தென்பட்டன. ஒட்டகங்களிலும் கோவேறு கழுதைகளிலும் சவாரி செய்யும் அரேபியர்களை இங்கும் அங்கும் கண்டோம். முற்காலங்களில் இந்த இடத்தில் தண்ணீரையே பார்க்கமுடியாது. இப்பொழுது நீல் நதியிலிருந்து கால்வாய் திறந்து இடைக்கிடையே நிலங்கள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இந்த வனாந்தரங்களின் வழியாகத்தான் திருக்குடும்பம் அக்காலத்தில் எகிப்துநாடு போய்ச்

சேர்ந்தார்களென்றால் அன்னவர்கள் பட்ட கஷ்டத்தை நம்மால் யூகிக்கமுடியுமா ?


5 மணிநேரம் கஷ்டமான ரெயில் பிரயாணத்தின் பின், பகல் 10 மணிக்கு கேயுரோ போய்ச் சேர்ந்தோம். ரெயில்வே ஸ்டேஷனில் 6 பேர் சாவகாசமாய் பிரயாணம் செய்யக்கூடிய 41 மோட்டார்கள் தயாராயிருந்தன. அவைகளில் ஏறி மாட்டரிக் (Matarich) என்ற சிறு கிராமத்துக்கு போனோம். கொடுங்கோல் மன்னனாகிய ஏரோதனுக்குப் பயந்து முன் பின் தெரியாத அந்நியர்கள் நடுவில் ஏழு வருஷம் திருக்குடும்பம் காலந் தள்ளிய இடமிது. பாலனைக் குளிப்பாட்டிய கிணறு ஒரு தோட்டத்திற்குள் இருக்கிறது. இந்த ஜில்லாவிலேயே நல்ல தண்ணீர்க்கிணறு இது ஒன்றுதான். "மரியாயின் புதுமை ஊற்று" என்றழைக்கப்படும் இக் கிணற்றில் ஜலம் மொண்டு சாப்பிட்டோம். இந்த குக்கிராமத்தில் பரலோக அரசன் பரம ஏழைகளான சூசைமரி யென்னும் பெற்றோர்களுடன் அட்ட தரித்திரத்தில் ஜீவித்து வந்தார்.

ஓ தரித்திரமே! இவ்வுலகில் சிலுவைகளை அனுபவியாது மோட்ச ராச்சியத்துக்குப் போகமுடியாதென்று ஞாபகப்படுத்த எங்கள் நடுவில் எப்பொழுதும் உலாவிக்கொண்டிருக்கும் நீ மெய்யாகவே எங்களுக்கு பெரிய உதவியாயிருக்கிறாய். சுகமும் துக்கமும் சர்வேசுரனாலேயே நமக்கு அனுப்பப்படுவதால் ஒருவன் தன்னை வந்தடைந்த தரித்திரத்தைப் பற்றி வருந்துதல் கூடாது. அதற்கு மாறாக அதையன்புடன் யேற்று, "அவர் சித்தம் எனது பாக்கியம்" என்று இருத்தலே அறிவுடையோர் செயலாகும். பொருள் உள்ளவனும் திருப்தியற்றிருப்பானாயின் தரித்திரனே யாவான். பெற்றதைக்கொண்டு மனமுவந்து மனதைத் திருப்தி செய்து கொள்வோருக்கு தரித்திரம் ஏது?

அதிக மனவருத்தத்துடன் இந்த புனிதமான இடத்தைவிட்டு நகர்ந்தோம். ஒரு விடுதியில் சாப்பிட்டு

விட்டு 2-மணிக்கு உலகத்தில் 9 அதிசயங்களில் ஒன்றாகிய கூர்முகட்டுக் கூடங்களைப் (Pyramids) பார்க்கச் சென்றோம். மலையடிவாரம் போனதும் மோட்டார்களை விட்டு இறங்கி ஒட்டகங்களிலேயும், கோவேறு கழுதைகளிலேயும் ஏறிக்கொண்டு போனோம். கிறிஸ்து பிறப்பதற்கு முன் சுமார் 3500 வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட செயப்ஸ் (Cheops), செப்ரான் (Chephran), மைக்கெரினோஸ் (Mykerinos) முதலிய கூடங்களைப் பார்த்தோம். அதில் செயப்ஸ் 20 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ள சுத்தமான பாராங்கற்களால் 440 அடி உயரத்தில் சுமார் ஒரு மைல் சுற்றளவில் கட்டப்பட்டிருக்கிறது. அதன் பக்கத்தில் ஒரே கல்லில் கொத்தப்பட்டு 60 அடி உயரத்தில் 170 அடி நீளத்தில் மனிதனுடைய தலையையும் சிங்கத்தின் உடலையும் கொண்டதுமாய் "ஸ்பிங்ஷ்" என்னும் கூடம் (Sphinx) நின்று கொண்டிருக்கிறது. வெயிலின் அகோரத்தால் நாங்கள் அங்கிருந்து சீக்கிரம் கெயுரோவுக்குத் திரும்பிவிட்டோம்.

கெயுரோ என்னும் இப்பட்டணம் முக்காலத்தில் எலியாப்போலே என்றழைக்கப்பட்டிருந்தது. இதுதான் பாரவோன் அரசனால் ஜோசப் என்பவருடைய மனைவி அர்சனாத்துக்கு கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது ஒரு அஞ்ஞானநகரமாயிருந்தது. திருக்குடும்பம் இந்தப் பக்கமாகப் போகும் பொழுது சிலைகள் எல்லாம் கீழே விழுந்து உடைந்துபோயின. உடைந்த விக்கிரகங்களையும் அழிந்த நகரத்தையும் பார்த்தோம். எல்லாம் அழிந்து பொத்தை பொத்தையாய்க் கிடக்கின்றன. இப்பட்டணத்தையொட்டி உலகத்திலேயே பெரிய நதியாகிய நீல்நதி பாய்கிறது. இதன் பக்கத்தில் திருக்குடும்பம் சென்ற பாதையின் ஞாபகார்த்தமாக நாட்டப்பட்ட ஒரு கல்தூண் இருக்கிறது. இது சுமார் 80 அடி உயரமிருக்கும். ஒரே கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. எபிரேய பாஷையில் அநேக வாக்கியங்கள் இக் கல்தூணில் செதுக்கப்பட்டிருக்கின்றன.



NAZARETH — Church of the Annunciation

மங்கள வார்த்தை கோயிலின் உட்புறம் — நசரேத்.

பின் உலகத்தின் மிகவும் முக்கியமான கெயுரோ காட்சி சாலையைப் பார்த்தோம். பாலஸ்தீனா நாடு முற்றிலுமிருந்து பூர்வீக அபூர்வ பற்பல விநோத சாமான்கள் இங்கு வைக்கப் பட்டிருக்கின்றன.

இன்னும் அறிவுவிளக்கமும் மனதுக்கின்பமுந்தரும் பல இடங்களையும் பார்த்துவிட்டு சாயங்காலம் 6 மணி ரெயிலில் புறப்பட்டு போர்ட் செயிட் துறைமுகம் போய்ச் சேர்ந்தோம். மற்றப் பிரயாணிகளுடன் "சாண்டிலி" சூவெஸ் கால்வாய் வழியாக போர்ட் செயிட் வந்து எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. நடு நிசியில் கப்பலில் ஏறி இளைப்பாறினோம்.

17-ம் தேதி காலையில் கப்பலை விட்டிறங்கி போர்ட் செயிட் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தோம். அழகிய பட்டணம். கெயுரோவுக்கு இரண்டாவதாகச் சொல்லலாம். கெயுரோவைப்போல் அழகான பட்டணத்தை இதுவரை நான் பார்த்ததேயில்லை.

---

## அத்தியாயம் 3.

### பாலஸ்தீனா நாடு — நசரேத்

17-ம் தேதி காலை 9 மணிக்கு கப்பல் புறப்பட்டு 18-ம் தேதி காலை 6 மணிக்கு ஹேய்பா என்னும் துறைமுகத்தைச் சேர்ந்தது. இப் பட்டணம் ஒரு மலைச்சார்வில் இருக்கிறது. கட்டிடங்கள் ஒன்றின் மேல் ஒன்றாய் இருப்பதால் பார்வைக்கு வெகு நேர்த்தியா யிருக்கின்றன. $7\frac{1}{2}$ மணிக்கு எல்லாரும் கரையில் இறங்கி எங்களுக்காக காத்துக்கொண்டிருந்த மோட்டார் ரதங்களின் பக்கலில் வரிசையாக நின்றோம்.

நாங்கள் எங்கே நிற்கிறோமென்று நினைக்கிறீர்கள்? ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் ஆண்டவர்

வாக்குத்தத்தம் செய்தருளிய பூமியிலல்லோ. தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தேசமன்றோ இது. இதுவே பிதாப் பிதாக்களுந் தீர்க்கதரிசிகளும் வாசம் பண்ணிய ஸ்தலம். இதுவே நமதன்பு நிறை கர்த்தர் 33 வருஷகாலம் சரீரத்தோடுலாவிச் சஞ்சரித்ததால் அர்ச்சிக்கப்பட்ட விடம். இன்னமும் சொல்லவேண்டுமாயின் சத்தியவேத ஜனன நாடிதுவே. இவ்வித கீர்த்தி பிரதாபமடைந்த இவ்வரிய பரிசுத்த பூமியாகிய பாலஸ்தீனில் எங்கள் கால்களை வைத்திருக்கிறோம். ஆ! எங்கள் ஆனந்தத்துக்கு ஓர் அளவில்லாதிருந்தது.

எங்கள் தலைவர் சங். லெதெல்லியார் சுவாமிகள் ஓர் சைக்கினை கொடுத்தார்கள். உடனே 406 பிரயாணிகளும் முழங்கால்படியிட்டு அப்பரிசுத்த நிலத்தை முத்திசெய்து 1 பர. 1 பிரி. 1 திரி. வேண்டிக்கொண்டு "இரக்கத்தின் ஆண்டவரே" என்னும் கீதத்தை பாடியபின் எழுந்து மோட்டார்களில் ஏறினோம். எங்களைச் சுற்றி நின்ற பலஸ்தீனர்கள் பிரமிப்புடனும் ஆச்சரியத்துடனும் எங்கள் செய்கைகளை பார்த்துக்கொண்டிருந்தார்கள். பரிசுத்த பூமியில் நாங்கள் மோட்டார்களில் போகும்போதெல்லாம் செபமாலை செபித்துக்கொண்டும் வேதப் பாடல்களைப் பாடிக்கொண்டும் சென்றோம். 20 மைலுக்கப்பாலுள்ள நசரேத்தில் மோட்டார்கள் வந்து நின்றன.

நேராக தேவமாதாவின் மங்கள வார்த்தைக் கோயிலை அடைந்தோம். சேர்த்தியான பளிங்குக் கல்லினால் செய்யப்பட்ட நடுப் பீடத்தில் பூசைகண்டு திவ்விய நற்கருணை உட்கொண்டபின் பீடத்துக்குப்பின்னாலுள்ள 13 படிகளின் வழியாக கீழே இறங்கினோம். கன்னிமரியாயி அக்காலத்தில் குடியிருந்த வீடு இப்பொழுது இத்தாலியாவிலுள்ள லொரேத்தா என்ற ஊருக்கு கொண்டு போகப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வீட்டின் ஒரு பாகமாயிருந்த கற்கெபி இன்னும் இங்கிருக்கிறது. பரிசுத்த கன்னிகை தன் சிறிய வீட்டின் ஒரு அறையில் செபித்துக் கொண்டிருக்கும்



மரியாயின் புதுமை ஊற்று — நசரேத்.

பொழுது கபிரியேல் சம்மனசு மங்கள வார்த்தை சொன்ன இடம் ஒரு வெள்ளி நட்சத்திரத்தால் குறிக்கப்பட்டிருக்கிறது. பீடத்தினடியில் "இங்கேதான் வார்த்தையானது மாம்ஸமாகப் பண்ணப்பட்டது" என்று தங்க எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கிறது. நடுங்கும் உதடுகளோடு அந்த நட்சத்திரத்தை முத்தி செய்தோம். வலது பக்கத்தில் தேவதாயாருடையவும் பாலனுடையவும் பீடம் இருக்கிறது. இடது பக்கத்தில் அர்ச். சூசையப்பர் பீடம் இருக்கிறது. கோவிலைவிட்டு வெளியே வந்து சற்று தூரத்திலுள்ள அர்ச். சூசையப்பர் வீடு அல்லது தச்சுக்கூடமென்று சொல்லப்படும் கோவிலை யடைந்தோம். இவ்வூரில் 18 வருஷ காலமாய் திருக்குடும்பம் வசித்த வீடிருந்த விடத்தில் இக்கோவில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு செபித்தபின் மோட்டார்களில் ஏறி ஜெருசலேமுக்குச் சென்றோம். வழியில் நசரேத்தூருக்குப் பக்கத்தில் அர்ச். தேவமாதா தண்ணீர் எடுத்த ஒரு கிணறு இருக்கிறது. சற்று தூரத்தில் கிறிஸ்துவானவர் முதல் புதுமை செய்த கானூவூர்க் கலியாண மண்டபம் இருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கும் கோவிலைப் பார்த்தோம்.

பின் இங்கிருந்து நாங்கள் திபேரியா என்னும் பெரிய ஏரியைப் பார்க்கச் சென்றோம். "கலிலேயாவின் கடல்" என்றழைக்கப்படும் இந்த ஏரியில்தான் ஆண்டவர் தரையின் மேல் நடக்கிறாப்போல தண்ணீரின் மேல் நடந்தார். இதன் கரையில்தான் நம் நல்ல யேசு 5 ரொட்டியையும் 2 மச்சத்தையும் கொண்டு 5000 பேரை அற்புதமாகப் போஷித்தார். இங்கு சற்று முழங்காலில் நின்று செபித்தபின் யேசுவின் பாதங்கள் பட்ட ஏரியின் தண்ணீரை பானம் பண்ணினோம். பின் மோட்டார்களில் ஏறி ஜெருசலேமுக்குச் சென்றோம். ஹெய்பா முதல் பெத்லேகம்வரை பாதைகளெல்லாம் மலை வழியாகத் தானிருக்கிறது. ஒரு மைல் தூரத்துக்காவது வளைவில்லாத நேரான பாதை கிடையாது. வேறு எங்கேயாவது இவ்வித ரஸ்தாக்கள் இருக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை.

மாலை 6½ மணிக்கு ஜெருசலேம் வந்து சேர்ந்தோம். பிரான்சிஸ்கன் சபையாரால் நடத்தப்படும் நோத்தர்தோம் (Notre Dame) காசநோவா (Casa Nova) என்னும் இடங்களில் நாங்கள் தங்கினோம். புண்ணிய பூமியின் எல்லா ஸ்தலங்களிலும் பிரான்சிஸ்கன் சபையாரால் நடத்தப்படும் தரும சாலைகளிருக்கின்றன. பிரமாண்டமான மாளிகை போன்ற இக் கட்டிடங்களில் திருயாத்திரையாய்போகிறவர்கட்கு தங்குவதற்கு இடம் இனமாகக் கொடுக்கிறார்கள். அங்குள்ள குருக்கள் யாதொரு பிரதி பலனையும் எதிர்பாராமல் திருயாத்திரிகளை நன்றாய் விசாரித்து சகல உதவியும் செய்கிறார்கள். எங்களில் ஒவ்வொருவருக்கும் தனி அறை, கட்டில், மெத்தை, போர்வை முதலிய சகல சாமான்களும் தயாராயிருந்தன. இரவு சாப்பிட்டதும் எல்லோரும் களையாற சீக்கிரம் படுக்கைக்குப் போய்விட்டோம்.

---

## அத்தியாயம் 4.

### பாலஸ்தீனா நாடு தொடர்ச்சி

### ஜெருசலேம் — பெத்லேகம் — கர்மேல் மலை

பாலஸ்தீனா நாடு ஆங்கிலேயர்கள் வசம் இருக்கிறது. மத விஷயங்களில் பிரஜைகள் யாதொரு இடைஞ்சலும் படாதபடி அன்னவர் பார்த்துக் கொள்கின்றனர். ஒரேயிடத்தில் பல மதஸ்தர்கள் ஆராதிக்கவேண்டுமென்றால் அதற்கு சுதந்திரமும் கொடுத்து ஒவ்வொருவரும் ஆராதிக்க வேண்டிய நேரமும் குறிப்பிட்டிருக்கின்றனர். சில திருஸ்தலங்கள் கிரேக்க கத்தோலிக்க சபையாரிடம் இருக்கின்றன. இவர்கள் நம் திருச்சபைக்கு புறம்பானவர்கள். இச் சபையின் குருக்கள் கலியாண அந்தஸ்தில் இருப்பவர்களாதலால் தங்கள் வசம் இருக்கும் ஸ்தலங்களில் பணம் சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். நம் கத்தோலிக்க குருப்பிரசாதிகளுக்கும் இவர்களுக்குமுள்ள

பாரதூரமான வித்தியாசத்தை இங்கு காணலாம். இன்னும் அநேக இடங்கள் துருக்கர் வசம் இருக்கின்றன. இவைகளைப் பார்ப்பதற்கும் பணம் கொடுத்தாகவேண்டும். திருக்கல்லறைக் கோவிலானது ரோமன் கத்தோலிக்கர், கிரேக்கர், ஆர்மினியர், துருக்கர் முதலிய நால்வருக்கும் பொது ஸ்தலம். இந்நான்கு வகையாரும் முறையே 6 மணி நேரத்திற்கு ஒருவராக ஸ்தலத்தைக் காவல் புரிந்து கொள்கின்றனர்.

19-ம் தேதி காலை 5 மணிக்கு எழுந்திருந்து கோவிலுக்குப் போனோம். கல்வாரி மலையையும் திருக்கல்லறையையும் இன்னும் திருப்பாடுகளின் பல பரிசுத்த இடங்களையும் தனக்குள்ளாக்கிக்கொண்ட இப்பிரமாண்டமான கோயிலின் அமைப்பை என்னென்று சொல்வது. இப்பெரிய கோவிலுக்கு ஒரேயொரு வாசல்தானிருக்கிறது. அன்பு நிறை அமலன் தன் அரிய உயிரை அடியார்களுக்கு அளித்த விடத்தையும், அவருடைய திருச்சடலம் அடக்கம் பண்ணப்பட்ட விடத்தையும், அமலத்தாய் வியாகுல வாற்களால் ஊடுருவப்பட்டு கண்ணீர் சொரிந்த விடத்தையும் பார்க்கப் போகிறோமென்ற எண்ணத்தால் எங்கள் மனம் பதைபதைக்க, தேகமெல்லாம் நடுங்க, ஓர் விதமான திகிலுடன் கோயிலுக்குள் புகுந்தோம்.

சுமார் 20 அடி தூரம் சென்றதும் அங்கு தரை மட்டத்திற்கு ஒரு அடி உயரத்திலுள்ள ஒரு பீடத்தில் 10 அடி நீளமும் 4 அடி அகலமுமுள்ள ஒரு செங்நிறக்கல் பதிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்லின்மேல்தான் சூசை, நிக்கதோமென்ற இருவரும் ஆண்டவரின் திருச்சடலத்தைக் கிடத்தி பரிமள வர்க்கங்களுடனே பரிவட்டத்தால் சுற்றிக் கட்டி அடக்கத்துக்கு ஆயத்தப்படுத்தினார்கள். நாங்கள் இப்பரிசுத்த கல்லை முத்திசெய்த பின் இடது பக்கமாக சுமார் 30 அடி சென்றோம். ஒரு பெரிய தேர்போல் ஜோடிக்கப்பட்ட அழகான கட்டிடத்தை அடைந்தோம். இக்கட்டிடம்

24 அடி நீளமும், 15 அடி அகலமும், 15 அடி உயரமும்முள் ளது. இதுதான் திருக்கல்லறையின் குகை. சுமார் 12 அடி உயரமும் 1½ அடி சுற்றளவுமுள்ள 6 பெரிய மெழுகுதிரிகள் எரிந்து கொண்டிருந்தன. இக்கட்டிடத்திற்குள் நுழைந்ததும் சுமார் 60 பேர் நிற்கக்கூடிய ஓர் அறையிருக்கிறது. இதில் மரியமதலேனளுக்கு ஆண்டவர் உயிர்த்ததைப்பற்றி உரைத்த தேவதூதன் உட்கார்ந்திருந்த கல்லின் ஒரு பாகம் இருக்கிறது. இந்த அறையிலிருந்து ஒவ்வொருவராய் குனிந்து போகக்கூடிய ஒரு சிறு பாதையின் வழியாக 7 அடி நீளமும் 5 அடி அகலமுமுள்ள மற்ருெரு அறைக்குச் சென்ருேம். அங்கேதான் மூவ்வுலக அரசனின் திருச் சரீரம மூன்று நாட்களாய் அடைப்பட்டிருந்த திருக்கல்லறை இருக்கிறது. பாறையிலேயே வெட்டப்பட்டிருக்கும் இக்கல்லறை ஒரு பளிங்கு கல்லால் மூடப்பட்டிருக்கிறது. அதை யெல்லோரும் பய பக்தியுடன் முத்தி செய்தோம். இத்திருக்கல்லறையில் கோட்டாற்று மேற்றிராணியாரவர்களுடைய பூசை கண்டு நற்கருணை அருந்தி மனஸ்தாபக் கண்ணீருடன் திரும்பினேம்.

இங்கிருந்து அதே கோவிலுக்குள் தலைவாசலிலிருந்து வலது பக்கமாக 35 அடி தூரத்திலிருக்கும் ஒரு படிக்கட்டுக்குச் சென்ருேம். 20 படிகளின் வழியாக கீழேயிறங்கி 30 அடி நீளமும் 20 அடி அகலமுமுள்ள கல்வாரிமலைக் கோவிலை யடைந்தோம். அங்கு கிழ்த் திசையில் மூன்று பீடங்களிருக்கின்றன. சேசுநாதரை சிலுவையில் கிடத்தி ஆணியறைந்த விடத்தில் ஒரு சிலுவைப் பீடமும், தேவதாய் சிலுவையடியில் நின்ற இடத்தில் வியாகுல மாதா பீடமும், சேசுநாதர் தமது திவ்விய பலியை நிறைவேற்றின இடத்தில் பெரிய பீடமுமிருக்கின்றன. இப்பிரதான பீடம் திருச்சிலுவை நாட்டப்பட்ட குழியின்மேல் பளிங்கு கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. அக்குழியை நாங்களெல்லோரும் பய பக்தியுடன் சாஷ்டாங்க தெண்டனிட்டு முத்தி செய்தோம். அச்சமயம் இருதயம் பதைபதைத்து இளகிற்று.


அந்த இடமும் அதைச் சுற்றியுள்ளவைகளும் கடினமான கல் இருதயத்தையும் கரையச் செய்யும் வகையாயிருக்கின்றன. இப்பீடங்களில் திவ்விய பூசைகள் கண்டோம். நடுப் பீடம் கிரேக்கருக்குச் சொந்தமாயும் மற்ற பீடங்கள் ரோமன் கத்தோலிக்கருக்கு சொந்தமாயுமிருக்கின்றன. பூசை, செபங்கள் முதலியவைகளுக்கு ஒவ்வொரு சபையாருக்கும் பிரத்தியேகமான நேரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் எந்த நேரத்திலும் எவரும் போகலாம். குறிக்கப்பட்ட நேரங்களைத் தவிர, மற்ற நேரங்களில் சுத்தமாய்ச் செபிக்கக்கூடாது. இக்கோயிலை பல சபையாரும் உபயோகித்து வருவதால் இடங்கள் சுத்தமாயில்லை. பல மதஸ்தரும் தாராளமாய் போய்வரும் ஸ்தலமாதலால், சற்று ஆசாரக் குறைவாகவே இருக்கிறது. இருந்தாலும் இங்குள்ள ஒவ்வொரு பரிசுத்த ஸ்தலமும் லக்ஷக்கணக்கான திருயாத்திரைக்காரரின் கண்ணீர்களால் கழுவப்பட்டும் முத்தி செய்யப்பட்டும் வருவதல்லாமலும் இன்னும் பல்லாயிர ஜனங்களால் முத்திசெய்யப்படும் என்ற ஒரு ஆறுதல் மட்டும் நமக்கிருக்கிறது. இங்கு உபயோகிக்கப்படும் சாமான்களெல்லாம் மிகவும் விலையுயர்ந்தவை. மிக்க புராதன பித்தளை வேலைப்பாடுகளுள்ள எண்ணெய் விளக்குகள் ஆயிரக்கணக்காய் தொங்குகின்றன. பீடங்களுக்கு நடுவிலுள்ள பாறையில் 6 அங்குல அகலத்தில் ஒரு கீறல் அடிவரைக்கும் இருக்கின்றது. கிறிஸ்துநாதர் உயிர்விட்ட சமையத்தில் கற்பாறைகள் பிளந்தனவன்றே, அக்கற்பாறைகளில் இது ஒன்று.

இந்தக் கல்வாரி மலைக்கோவிலிலிருந்து 29 படிகள் கீழேயிறங்கினுல் அர்ச். எலேனுளின் பீடமிருக்கிறது. அதற்கு பக்கத்தில் ஆண்டவரை கட்டி கசைகளாலடித்த கற்றூணின் ஒரு பாகமிருக்கிறது. குருதி வெள்ளமாயோட குரூரமாய்க் கட்டி அடித்த குற்றவாளிகளாகிய நாங்களும் அத்தூணை முத்திசெய்தோம். திருச்சிலுவை, முள்முடி, ஆணி முதலிய திருப்பண்டங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு

இன்னும் 15 படிகளின் வழியாக கீழே யிறங்கவேண்டும். மறுபடியும் படிகளில் ஏறி திருக்கல்லறைக் கோவிலுக்கு வந்தோம். நான் மேலே சொல்லிவந்த இத்தனை ஸ்தலங்களும் போக, இன்னும் இக்தக் கோவிலில் பிறமதஸ்தருக்குச் சொந்தமான அநேக பீடங்கள் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு நோத்தர் தோமுக்கு 9-30 மணிக்குத் திரும்பினோம்.

காலைச் சாப்பாட்டுக்குப்பின் பழைய ஜெருசலேமைச் சுற்றிப் பார்க்க கால் நடையாகச் சென்றோம். வண்டி போகக்கூடிய நல்ல வீதிகள் கிடையா. கரடு முரடான செங்கல்லால் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. பாதையின் அகலமோ 10 அடிக்கு மேலில்லை. தெருக்கள் அநேக வளைவுள்ளனவாக இருக்கின்றன. இவ்வூரார் இத்தெருக்களில் கழுதைகளின்மேல் ஏறிச் செல்கிறார்கள்.

நாங்கள் கடைத் தெரு வழியாகப்போய் இடிந்து கிடக்கும் சாலமோன் கட்டிய தேவாலயத்தைப் பார்த்தோம். அது இப்பொழுது ஹாராம் (Haram) என்று முகம்மதியரால் அழைக்கப்படுகிறது. இந்த இடத்திற்கு எட்டு வாசல்கள் உள்ளன. அவைகளிற் சில மிக அழகானவை. அதிலுள்ள முக்கியமான கட்டிடங்கள் ஓமர், எல்ஆஸ்கா என்ற இரண்டு பள்ளிவாசல்கள். கீழ்ப்புறத்துச் சுவரில் நமதிரக்ஷகர் குருத்து ஞாயிறன்று கழுதையின் மேல் ஏறிச்சென்ற பிரபலியமான தங்கவாசலிருக்கிறது. கிறிஸ்துவர்கள் மறுபடியும் ஜெருசலேமை ஜெயித்துக்கொள்ளும்போது அவர்கள் அந்தப் பொன் வாசல் வழியாகவே உள்ளே பிரவேசிப்பார்களென்ற முஸ்லீம்களுடைய தீர்க்கதரிசனம் ஒன்று இருக்கின்றமையால், அப்படிச் சம்பவியாதபடி அந்த வாசலை கற்சுவராலேயே அடைத்துவிட்டார்கள். ஹாராம் சுற்று மதில்களுக்கு வெளியே சாலமோனின் பூர்வ ஆலயத்தினுடைய சுவர் ஒன்றிருக்கிறது. இச்சுவரின் பக்கத்தில் நின்று யூதர்கள் அழுது ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இடம் தான் யூதர்களுடைய "பிரலாப ஸ்தலம்" (Wailing Wall)




யூதர்களின் பிரலாப ஸ்தலம் — ஜெருசலேம்

எனப்படும். கர்த்தர் எப்போது பிறந்து தங்கள் தேசத்தை முன்னிருந்த ஸ்திதிக்குக் கொண்டுவருவாரோவென்று அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களாம். ஐயோ, பாவம்! இவர்கள் கிறிஸ்துநாதரை அங்கீகரித்து சத்திய திருச்சபையில் சேரும் காலம் எப்பொழுது வரும்? இப்பிரலாப ஸ்தலத்துக்குப் பக்கத்தில் தாவீது ராஜாவின் உப்பரிகையும் தேவதாய் 3 வயது முதல் கலியாணம்வரை இருந்த மடமும் கோவிலுமிருக்கிறது.

அங்கிருந்து கொஞ்சதூரம் சென்றதும் எங்கள் வழிகாட்டி எங்களை நிறுத்தி, சியோன் பர்வதம், ஒலிவேத் மலை, பொதுத் தீர்வையிடமாகிய ஜோஸ்பத் கணவாய், சக்கேரியாஸ் கல்லறை, அப்சலோமுடைய கல்லறை, ஜெத்சமேனி தோட்டம், கோயில், அதன் கீழிருக்கும் தேவதாயின் கல்லறை முதலியவைகளைக் காண்பித்தான். தாவீதரசனின் குமாரனான அப்சலோமுடைய கல்லறை ஐம்பதடி உயரமுள்ள ஓர் வகைத் தூண். இதன் பக்கமாக யூதர்கள் செல்லும்பொழுது அத்தூண் மேலே கல்லை எறிந்து, "தன் பெற்றோர்களுக்கு சலிப்பை வருத்துவிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்று சொல்லிக்கொண்டு போகிறார்கள்.

பிற்பாடு கைப்பாஸ் அரண்மனையிருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கும் அர்ச். இராயப்பர் கோயிலுக்குள் சென்றோம். இக்கோவில் வெகு நேர்த்தியாகவும் மிகத் திறமையான வேலைப்பாடுகளுடனும் கட்டப்பட்டிருக்கின்றது. நமது ஆண்டவரை அடைத்து வைத்திருந்த ஜெயிலும், அர்ச். இராயப்பர் ஆண்டவரை மறுதலித்த இடமும் இக்கோவிலினுள் இருக்கின்றன. மறுதலித்த இராயப்பர் தன் மரணமட்டும் பட்ட மனஸ்தாபத்தை எங்கள் மனதில் சற்றே தியானித்து நாங்கள் கொஞ்ச நேரம் செபம் செய்துவிட்டு ஆண்டவர் திவ்விய நற்கருணையை உண்டு பண்ணின இடத்திற்குப் போனோம்.

அது முன்னொரு கோவிலாக இருந்தது. இப்பொழுதோ ஐயோ! பரிதாபம்!! அது துருக்கருடைய

ஒரு பள்ளிவாசலாயிருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் இரண்டு 'பீயஸ்தா' அதாவது சுமார் ஒன்றரை ரூபாய் வீதம் 406 பிரயாணிகளுக்கும் பிரவேசக்கட்டணம் செலுத்தி உட் சென்றோம். அந்தயிடத்தில் சிலுவை அடையாளம் முதலிய திருச்சபை வெளிக் கிரிகைகள் ஒன்றும் செய்யக்கூடாது. அன்பின் தேவத்திரவிய அனுமானமாகிய நற்கருணை உண் டாக்கப்பட்ட இடத்தை பார்வையிட்டு மனதினால் அன்பின் உருவாகிய கிறிஸ்துநாதரை சற்றே தியானித்தோம். இச் சாப்பாட்டறைக்கு அடுத்தாற்போல் அப்போஸ்தலர்களின் மேல் இஸ்பிரீத்து சாந்து இறங்கின இடமிருக்கிறது. அந்த பள்ளிவாசலைச் சேர்ந்ததாய் அதனுள்ளிருக்கும் வேறொரு அறையில் சுகிர்த சங்கீத ராயராகிய தாவீதரின் கல்லறை இருக்கின்றது. ஆனால் முகம்மதியரன்றி மற்றோர் அதிலி றங்க அநுமதிக்கப்படுகிறதில்லை.

பிற்பகல் 2 மணிக்கு ஜெருசலேம் பிதாப் பிதாவைச் சந் தித்தோம். அதன்பின் புகைப்படம் எடுக்கப்பட்டது மாலை 4-30 மணிக்கு சிலுவைப்பாதை செய்யப்போனோம். சிலு வைப்பாதையென்றால் இது வரைக்கும் செய்த மாதிரி படங்களுக்கு முன்னாலல்ல. கிறிஸ்துவானவர் யூதர்களால் பிடிக்கப்பட்டு சகல விதமான துன்பங்களையும், அவமானத் தையும் அனுபவித்து ஒரு கள்ளனைப்போல் குற்றுயிராகத் தோள்மேல் சிலுவை சுமந்துபோன அதே வியாகுலப் பாதையில், அவர் பாதச் சுவடுகள் பட்ட அதே புண்ணிய பூமியில், நாங்களும் சிலுவைப்பாதை செய்யப் போகிறோம். இந்தப் பாக்கியம் இனிமேல் என்று எங்களுக்கு கிடைக்கப் போகிறது. ஆனால் பின் எந்த இடத்தில் சிலுவைப்பாதை செய்தாலும் மனதில் இந்த இடத்தை ஞாபக மூட்டிக்கொள் வோம்.

போகிற வழியில் பரிசுத்த தேவதாயின் பெற்றோர்கள் வீடிருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கும் அர்ச். அன்னம் மாளின் கோயிலுக்குப் போனோம். பட்டணத்துக்கு வெளி யேயிருக்கும் இக்கோவில் அழகில் சிறந்ததே. மத்திய

பாகத்தில் தேவமாதா ஜனித்த இடத்தைக்காட்ட ஒரு பளிங்கு கல் போடப்பட்டிருக்கிறது. எல்லா திருஸ்தலங்களிலும் அழகிய கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலும் சிலுவை யுத்த வீரர்கள் காலத்தில் கட்டப்பட்டவைகள். அர்ச். அன்னம்மாளின் கோவிலிலிருந்து பிலாத்தன் அரண்மனைக்குப் போனோம். அக்காலத்திலிருந்த கட்டிடம் இப்பொழுதில்லை. ஆண்டவர் ஏறிச்சென்ற 28 படிகள் ரோமாபுரிக்கு கொண்டு போகப்பட்டன. ஆண்டவருக்கு முள்முடி சூட்டின இடத்தில் ஒரு கோயிலும், மரணத் தீர்வையிடப்பட்ட இடத்தில் ஒரு கோவிலும் "இதோ மனிதன்" என்று ஆண்டவரை பிலாத்து காண்பித்த இடத்தில் ஒரு கோவிலுமிருக்கின்றன.

பிலாத்துவின் அரண்மனை பக்கத்திலிருந்துதான் சிலுவைப்பாதை ஸ்தலங்கள் ஆரம்பிக்கின்றன. "இதோ மனிதன்" என்ற கோயிலின் பக்கலில் 2-வது ஸ்தலமிருக்கிறது. அங்கிருந்து மேற்கு பக்கமாக 200 அடி போனால் 3-வது ஸ்தலமும் இன்னும் 50 அடிகளுக்கு அப்புறம் 4-வது ஸ்தலமும் இருக்கின்றன. 5-வது ஸ்தலம் 50 அடி தூரத்திலும் 6-வது ஸ்தலம் 200 அடிக்கு அப்பாலுமிருக்கின்றன. 100 அடி கடந்து 7-வது ஸ்தலமும் 50 அடி சென்று 8-வது ஸ்தலமும் 500 அடிக்கப்பால் 9-வது ஸ்தலமும் இருக்கின்றன. இந்த 9 ஸ்தலங்களும் ஜனக்கூட்டம் நிறைந்த தெருக்களில் இருக்கின்றன. கடைசி 5 ஸ்தலங்களும் பரிசுத்த கல்லறைக் கோயிலிலிருக்கின்றன. இவைகளுக்கு 750 அடி தூரம் போக வேண்டியிருக்கிறது.

சிலுவைப்பாதைக்கு ஆயத்தமாக கனத்த மரத்தில் நீளமான ஒரு சிலுவை எங்களுக்காகச் செய்யப்பட்டிருந்தது. எங்களில் 10, 15 பேராக இச்சிலுவையை முன்னால் தூக்கிச் செல்ல நாங்கள் சிலுவைப் பாதையை வெகு பக்தியோடு செய்து முடித்தோம். இடைக்கிடையே ஆட்கள் மாற்றிக்கொண்டோம். இதில் பெண்கள் பின் தாங்கவில்லை. ஒவ்வொரு ஸ்தலத்திலும் எங்கள் தலைவர் ஒரு சிறு பிரசங்கம்


செய்தார்கள். திருச்சிலுவை நாட்டப்பட்ட குழி, திருக்கல்லறை முதலிய பரிசுத்த இடங்களை முத்தி செய்துவிட்டு எங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினோம்.

20-ம் தேதி காலை 5 மணிக்கு மோட்டார் ரதங்களில் ஏறி 5 மைல் தூரத்திலிருக்கும் பெத்லேகமுக்குப் போனோம். ரோமன் கத்தோலிக்கருக்குச் சொந்தமான ஒரு கோயிலும், கிரேக்கரைச் சார்ந்த ஒரு கோயிலும் சேர்ந்தாற்போல இருக்கின்றன. இரட்சகரின் திருப்பிறப்பின் ஆலயம் ஆதிகாலத்து கிறிஸ்துவக் கோயில்களின் சித்திர வேலைக்கு ஒரு பூர்வ அத்தாட்சியாயிருக்கின்றது. இரண்டு கோவில்களுக்கும் கீழே அநேக குகைகளிருக்கின்றன. குகை பீடங்களில் ஒன்றில் பூசைகண்டு நற்கருணை உட்கொண்டோம். திவ்விய பாலன் பிறந்த குகை கிரேக்கர் கோவிலினடியில் இருக்கிறது. இக்குகை கிரேக்கருக்குச் சொந்தமாயிருந்தாலும் ரோமன் கத்தோலிக்கரும் ஆர்மினியரும் தங்கள் தங்களுக்கு குறிக்கப்பட்ட நேரங்களில் போய் ஆராதனை செய்யலாம். இக்கிலஅறை 36 அடி நீளமும் 10 அடி அகலமுமுள்ள ஒரு கற்குகை. கர்த்தர் பிறந்த ஸ்தலம் வெள்ளியாற் செய்யப்பட்ட நட்சத்திரத்தினாலே குறிப்பிடவும், அதிலே "பரிசுத்த கன்னிகையிடத்திலிருந்து சேசுநாத சுவாமி பிறந்த இடமிது" என்று வரையவும்பட்டிருக்கிறது. இந்தத் திவ்விய ஸ்தலத்தை தரிசித்தவுடனே பேரானந்தங்கொண்டு எவனும் முழந்தாட்படியிட்டு இரு கரங்களையும் விரித்து சாஷ்டாங்கமாக விழுந்து முத்தி செய்வதற்கு இயல்பாக தூண்டப்படுவான். "உன்னத வான மண்டலத்தில் சர்வேசுரனுக்குத் தோத்திரமும், பூலோகத்தில் நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது". அத்திவ்விய ஸ்தலத்திலே பதினைந்து தங்க விளக்குகள் என்றும் எரிந்து கொண்டிருக்கின்றன. இந்த ஸ்தலத்துக்கு சில அடி தூரத்திலே குழந்தை சேசுவை இடையர் வந்து ஆராதித்த குகை இருக்கின்றது. இதற்கு முன்னாக ஒரு பீடமுண்டு. அவ்விடத்திலேதான் மூவரசர்கள் வந்து திவ்விய பாலனை

தரிசித்து காணிக்கை சமர்ப்பித்தார்கள். இந்த குகைக் குள்ளே அர்ச். சூசையப்பருடைய நாமத்தினாலும் ஒரு பீடமுண்டு. இவ்விடத்திலேதான் அவர் படுத்துறங்கும் பொழுது வானதூதன் தரிசனமாகி எகிப்து தேசத்துக்கு போகும்படி அவருக்கு கட்டளை கொடுத்தார் இவைகள் மாத்திரமன்றி மாசில்லாத குழந்தைகளின் நாமத்தினாலே ஒரு பீடமும், அர்ச். ஜெரோம் கல்லறைமேல் ஒரு பீடமும், இவருடைய சீஷர்களான அர்ச். பவுலா, எஸ்தாக்கியம் என் பவர்களுடைய கல்லறைகள் மேலே ஒவ்வோர் பீடமும் கட் டப்பட்டிருக்கின்றன. கர்த்தர் பிறந்த திருக்கோவிலுக்குச் சற்று தூரத்திலே திருப்பாற் குகையென்னும் நாமமுடைய ஒரு குகையுள்ளது. இவ்விடங்களிலெல்லாம் செபித்து முத்திசெய்தபின் ஜெருசலேமுக்குத் திரும்பினோம்.

திரும்பிவரும் வழியில் ஆண்டவர் மறுரூபமான தபோர் மலை இருக்கிறது. ஜெருசலேமுச்கு வெளியே ஆண்டவர் இரத்த வியர்வை சிந்திய ஜெத்சமனி பூங்காவன மும் அந்த இடத்தில் ஒரு அழகான கோவிலும் உள்ளன. இக்கோவிலை சிறந்த சிற்ப சாஸ்திரிகளால் வரையப்பட்ட தத்ரூபமான 12 பெரிய சித்திரங்கள் அழகுபடுத்துகின் றன. தங்கப் பூச்சுகளால் அலங்கரிக்கப்பட்ட மேற்கூறை மின்சார விளக்குகளின் பிரகாசத்தால் இன்னும் அதிக நேத்திரானந்தத்தைக் கொடுத்தது. உட்சென்றதும் பீடத் துக்கு பின்னால் அழகாக எழுதப்பட்டிருக்கும் சித்திரம் முதன் முதலாக எங்கள் கண்களைக் கவர்ந்தது. இப்படம் நம் இரட்சகர், ''பிதாவே உமக்குச் சித்தமானால் இப்பாத்திரம் என்னை விட்டகலட்டும்'' என்று மிகவும் துயரத்துடன் செபிக்கும் மேரையாய் வரையப்பட்டிருககிறது. இரத்த வேர்வை வெயர்த்து துளிதுளியாய் விழுகிற பாவனையானது உண்மையான இரத்தம் அப்படத்திலிருந்து விழுகின்றாப் போலிருக்கின்றது. சகல மனுஷருடைய பாவங்கள் ஒரு பக்கமும், தான் படப்போகிற பாடுகள், அநுபவிக்கபோகிற நிந்தை அவமானங்கள், இழிவான மரணம் முதலியன

வேறொரு பக்கமும், இவ்வளவெல்லாம் பாடுபட்டும் அதின் பலன்களை யடையாது எத்தனையோ நன்றிகெட்ட பாவிகள் நரகத்துக்கு போவார்களென்ற வருத்தத்துக்குரிய எண்ணம் மற்றொரு பக்கமும் அவரை வாட்டுவதோடு பிதாவின் நீதியால் கைவிடப்பட்டு துக்கத்திலாழ்ந்திருக்கும் அவரை அப்படத்தில் ஏறெடுத்துப் பார்த்த எவனும் கண்ணீர் சிந்தாதிருன். உண்மையில் அப்படத்தின் சிற்பத் திறமையால் இரத்த வேர்வை வேர்த்து சஞ்சல முகத்துடன் தோன்றும் அந்த ஆண்டவர் யாத்ரீகர்களாகிய எங்களெல்லோரையும் கண்ணீர் விட்டு அழும்படி செய்துவிட்டார். சிலர் ஏங்கி ஏங்கி அழுதார்கள். கல்நெஞ்சும் கரைந்த விதமாய் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் கண்ணீர் சொரிந்தார்கள். அப்படியே தங்களை யறியாமல் முழங்காலில் விழுந்து எல்லோரும் செபித்த மேரையானது அப்படத்தின் வல்லமையை இன்னும் அதிகமாகக் காட்டிற்று. இந்த உருக்கமான படம் ஒவ்வொருவர் இருதயத்திலும் அப்படியே அச்சிடபட்டிருக்குமென்பதில் சந்தேகமு முண்டோ? கண்களை மறைத்துக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளை கைக்குட்டையால் துடைத்துவிட்டு மற்றப் படங்களை பார்க்கலானோம். இப்படத்தின்மேலே சம்மனசானவர் கையில் பாத்திரத்தோடு தோன்றி ஆறுதல் சொல்லும் படம் எழுதப்பட்டிருக்கிறது. வலது பக்கம் அப்போஸ்தலர்கள் தூங்கும் படமும், இடது பக்கம் யூதாஸ் முத்தம் செய்து காட்டிக் கொடுக்கும் படமும் எழுதப்பட்டுள்ளன. பீடத்தின் படிகளுக்கும் நற்கருணை வாங்கும் கிராதிகளுக்கும் நடுவில் சுமார் 10 அடி சச்சவுக்கமான வெண்ணிற பளிங்குகல் ஒன்று தரை மட்டத்துக்கு மேல் ஒரு அடி உயரத்தில் காணப்படுகின்றது. நமது ஆண்டவர் மரணாவஸ்தைப்பட்டு இரத்த வேர்வை வேர்த்த பாறை இதுதான். இப்பாறையை எல்லாரும் முத்தி செய்து செபித்தபின் தூத்துக்குடி மகா வந். ரோச் ஆண்டவரவர்கள் புது ஏற்பாட்டிலிருந்து ஒரு அத்தியாயம் வாசித்தார்கள். அதன்பின் கோட்டாறு மேற்றிராணி ஆண்டவரவர்களால் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது.




ஜெத்சமேனி பூங்காவனம் — ஜெருசலேம்

பாலஸ்தீனுவிலேயே அதிக அழகுள்ளதும் 5,00,000 பவுண்கள் செலவழித்து கட்டப்பட்டதுமான இந்த ஜெத்சமேனிக் கோயிலைவிட்டு வெளிப்பட்டோம்.

கோவிலின் பக்கத்தில் ஒலிவ தோட்டமிருக்கிறது. இத்தோட்டத்தின் மத்தியில் மிகவும் பெரியனவும் வெகு நாட்பட்டனவுமான எட்டு ஒலிவ மரங்கள் நிற்கின்றன. ஒலிவ மரங்கள் மிகவும் மெதுவாகவும் தாமதமாகவும் வளரும் மரவர்க்கங்களில் ஒருவகையாகையால் மரங்களின் வயதைக் கணிக்கையில் அக்காலத்தில் நம் இரட்சகர் தனியே செபம் செய்த இடம் இம்மரங்களின் கீழிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. தங்கள் சிருஷ்டிகருக்கே நிழலளித்த இம்மரங்களைச் சுற்றியும் உயரமான இரும்பு அளி போடப்பட்டிருக்கின்றது. தோட்டத்தில் யூதாஸ் சேசுவை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்த இடத்தில் ஒரு கற்றூண் நிற்கின்றது. இதற்குச் சற்று தூரத்தில் ஆண்டவர் மோட்சத்திற்கு எழுந்தருளிய ஒலிவ மலை இருக்கிறது. இம்மலைமேல் இப்பொழுது ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்கிறது.

ஜெத்சமெனி தோட்டத்திலிருந்து திரும்புகிற வழியில் ஏறக்குறைய இருநூறு அடி தூரத்தில் தேவமாதாவின் கல்லறை காணப்படுகிறது. இக்கல்லறையின்மேல் கட்டப்பட்டிருக்கும் கோயிலானது ஆர்மினியச் சபையாரைச் சேர்ந்தது. இக்கோவிலில் எண்ணெய் விளக்குகளே எரிந்துகொண்டிருப்பதால் சற்று இருட்டாகவே இருக்கின்றது. நாங்கள் தரைமட்டத்திலிருந்து 46 படிகள் கீழேயிறங்கி தேவதாயின் கல்லறையை அடைந்தோம். அக்கல்லறையை முத்தமிட்டு வேண்டிக்கொண்டபின் கோவிலின் மத்தியிலிருக்கும் கிணற்றண்டை போனோம். இதை 'தேவதாயின் கிணறு' என்றழைக்கிறார்கள். இதன் தண்ணீரை அருந்தினோம். பின் நாங்கள் பகல் ஒரு மணிக்கு நோத்தர் தோமுக்கு திரும்பிவந்து எங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு கர்மேல் மலைக்கு புறப்பட எத்தனமானோம். இது


வரைக்கும் இந்த புண்ணிய பூமியில் எங்களை அன்புடன் ஆதரித்த பிரான்சிஸ்கன் சபைச் சன்னியாசிகள் எங்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு ஞாபகச்சின்னம் கொடுத்து அன்புடன் வழி அனுப்பிவைத்தார்கள்.

இங்கு இவர்களைப்பற்றி கொஞ்சம் எழுதுவது அவசியமென்றெண்ணுகிறேன். அளவற்ற அன்பும் பிறசிநேகமும் நிறைந்த அர்ச். ஐந்துகாய பிரான்சிஸ்குவின் சகோதரராகிய இச்சன்னியாசிகளின் பராமரிப்பிலேயே பாலஸ்தீனவிலுள்ள பரிசுத்த ஸ்தலங்கள் விடப்பட்டிருக்கின்றன. இந்த எட்டு நூற்றாண்டுகளாக இவர்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் முகம்மதியர் கையிலகப்பட்டு வேதசாக்ஷிகளாக மரித்திருக்கிறார்களென்றால் இவர்கள் எத்துணைச் சிறந்த பற்றோடு தங்களுக்கு கொடுத்திருக்கும் வேலையைச் செய்து வருகிறார்களென்பது நன்கு விளங்கும். பலமுறை காவலில் அடைபட்டார்கள். எப்பொழுதும் இடைவிடாத ஆபத்துக்குள்ளாயினர். ஆனாலும் அவர்கள் சற்றும் தயங்காது அப்பரிசுத்த இடங்களை பாதுகாக்கும் படைவீரர்களாகவும், கத்தோலிக்குத் திருச்சபையின் பிரதிநிதிகளாகவும் சகலவித இக்கட்டுகளுக்கும் நடுவில் தங்களிடம் பரிசுத்த பாப்பானவரால் ஒப்படைக்கப்பட்ட திருஸ்தலங்களை விடாது பாதுகாத்துவருதல் போற்றத்தக்கது. சென்ற சில ஆண்டுகளாகத்தான் அவர்கள் துன்பமற்றுச் சீவிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள்.

இதுவுமல்லாமல் இவர்கள் பரிசுத்த நாட்டை சந்திக்க வரும் கத்தோலிக்க திருயாத்திரைக்காரர் எவருக்கும் தங்களுக்குச் சொந்தமான பிரயாணிகளை ஆதரிக்கும் விடுதிகளில் இலவசமாய் எவ்வளவோ காருண்ணிய கவலையோடு யாதொரு பிரதிபலனையும் எதிர்பாராது சகல உபசரணையும் செய்தனுப்புகிறார்கள்.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலரிது.

என்று ஆன்றோர் அறநூல் கூறுகின்றது. ஆசையால்



ஒலிவமலை — ஜெருசலேம்.

பிறர்க்கு நலம் புரிவதே தங்கள் கடமையாகக்கொண்ட பத்தியுள்ள இச்சபையார் சத்திய திருச்சபைக்கு செய்துவரும் அரும்பெரும் சேவையை எவ்வளவு வேண்டுமாயினும் புகழ்ந்து கூறலாமன்றோ. அவர்கள் புகழ் எங்கும் என்றும் ஓங்குக.

இவர்களுக்கு எங்கள் வந்தனத்தைச் செலுத்திவிட்டு மோட்டார்களில் ஏறி கர்மேல் மலைக்கு புறப்பட்டோம். ஜெருசலேமில் நாங்கள் கண்ட காட்சிகளும், "ஜெருசலேமே! நான் உன்னை மறந்தால் என் வலதுகரம் அசைவற்றுப் போகக்கடவது" என்று தாவீதரசனின் சங்கீதத்தில் சொல்லியிருப்பதுபோல் நாங்களும் சொல்லக்கூடிய மேரையாய் என்றுமழியாது மனத்தில் ஆழ்ந்து பதிந்துள்ளது வியப்பன்றே.

அன்று மாலை 5-30 மணிக்கு நாங்கள் கர்மேல் மலை வந்து சேர்ந்தோம். கர்மேல் மலைமேல் மாதாக்கோவில் வெகு அழகாக கட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு அழகிய கோவிலை நான் இதுவரை பார்த்ததேயில்லை. இதன் அழகை வர்ணிக்க நான் அசக்தனாயிருக்கிறேன். ஆசியா கண்டத்திலேயே இதுதான் அதிக சிறந்த தேவாலயமாயிருக்க வேண்டும். சுவர்கள் தூண்கள் எல்லாம் சிறந்த பளிங்கு கற்களால் பொதியப்பட்டிருக்கின்றன. இவ்வளவு அழகிய விலையுயர்ந்த பளிங்கு கல்லின் ஒரு துண்டை முதலாய் நான் இதற்குமுன் பார்த்ததில்லை. அதிக வேலைப்பாடுள்ள அழகிய வர்ணக் கூண்டு (Dome) இக்கோயிலை இன்னும் சிறப்பிக்கின்றது. நடுப்பீடத்துக்கு மேலே உயரத்தில் உத்தரிய மாதா சிம்மாசனத்தில் வீற்றிருக்க, மடியில் பாலனும், பாதங்களில் இரு சம்மனசுகளும் அமைக்கப்பட்டு ஓர் அழகான சுரூபம் இருக்கின்றது. அடிப்பாகம் சுத்தக்கட்டி வெள்ளியால் செய்யப்பட்டிருக்கிறது. இச்சுரூபம் எப்பக்கத்திலும் சுழலக்கூடிய விதமாய் அமைக்கப்பட்டிருப்பது ஒரு தனிச் சிறப்பே. அருமையான இச்சுரூபத்தை முத்தி

செய்ய நாங்கள் ஆசித்ததால், அங்குள்ள குருக்கள் சுரூபத்தை பின் பக்கம் திருப்பியும் பீடத்தின் பின் பாகத்தில் ஓர் ஏணியும் வைத்துக் கொடுத்தார்கள். எல்லாரும் முத்தி செய்தபின் பக்கத்திலிருக்கும் ஜெபமாலை மாதாச் சுரூபத்தையும் முத்தி செய்து செபித்தோம். பீடத்தினடியில் எலியாஸ் தீர்க்கதரிசியின் குகை இருக்கிறது. எலியாஸ் வசித்த இவ்விடத்தில் அவர் சுரூபம் ஒன்றும், தந்தத்தால் செய்யப்பட்ட பரமதாயின் சுரூபம் ஒன்றும் இருக்கின்றன. கோவிலும், பீடங்களும், சுரூபங்களும், வர்ணவேலைகளும் மிகவும் சிறந்தவை. பரலோக பூலோக அரசியின் இந்த மாளிகையை விட்டுப் புறப்பட்டு "சாண்டிவி" போய்ச் சேர்ந்தோம்.

திவ்விய சேசு பிறந்து, வளர்ந்து, நம் இரட்சணியத்திற்காக இரத்தம் சிந்திய இப்பரிசுத்த நாடாகிய பலஸ்தீனை தரிசிக்கும் பாக்கியம் சர்வேசுரன் எங்களுக்குக் கொடுத்ததற்காக அவருக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியைச் செலுத்தினோம்.

---

## அத்தியாயம் 5.

### நேப்பிள்ஸ்—பதுவா—வெனிஸ்.

இரவு 10 மணிக்கு கப்பல் "ஹெய்பாவை" விட்டுப் புறப்பட்டது. களைப்புற்றிருந்த நாங்கள் நன்றாய் நித்திரை செய்தோம். 21-ம் தேதி காலை கப்பலில் நன்றியறிதல் பூசை நடந்தது. 22-ம் தேதி இரவு 10 மணி முதல் மறுநாட் காலை 4 மணி மட்டும் பொது சற்பிரசாத ஆராதனையிருந்தது. இரவு முழுதும் கண்விழிக்க இஷ்டமுள்ளவர்கள் மட்டும் இந்த ஆராதனையில் கலந்துகொள்ள அநுமதிக்கப்பட்டதால் எங்களில் 150 பேரே ஆராதனைக்குச் சென்றோம். 6 மணி நேரமும் அன்புள்ள அமலனின் பாதங்களை விட்டகலாது, செபித்துக் கொண்டிருந்தோம். லத்தீன்,

இங்கிலீஷ், தமிழ், கொங்கனி, சிங்களம் முதலிய பாஷைகளில் பாட்டுகளும், செபங்களும் இடைக்கிடையே பிரசங்கங்களும் நடந்தன. 23-ம் தேதி காலை 3-15 மணிக்கு திவ்விய பூசை, நற்கருணையோடு இந்த பொது ஆராதனை முடிந்தது. விடிந்ததும் நாங்கள் அழகான சிசிலித்தீவின் பக்கமாய் பிரயாணம் செய்வதையறிந்தோம். புகைந்துகொண்டிருக்கும் எட்னு என்ற எரிமலையைப் பார்த்தோம். சிசிலித்தீவிலுள்ள கண்ணைக் கவரும் கட்டிடங்களும், பரந்தோடும் கால்வாய்களும், பசுமையான வயல்களும், அவைகளில் வேலைசெய்யும் பண்ணையாட்களும், அங்கும் இங்கும் ஓடும் புகைவண்டிகளும் எங்கள் கண்களைக் களிப்பித்தன. நடுப்பகல் 'ஸ்டாம்போலி' என்ற எரிமலையைப் பார்த்தோம். மலையின் வடசிகரத்திலிருந்து புகை கிளம்பிக் கொண்டிருந்தது.

24-ம் தேதி காலை சங். லெதெல்லியார் சுவாமிகள் எங்களுக்குச் செய்த உபகாரங்களுக்காகவும், பட்ட சிரமங்களுக்காகவும் எங்கள் நன்றியையும் அன்பையும் காட்ட அன்னவருக்கு ஒரு பணமுடிப்பு கொடுத்தோம்.

25-ம் தேதி காலை 3 மணிக்கு எழுந்திருந்து திவ்விய பூசைகண்டு காலை போஜனம் அருந்தியபின் கப்பலின் மேல் தட்டுக்கு வந்து நாங்கள் இறங்கப் போகும் நேப்பிள்ஸ் துறைமுகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். துறைமுகத்தை நெருங்க நெருங்க ''சாண்டிவியை''விட்டுப் பிரிய வேண்டிய நேரமும் கிட்டலாயிற்று. சுமார் 6,500 மைல் எங்களைச் சுமந்துவந்த சகல வசதிகளையுமுடைய இந்தச் ''சாண்டிவி''க்கும் அதன் நல்ல உத்தியோகஸ்தர்களுக்கும் எங்கள் வந்தனத்தைச் செலுத்திவிட்டு காலை 8-30 மணிக்கு கரையில் இறங்கினோம்.

இறங்கி நாங்கள் நேராக அர்ச். ஜினரோவுடைய மேற்றிராசனக் கோயிலுக்குப் போனோம். 1294-ம் வருஷம் கட்டப்பட்ட இந்த அழகிய மிகப்பெரிய கோயிலில் நிறைய

பளிங்கு சுரூபங்கள் இருக்கின்றன. அர்ச்சியசிஷ்டவருடைய திரு இரத்தம் வைத்திருக்கும் பேழையை அக்கோயில் மேற்றிராணி ஆண்டவரவர்கள் எங்களுக்குக் காண்பித்தார்கள். இது உறைந்த இரத்தம். வருஷத்துக்கு இரண்டு மூன்று முறை இக்கட்டி இரத்தம் இளகுகிறதுண்டாம். நாங்கள் போனபோது அந்த இரத்தம் இளகி துளி துளியாய் விழப்பார்த்து உள்ளம் நெகிழ்ந்தோம். அந்த மேற்றிராணியார் இதற்கு முன்னதாக அமெரிக்கா திருயாத்திரிகள் வந்திருக்கும்பொழுது இந்த இரத்தம் இளகியதாகவும் அதுபோலவே இந்திய திருயாத்திரிகள் வந்திருக்கும் இச்சமயத்திலும் இளகியிருக்கிறதாகவும் சொன்னார். இத்திருப்பண்டத்தை முத்தி செய்தோம். அக்கோயில் சக்கிறிஸ்தில் பெரிய இரும்புப் பெட்டிகள் அநேகம் இருக்கின்றன. பல பாப்புமார்களும், சக்கரவர்த்திகளும், அரசர்களும் பிரபுக்களும் காணிக்கை கொடுத்த பற்பல சாமான்கள் இந்த இரும்புப் பெட்டிகளில் உள்ளன. விலையுயர்ந்த வைரங்களும், பச்சை கற்களும் பதிக்கப்பட்ட நற்கருணை பாத்திரம், பூசைப் பாத்திரம், சிலுவைச் சங்கிலி, கிரீடம், முதலியவைகள் லக்ஷக்கணக்கான விலை பெறுமதி உள்ளவைகள்.

இங்கிருந்து புறப்பட்டு 25 மைல் தூரத்திலுள்ள 'மேஞ்ஞானே' (Magnano) என்ற ஊருக்கு 11-30 மணிக்குப் போனோம். இங்கு கன்னிகையும் வேதசாட்சியுமான அர்ச் பிலோமினம்மாளின் திருச் சரீரம் பூச்சியமாய் வைக்கப்பட்டிருக்கும் பெரிய கோயில் ஒன்று இருக்கிறது. நாங்கள் இக்கோவிலண்டை செல்லுங்கால் குருத்தோலை திவ்விய பூசை முடிந்து ஜனங்கள் வெளியே வந்துகொண்டிருந்தார்கள். நூற்றுக் கணக்கான இந்தியர்களைக் கண்டதும் அன்னவர்களுக்கிருந்த சந்தோஷத்துக்கு அளவே யில்லை. கைகளைத் தட்டியும், உயர்த்தி அசைத்தும், கைகுட்டைகளை வீசியும், எங்கள் கைகளைப் பிடித்து முத்தி செய்தும், எங்களை அன்புடன் வரவேற்ற காட்சியானது நாங்கள் என்றும் மறக்கற்பாலதன்று. இத்தாலிய தேச முழுவதுமே எங்களைப்

பார்த்து சந்தோஷமடைந்ததாகக் காட்டிய போதிலும் மெஞ்ஞானே பட்டணத்து வாசிகள் காட்டிய அன்புக்கு நிகர் வேறு இல்லை என்னலாம்.

இம்மக்களைக் கடந்து கோவிலுக்குள் புகுந்தோம். அங்கே அர்ச். பிலோமினம்மாள் திருச் சரீரமும் இன்னும் சுமார் 200 அர்ச்சியசிஷ்டவர்களின் திருப்பண்டங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அர்ச். பிலோமினம்மாளின் திரு மேனி 1802-ம் வருஷம் மே மாதம் 24-ம் தேதியன்று ரோமா புரியில் அர்ச். பர்கில்லா சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. இந்த அற்புதவரத்தி தனது 13 வது பிராயத்தில் கன்னிகை யாகவும் வேதசாட்சியாகவும் மரித்தாள். இவ்விள நங்கை யின் வழியாக சர்வேசுவரனிடமிருந்து உதவி சகாயங்கள் பெறுகிறவர்கள் அநேகர். தற்சமயத்தில் தென்னிந்தியாவில் அர்ச். பிலோமினம்மாளின் பக்தி வெகு விரைவாகப் பரவி வருகின்றது. மைசூரில் இந்த அர்ச்சியசிஷ்டவளின் பேரால் சுமார் ஒன்றரை லக்ஷம் ரூபாய் செலவில் இப்பொழுது ஒரு கோயில் கட்டிக்கொண்டிருக்கிருர்கள். இவ்வளவு ரூபாயும் அவளுடைய பக்தர்களால் தங்களுக்குக் கிடைத்த உபகாரங்க ளுக்கு நன்றியறிதலாக அனுப்பி வைக்கப்பட்டவை. சமீ பத்தில் அவளுக்கென்று திருச்சினுப்பள்ளியிலும் தூத்துக் குடியிலும் பீடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

நாங்கள் மெஞ்ஞானேவிலிருந்து நேப்பிள்ஸுக்குத் திரும்பிவந்து அப்பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தோம். அன்று மாலை 3·55 க்கு ரெயிலில் ஏறி பதுவாவுக்குச் சென் ேறோம்.

ஒவ்வொரு பட்டணத்திலும் ஏராளமான கோவில்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று அளவிலும் அழகிலும் குறைந்ததாகயில்லை. இவைகளுக்கு நிகராக நம் இந்தியாவில் ஒன்றையும் சொல்லமுடியாது. கோவாவில் உள்ள கோவில் களில் ஒன்று இரண்டு இக்கோயில்கள் மாதிரி சற்று சிறிய அளவில் கட்டப்பட்டிருக்கின்றன.

26-ம் தேதி காலை 6 மணிக்கு கோடி அற்புதரான அர்ச். அந்தோணியாருடைய ஊராகிய பதுவாவில் ரெயில் வந்து நின்றது. நேராக அர்ச்சியசிஷ்டவருடைய பிரதான தேவாலயத்திற்குச் சென்றோம். இக்கோவிலில் திவ்விய பூசை கண்டு சற்பிரசாதம் உட்கொண்டோம். பீடத்தினடியிலிருக்கும் கல்லறையை பின்பக்கமாகப்போய் முத்தி செய்து விட்டு நடுப்பீடத்துக்கு பின்னேயிருக்கும் காட்சி சாலைக்குச் சென்றோம். அங்கு அநேக அர்ச்சியசிஷ்ட பண்டங்களையுடைய கண்ணாடிப் பேழைகள் இருக்கின்றன. அவைகளின் மத்தியில் ஒரு தங்க பேழையில் அர்ச்சியசிஷ்டவருடைய அழியா நாக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இத்திரு பண்டத்தை முத்தி செய்தோம். அர்ச்சியசிஷ்டவருடைய பற்பல புதுமைகளைக் காட்டும் சித்திரங்கள் சலவைக் கற்களில் செதுக்கப்பட்டு இந்த ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை யெல்லாம் பார்த்தபின் ரெயில்வே ஸ்டேஷன் சென்று வெனிஸ் நகர் போகும் வண்டியில் ஏறிக்கொண்டோம்.

12-30 மணி மத்தியான வேளை ரெயில் வேனிஸ் பட்டணம் வந்து நின்றது. ஸ்டேஷனிலிருந்து கால் நடையாய் நடந்து பட்டணத்து நடுவிலிருக்கும் மேற்றிராசனக் கோவிலுக்குச் சென்றோம். அப்போஸ்தலர் அர்ச். மாற்கு பேரால் கட்டப்பட்டிருக்கும் இக்கோவில் வெகு நேர்த்தியாகவும் அழகான சுரூபங்களையுடையதாகவுமிருக்கின்றது. இக்கோவிலின் பக்கத்திலுள்ள மைதானத்தில் ஆயிரக்கணக்கான புருக்கள் வளர்க்கப்படுகின்றன. கோவிலுக்கு எதிரே "கிராண்ட்" கால்வாய் இருக்கின்றது. இக்கால்வாயில் எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த மோட்டார் படகுகளில் ஏறி பட்டணத்தைச் சுற்றிப்பார்த்தோம். இந்த நகரம் தண்ணீர் மேல் கட்டப்பட்டிருக்கிறது. பிரதான பாதைகளெல்லாம் தண்ணீர் கால்வாய்கள் தான். கால்வாயின் இருபக்கங்களிலும் அழகிய கட்டிடங்கள் தண்ணீரை ஒட்டி இருக்கின்றன. இந்த விதமான 150 கால்வாய்களால் சூழப்பட்டதும்,

400 பாலங்களை உடையதுமான 120 சின்ன தீவுகளால் இப்பட்டணம் ஆக்கப்பட்டிருக்கிறது. ரெயில்வே ஸ்டேஷனை அடைந்து மாலை 5 மணிக்குப் புறப்படும் ரெயிலில் ஏறி ரோமாபுரிக்குச் சென்றோம்.

---

## அத்தியாயம் 6.

### ரோமாபுரி.

### தேவாலயங்கள்—பாப்பரசர் பேட்டி.

27-ம் தேதி காலை 7-30 மணிக்கு நித்திய நகரெனப்படும் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தோம். ரெயிலை விட்டு இறங்கி எங்களுக்காக நின்றுகொண்டிருந்த 40 பேர் உட்காரக்கூடிய மோட்டார்களில் ஏறி அர்ச். அந்தோனியார் கோயிலுக்குச் சென்றோம். அங்கு திவ்விய பூசை கண்டு ஆத்மாவுக்கு போசனமளித்த பின் பக்கத்திலிருக்கும் பிராஞ்சிஸ்கன் கன்னியர் மடம் சென்றோம். அம்மடத்தில் குருக்களுக்கும் பெண்களுக்கும் தங்குவதற்கு இடம் கிடைத்தது. மற்றவர்கள் பக்கத்திலிருக்கும் குடியிருப்பு வீட்டுகளில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் 6, 7 மெத்தைகளும் 50, 60 குடும்பங்களுமிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனியாக 3 அல்லது 4 வசதியான அறைகளிருக்கின்றன. இவ்விடங்களில் வசிப்பவர்களெல்லாம் நடு அந்தஸ்துள்ளவர்களும் எளியவர்களுமே. இரவில் தங்குவதற்கு மாத்திரம் நாங்கள் அந்த வீடுகளுக்குச் செல்வோம். சாப்பாடு முதலியவைகள் எல்லோருக்கும் கன்னியர் மடத்தில்தான். கன்னியர்கள் எங்களுக்கு திருப்தியான நல்ல சாப்பாடு கொடுத்தது மன்றி வெகு அன்போடும் உபசரித்தார்கள்.

குறைந்தது 14 நாட்களில் பார்க்கவேண்டிய ரோமாபுரியை நாங்கள் 6 நாட்களில் பார்க்கவேண்டியதிருந்தது. ஓர் கத்தோலிக்கன் ரோமாபுரியில் ஒரே ஒரு நாள் தங்கி, அர்ச். இராயப்பர் தேவாலயத்தை மட்டும் பார்க்கும் பாக்கியம்

பெறுவானேயாகில் அதுவே அவன் பட்ட கஷ்டங்களுக்கும், செலவு செய்த பணம், நேரம் முதலியவைகளுக்கும் போது மான பலன் என்று சொன்னால் மிகையாகாது. ஜெருசலே மில் உற்பத்தியான நமது திருவேதம் பூலோக மோட்சம் போன்ற ரோமாபுரியை தனக்கு தலையிடமாக்கிக்கொண் டது. எம்மதத்தானுக்கும் திருச்சபையின் வச்சிர ஸ்தம் பம் போன்ற அசையா நிலையும், அதன் பந்துக்கட்டான ஒற்றுமையும், உண்மையான சகோதர உரிமையும், கத்தோ லிக்க இலட்சணமும் ரோமாபுரியில் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெற்றென விளங்கும். சுரங்க அறைகளும், "கொலோசியம்" என்னும் பேரரங்கமும் வேதசாட்சி களுடைய திட சித்தத்தையும் அவர்களின் வீரத்துவ விசு வாசத்தையும் நமக்கு எடுத்துக் கூறுகின்ற மேரையாய் இருக் கின்றன. "வேத சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்து" என்ற வேத வாக்கியத்தின்படி உத்தமர் பலர் உதிரம் சிந்தி உயிரைக்கொடுத்து நம் மெய் மறையை விதைத்தது இந்நகரிலேதான். ரோமாபுரியிலுள்ள பன் னூற்றுக்கணக்கான ஞாபகச்சின்னங்கள் அர்ச்சியசிஷ்டவர் களுடைய புண்ணிய ஜீவியங்களை நமக்கு எக்காளத் தொனி போல் உரத்துக் கூறுகின்றன. கத்தோலிக்க உலகுக்கு தலைநகராய் விளங்குகின்றதும், பரிசுத்த பாப்பரசர் அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் வீற்றிருக்கும் இந்த ரோமை நகர் ஒவ்வொரு யாத்ரீகனுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்து வதோடு பக்தியை மேலெழுப்புகின்றது. இதையெல்லாம் வாசிக்கும் சகோதரரே! நாம் கத்தோலிக்கராய் இருப்ப தில் பெருமையடைந்து இன்புறுதல் இயல்பன்றோ?

அன்று மாலை 4-30 மணிக்கு அர்ச். அருளப்பர் தேவாலயத்துக்கு ஜுபிலி சந்திப்புக்காகப்போனோம். வந். மேற்றிராணிமார் முன் நடக்க, குருக்களும் ஆண்களும் அதன்பின் பெண்களுமாக நான்கு நான்கு பேர்களாக இந்திய நாட்டு உடையில் வரிசையாகவும் ஒழுங்காகவும் சென்ற தானது கூட்டம் கூட்டமாய் வந்து எங்களைப் பார்த்த

இத்தாலியருக்கு பெரும் வியப்பைக் கொடுத்தது. அர்ச். பாப்புமார்களின் பூர்வீக ஸ்தலக் கோயிலும் உலகிலுள்ள கோயில்களுக்கெல்லாம் தாய்க்கோயில் என்றழைக்கப்படுவதுமான அர்ச். அருளப்பருடைய கோயிலையடைந்து செபித்தோம். இக்கோயிலுக்கு பங்கு சுவாமியார் ஒரு கர்தினலென்றால் இன்னும் இதன் சிறப்பை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? 1870-ம் வருஷம் வரையில் பாப்புமார்கள் இக்கோவிலிலேயே முடிசூட்டப்பட்டு விசேஷ காலங்களில் பூசைசெய்து வருவது வழக்கம். ரோமாபுரியில் முதன்முதல் வெளிப்படையாய் கட்டி அபிஷேகம் பண்ணப்பட்ட கோயில் இது. 324-ம் ஆண்டில் "கான்ஸ்டன்டைன்" இராஜாவால் இது கட்டப்பட்டது. இக்கோவிலிலிருக்கும் விலையேறப் பட்ட சாமான்களாவன:— 2025 பவுண்டு நிறையுள்ள வெள்ளி பாலி, 5 அடி உயரமும் 100 பவுண்டு நிறையுமுள்ள 18 வெள்ளிச் சுரூபங்கள், 50 பவுண்டு நிறையுள்ள தங்கத் தினால் செய்த திவ்விய நற்கருணைப் பெட்டி.

இக்கோவிலின் பிரதான பீடம் சேசுக்கிறிஸ்துநாதர் கடைசி இராப் போசனம் செய்தபோது உபயோகித்த மேசையை வைத்து கட்டப்பட்டிருக்கிறது. இப்பீடத்துக்கு முன்னால் ஒரு உயரமான பீடம் இருக்கிறது. இது பரிசுத்த பாப்பானவர் பூசைசெய்யும் பீடம். இந்த பீடத்துக்கு மேலே ஒரு உப்பரிகையில் அர்ச். இராயப்பர், சின்னப்பர் சுரூபங்கள் விளங்குகின்றன. இவைகளில் அர்ச்சியசிஷ்டவர்களின் மண்டை ஓடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் செபம் முடிந்ததும் கோவிலின் முன் எங்களைப் புகைப்படம் எடுத்தனர். பின்னர் டிராம்களில் ஏறி வத்திக்கான் அரண்மனை சென்றோம்.

வத்திக்கான் அரண்மனையும் அதனைச் சுற்றியுள்ள தோட்டங்களும் மற்றுமுள்ள புஸ்தகசாலை, கண்காட்சி சாலை முதலிய ஸ்தாபனங்களும் சுமார் பதின்மூன்றரை ஏக்கர்

விஸ்தீரணமுள்ள நிலத்தின்கண் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த அரண்மனையில் 1100 அறைகளிருக்கின்றனவாம்.

மாளிகை வாயிலில் கையில் உருவிய ஆயுதங்களோடு பாராக்கொடுக்கும் சுவிஸ் காவலாளர்களைத் தாண்டி சுமார் 800 படிகளுள்ள படிக்கட்டில் ஏறி கொலுமண்டபத்துக்குச் சென்றோம். விரைவில் கிறிஸ்துவின் பிரதிநிதியும் கத்தோலிக்க உலகுக்கு அரசருமான பாப்பானவரை தரிசிக்கப் போகிறோம் என்ற ஆர்வம் எங்கள் மனதில் அக்களிப்பை விளைவித்திருந்ததால், இப்படிகளில் ஏறி வந்ததனாலுண்டான களைப்பு எங்களுக்குச் சற்றேனும் தோற்றவில்லை. அப்பொழுது மாலை 7-30 மணி. 15 நிமிஷங்கள் பொறுத்து நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அதிமிக அன்புற்ற ஞானத் தந்தை, பரிசுத்த பிதா, 11-ம் பத்திநாதர் தம் மெய்க்காப்பாளரோடு கொலுமண்டபத்துக்குள் வந்தார். உடனே அணிவகுத்து நின்ற நாங்கள் முழங்காலில் விழுந்து இடி முழக்கம்போல் கரகோஷம்செய்து "பாப்பரசர் நீடுழி வாழ்க" என்று ஆர்ப்பரித்துக் கூவி போற்றிப் பணிந்தோம். அவர் சற்று குட்டையாகவும் அளவான உடற்கட்டுடையவராயுமிருக்கிறார். படங்களில் பார்ப்பதுபோல் அவ்வளவு பருமனாயில்லை. தூய வெள்ளை ஆடை அணிந்திருந்தார். தெய்வீக ஒளி வீசும் அம்முகத்தில் சதா புன்னகை தோன்ற, செந்நிற உதடுகள் அசைந்து அன்பான வார்த்தைகள் தெரிவிக்க, தமது அர்ச்சிக்கப்பட்ட கையை நீட்டி நிறைந்த அருளோடு மோதிரம் முத்தி செய்யக் கொடுக்க, அந்த நல்ல தந்தை சிரமம் பாராது திருயாத்திரிகர்கள் ஒவ்வொருவர் பக்கமாகவும் மெதுவாகச் சென்றார். இதற்கு மட்டும் 35 நிமிஷங்கள் பிடித்தன. ஆசீர்வதிக்கப்பட்ட அக்கரங்களை வெகு ஆவலோடு பிடித்து அதையும் அதிலணிந்திருந்த "செம்படவன் மோதிரத்தையும்" ஒவ்வொருவராய் முத்தி செய்தோம். அந்த நேரத்தில் எங்கள் மனதில் பொங்கி எழும்பிய மகிழ்ச்சி எவ்வளவென்று யாரால் வர்ணிக்க

முடியும். சுவரின் பக்கமாக நிறுத்தப்பட்ட மேசைகளில் நாங்கள் பாப்பரசருக்கு பாத காணிக்கையாக வைக்கக் கொண்டு சென்ற பொருள்கள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. எல்லாரையும் சுற்றி வந்தபின் பாப்பரசர் அப்பொருட்களை பார்வையிட்டார். சிற்பத்திறமை பொருந்திய சிலவற்றைக் கையிலெடுத்து, சிரசை ஆட்டி, திருப்தியும் சந்தோஷமும் கொண்டவராய்க் காணப்பட்டார். அதன்பின் சிம்மாசனத்திலமர்ந்து சங். லெதெல்லியார் சுவாமிகள் வாசித்துக் கொடுத்த வாழ்த்துப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மலர்ந்த முகமாய் தம் பிரிய மக்களைக்கண்குளிர நோக்கி, நாற்பத்தைந்து நிமிஷ நேரமளவாக பிரஞ்சு பாஷையில் தேனும் பாலும் முக்கனியும் கலந்தாற்போல இனிய குரலில் இன்புறப் பேசிய மொழிகளின் சுருக்கத்தை கீழே குறிப்பிடுகிறோம்.

"எமது பிரியமுள்ள மக்களே,

உங்களில் ஒவ்வொருவருக்கும் எமது இருதய பூர்வமான அன்பார்ந்த நல்வரவு கூறுகிறோம். இப்பரிசுத்த வருஷத்தில் இங்கு வந்த இரண்டாயிரம் திருயாத்திரைக் கூட்டங்களில் உங்களுடையதே மிகவும் சிறந்ததாகவும் நமக்கு அளவிறந்த சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாகவுமிருக்கிறது. உங்களது நாடு நம் இதயத்தில் விசேஷ இடம் கொண்டுளது. அந்த தூர தேசத்திலிருந்து சிரமம் சிறிதும் கவனியாது உங்களை அதிகமாய் நேசிக்கும் ஞான தந்தையை ஆவலுடன் பார்க்க வந்திருக்கிறீர்கள். உங்களது அன்பு ததும்பும் ஆவலைப் பாராட்டுகிறோம். நாமும் உங்களை வெகுவாய் நேசிக்கிறோமென்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். எமது அருமைப் பிள்ளைகளே, நாம் உங்களில் ஒவ்வொருவரையும் சினேகிக்கிறோம். மிகவும் சினேகிக்கிறோம்.

நீங்கள் எமக்கு அன்புடன் கொண்டுவந்த அரிய வெகுமதிகளுக்காக நாம் நன்றி கூறுகிறோம். அவைகளை இரண்டாவது இந்திய திருயாத்திரையின் ஞாபகச் சின்னங்களாக வைத்துக்கொள்வோம். அவைகளில் ஒன்றாகிய அர்ச். சவேரியாரின் திருப்பண்டம் அந்த அர்ச்சியசிஷ்டவரால்

மனந்திருப்பப்பட்ட இந்த தேசத்தை நமக்கு என்றும் ஞாபகமூட்டக் கூடியதாயிருக்கிறது.

உங்கள் தேசத்தின் மனந்திரும்புதலுக்காக மேற்றிராணிமார்களும் குருக்களும் வெகு ஊக்கத்துடன் உழைத்து வருகின்றார்கள். உங்களுடன் வந்திருக்கும் மேற்றிராணிமார்களும் குருக்களும் இதுவரைக்கும் செய்துள்ள அரிய பெரிய வேலைகளை நாம் மெச்சுகின்றோம். சர்வேசுரனுடைய இராச்சிய பரம்புதலுக்கு அவர்கள் இவ்விதம் அயராது என்றும் உழைக்க வேண்டுமென்பது நமது விருப்பம்.

ஆத்ம இரட்சணிய அலுவலை அன்னவர்கள் மட்டும் செய்ய நீங்கள் விட்டுவிடலாகாது. நீங்கள் உங்களாலானதை செய்தலவசியம். செபம் செய்யுங்கள். விசேஷமாக குடும்ப செபம் அதாவது பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாய்ச் சேர்ந்து உங்கள் தேசத்தின் மனந்திரும்புதலுக்காகச் செய்யும் செபம் பெருத்த நன்மையை விளைவிக்கும். உண்மையான கிறிஸ்துவ ஜீவியம் ஜீவியுங்கள். உங்களைச் சுற்றியுள்ளவர்கட்கு நன்மாதிரிகை காண்பியுங்கள். உங்கள் ஞான மேய்ப்பர்கள் உங்கள் உதவியை நாடும்போது அவர்களுக்கு வேண்டியதைச் செய்ய தயாராக இருங்கள். ஆனால் இவைகளில் முக்கியமாக உங்கள் ஞான மேய்ப்பர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்கள் இஷ்டத்தை பூர்த்தி செய்யுங்கள்.

எமது அன்புள்ள குமாரர், குமாரத்திகளே, நாம் உங்களை எமது இருதய பூர்வமாக ஆசிர்வதிக்கின்றோம். இதோ உங்களை வெகுவாய் நேசிக்கும் தந்தை உங்களில் ஒவ்வொருவரையும் ஆசிர்வதிக்கின்றோம். உங்களைப் பிரதிநிதிகளாக அனுப்பிவைத்த உங்கள் தேசத்திலுள்ள யாவரையும் ஆசிர்வதிக்கின்றோம். உங்கள் பெற்றோர்களையும், பிள்ளைகளையும், உறவினரையும், சிநேகிதரையும், உங்கள் செபத்தை நாடினவர்களையும், உங்களைச்சார்ந்த வியாதியஸ்தர்களையும், உங்கள் ஞானமேய்ப்பர்களையும் ஆசிர்வதிக்கின்றோம். இன்னும் நீங்கள் அனுஷ்டித்து வரும் இரவு ஆராதனைகளையும், தியானப் பழக்கங்களையும் ஆசிர்வதிக்கின்றோம்.



பரிசுத்த பாப்பரசர் 11-ம் பத்திநாதர்

பிரியமுள்ள எமது மக்களே, இப்பொழுது சென்று வாருங்கள். எமது செபங்கள் உங்களைப் பின்தொடர்கின் றன. உங்களை நேசிக்கும் தந்தையின் ஆசீர் உங்களுடன் வருகின்றது. இந்தப் பேட்டியின் ஞாபகார்த்தமாக உங்க ளுக்கு சுரூபங்களும், குருக்களுக்குப் படங்களும், மேற்றி ராணிமார்களுக்கு ஓர் சின்னமும் கொடுக்கின்றோம்.

பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்து என்னும் சர்வ வல்ல பமுள்ள கடவுளின் ஆசீர்வாதம் உங்கள் மேலிறங்கி உங்களு டன் என்றும் இருக்கக்கடவது.—ஆமென்''.

இச்சொற்பொழிவு முன்னதாக ஆயத்தஞ் செய்யப் பட்டதல்ல. ஞாபகமூட்ட ஒரு குறிப்புகூட இல்லாது வாக்கியங்களெல்லாம் இருதயத்திலிருந்தே வந்தன. அருள் செறிந்து சொரியும் அச்சொற்பொழிவில் நம் பரிசுத்த தந்தை நம் நாட்டின்மீதும் தம் இந்தியமக்களின் மீதும் கொண்டுள்ள பட்சமும் பரிவும் உருக்கமும் அப்பேச்சின் ஒவ்வொருவார்த் தையிலும் ததும்பி வழிவதைக் கண்கூடாய்ப் பார்க்கலாம். அதனால் அதை ஒரு முறையன்று பன்முறையும் வாசித்து இன்புறத் தக்கதென்று நாம் சொல்லத் தேவையில்லை.

ஜூபிலி வருஷ முடிவாகையால் எங்களுக்கு பரிசுத்த பாப்பானவர் பேட்டி கொடுத்த அன்று மட்டும் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் 60,000 ஜனங்கள் வந்திருந்தனர். இவ்வளவு பேருக்கும் மோதிரம் முத்திசெய்யக் கொடுக்க முடியாததால் ஒவ்வொரு திருயாத்திரைக் கூட்டமாக மேடை யின் மேலிருந்தே ஆசீர்வதித்து அனுப்பிவிட்டார். ஆனால் இந்தியாவிலிருந்து போயிருந்த எங்களுக்கு மட்டும் தமது அரிய நேரத்தில் சுமார் ஒன்றேகால் மணி நேரம் மேற் சொன்னவாறு பேட்டி கொடுத்தார். இவைகளெல்லாம் இப் பரிசுத்த பிதா இந்தியாவின் மேலும் இந்தியர் மேலும் வைத் திருக்கும் விசேஷ பற்றுதலைக் காண்பிக்கின்றனவன்றோ?

கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய பாப்பரசரைக் கண்டு களித்த கண்களும், அவரது இன்ப மொழிகளைக் கேட்டானந்தித்த செவிகளும், மோதிரத்தை முத்திசெய்ய அவரது கையைத் தொட்டு வாய்க்கருகாமையில் கொண்டுபோன கரங்களும், மோதிரத்தை முத்திசெய்த உதடுகளும் பாக்கியமானவைகளன்றோ? சத்திய கத்தோலிக்கு திருச்சபையின் தலைவரும், வத்திக்கான் நாட்டு மன்னரும், அருங்கலை வல்லுநரும், பெரிய நூலாசிரியரும், எவருமே புகழ்ந்து போற்றத் தகும் பெருந்தகை வாய்ந்தவருமான இப்பாப்பரசரின் முன்னிலையில் நிற்பதினால் அளவற்ற இன்பத்தையும் ஓர் வித பக்தியான உணர்ச்சியையும் நாங்கள் அடைந்தோம்.

பாப்பரசர் மொழிந்த வாக்கியங்களை உடனுக்குடன் குறித்து வைத்திருந்த சங். லெதெல்லியார் சுவாமிகள் இங்கிலீஷ் பாஷையில் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். அப்பொழுது பாப்பரசர் காலால் தாளம் போட்டுக்கொண்டும், சங். லெதெல்லியார் சுவாமிகளின் மொழிபெயர்ப்பை ஆமோதித்து தலையசைத்துக் கொண்டும், புன்னகை புரிந்துகொண்டும்,எங்களில் ஒவ்வொருவரையும் உற்று நோக்கிக்கொண்டும் வீற்றிருந்தார்.அப்பால் அவருடைய ஆசீர்வாதத்திற்குப்பின் எங்கள் பேட்டிமுடிந்து மடத்துக்கு 9-30 மணிக்குத்திரும்பினோம். பேட்டி இத்துடன் முடிந்துவிட்டாலும் அவருடைய சாயலும், அவர் எங்களுக்கு காண்பித்த அன்பும் அனுதாபமும் எங்கள் உள்ளங்களில் மரணமட்டும் மறக்கமுடியாத தன்மையாய் பதிந்துவிடலாயின. நம் திருமீட்பரின் அன்பை பிரதிபலிக்கச்செய்யும் அன்புடைய ஒருவரும் ரோமாபுரியில் உளர் என்பதை இனிமேல் மறந்துவிடமாட்டோம். இனி பாப்பானவர் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளும் காலை இதுவரைக்கும் செபம் செய்தது போலல்லாமல் சிறந்த விதமாக வேண்டிக்கொள்வோம்.

# அத்தியாயம் 7.

## ரோமாபுரி (தொடர்ச்சி).

### சுரங்க அறைகள்.

28-ம் தேதி காலை 6-30 மணிக்கு எல்லா திருயாத்திரிகளும் கன்னியர் மடத்தில் கூடி அங்கிருந்து மோட்டார்களில் புறப்பட்டு அர்ச். தோமிதில்லா (Domitilla) சுரங்கக் கோவிலுக்குச்சென்றோம். அங்கு 7 மணிக்கு திவ்விய பாடற் பூசை கண்டு நற்கருணை அருந்தினோம். சுரங்க அறைகளின் மேல் பாகத்தில் ஒரு பெரிய நந்தவனமும், அதில் பிராஞ்சிஸ்கன் சபையாரால் நடத்தப்படும் ஒரு அசனசாலையுமிருக்கிறது. அங்கு காலைஆகாரத்தை முடித்துக்கொண்டோம். பின் அர்ச். கலிஸ்தாஸ் சுரங்க அறைகளைப் பார்க்க மெழுகு வர்த்தியுடனும், மின்சார கைவிளக்குகளுடனும் சென்றோம். சலேசியன் சபைக் குருக்கள் எங்களுக்கு வழிகாட்டிக்கொண்டு போனார்கள். மேடும் பள்ளமுமான பாதைகளின் வழியாக கீழே போகப்போக ஒரே இருட்டாயிருந்தது. பற்பலபாதைகள் இங்குமங்கும் குறுக்கிடுவதால் திறமையான வழிகாட்டிகள் இல்லாவிடில் சுரங்கத்தினுள் இறங்கினவர்கள் வெளியே வருவது கூடாத காரியம். இன்று ரோமாபுரியின் கீழ் 150 சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 800 மைல்கள் நீளமுள்ள பாதைகள் இருக்கின்றனவாம். இச்சுரங்கங்களெல்லாவற்றிலும் மிகப் பெரியது அர்ச். கலிஸ்தாஸ் சுரங்கம்தான். இதின் உள் பாதைகள் 146 மைல்கள் நீளம். இதில் பற்பல பீடங்களும் கல் கதவுகளும் இருக்கின்றன. சுவர் முழுவதும் கல்லறைகள் இருந்த இடங்கள். அவைகளெல்லாம் அநேகமாய் உடைந்து கிடக்கின்றன. கல்லறையின்மேல் மீன், நல்ல மேய்ப்பன், சிலுவை முதலிய அடையாளங்களைப் பார்க்கலாம். ஓர் பக்கத்தில் அர்ச். செசிலி அம்மாளின் திருச்சரீரம் கண்டெடுக்கப்பட்ட கல்லறையில் ஓர் பீடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்த அம்மாள் கி. பி. 177-ல் வேத சாட்சியாக

மரித்தாள். இந்த அர்ச்சியசிஷ்டவளின் சரீரம் விலையுயர்ந்த பட்டாடைகளால் போர்த்தப்பட்டு, அவள் மரணமடையும் போது என்ன நிலைமையிலிருந்தாளோ, அதே நிலைமையில் தலையைக் குப்புறவைத்த வண்ணம் சுமார் ஆறு நூற்றாண்டு களுக்குப் பின் 1-வது பாஸ்கல் என்னும் பாப்பானவரால் கண்டெடுக்கப்பட்டது. அடக்கம் செய்யப்பட்டு சுமார் 600 வருஷங்களாகியும் அச்சரீரமும், அதன்மேலிருந்த இரத்தக் கறை படிந்த பட்டாடையும், அழிவுறாமல் அப்படியே இருந் தது, ஆச்சரியத்திலும் ஆச்சரியமன்றோ! இக்கல்லறையில் இச்சரீரம் இருந்த மேரையாகவே ஒரு சுரூபம் வெகு அழகாகச் செய்யப்பட்டு இப்பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சுரூபமானது மிகுந்த பக்தியாகவும் உருக்கமாகவும் காணப்படுகின்றது. இங்கே செபம் செய்துவிட்டு சுரங்கத்தி லிருந்து 10-30 மணிக்கு வெளியே வந்தோம்.

இச்சுரங்க அறைகள் வேத சாட்சிகளின் திடசித்தத் தையும் ஆதிகாலத்து கிறிஸ்துவர்களின் நிகரற்ற விசுவாசத் தையும் நன்றாய் நமக்கு எடுத்துக் காண்பிக்கின்றன. நமது திருச்சபையின் துவக்கத்தில் மூந்நூறு ஆண்டுகளாய் வேத கலாபனை காலங்களில் பாப்புமார்கள், மேற்றிராணிமார்கள், குருக்கள் உள்பட சகல கிறிஸ்துவர்களும் ஒளித்திருந்து தேவத் திருச்சடங்குகளை நிறைவேற்றி சத்திய வேதத்தைக் காப்பாற்ற உதவியாக இருந்த இடங்கள் இச்சுரங்கங்களே. இந்நூதன நில அறைகளில் அநேக அர்ச்சியசிஷ்டவர்கள் ஜீவித்து மரித்திருக்கிறார்கள். அக்காலத்திலிருந்த பாப்பு மார்கள் இவ்விடங்களை தங்கள் அரண்மனைகளாகவும் கொலு மண்டபங்களாகவும் வைத்துக்கொண்டு திருச்சபையை ஆண்டு நடாத்தி வந்தனர். இங்கே அநேகாயிரம் கிறிஸ்துவர் கள் வேத சாட்சிகளாக மரித்தார்கள். வேத கலக காலங் களில் தங்கள் உயிருக்கே வர இருக்கும் ஆபத்தைக் கவனி யாது, திவ்விய பூசை காணவும், சிநேக தேவத்திரவிய அனு மானத்தை உட்கொள்ளவும், இந்நில அறைகளுக்கு அக் கிறிஸ்துவர்கள் சென்றிருக்கிறார்கள்.

ஆ! கிறிஸ்துவ சகோதரர்களே! நமக்கும் நமது முன்னோர்களுக்குமுள்ள வித்தியாசத்தை உற்று நோக்குங்கள். வலிமை மிகுந்த யானைக்கும் அற்ப பிராணியாகிய கொசுவுக்குமுள்ள தாரதம்மியம் இருக்கின்றதன்றோ? இக்காலத்தில் நம் தேசத்தில் வேதகலாபனை ஒன்றுமில்லை. நம் சத்திய வேதத்தை உண்மையாய் கடைப்பிடித்தொழுக நமக்கு யாதொரு தடங்கலுமில்லை. அதற்கு மாறாக நமக்கு எவ்வளவோ சாதகங்கள் இருக்கின்றன. அவ்விதமிருந்தும் நாம் இருக்கும் மேரையென்ன. நம்மில் எத்தனை பேர் நாள் தோறுமில்லாவிட்டாலும் அடிக்கடி பூசை காணுகிறோம். ஞாயிற்றுக்கிழமை முழுப் பூசை காணவேண்டுமென்று திருச்சபை சட்டமில்லாவிடில் இன்னும் எத்தனை பேர் மாதத்துக்கோர் முறையோ, அல்லது வருஷத்துக்கு ஒரு நாளோ பூசை காண்பார்கள். அடிக்கடி பூசை கண்டாலும் திவ்விய நற்கருணை ஒழுங்காக உட்கொள்ளுபவர் எவ்வளவோ சொற்பம். நமக்கு எத்தனையோ அனுகூலங்கள் இருக்கும் இக்காலங்களில் நாம் இவ்விதமான கத்தோலிக் ஜீவியம் ஜீவித்தால் நாளை ஒருக்கால் வேதகலாபனை வருங்காலத்து நாம் எவ்விதமாய் இருப்போமென்பதை வாசகர்கள் யூகித்துக் கொள்ளவிட்டுவிடுகிறோம். இச்சுரங்கங்களை தரிசிக்கும் பாக்கியம்பெற்ற திருயாத்திரிகள் தினசரி திவ்விய பூசை கண்டும், திவ்விய நற்கருணை அருந்தியும், ஏனைய கிறிஸ்துவர்களுக்கு முன்மாதிரிகை காட்டவேண்டுமென்றும், மற்றச் சகோதர சகோதரிகள் அதைப் பின்பற்றவேண்டுமென்றும் நாம் ஆசிக்கிறோம்.

பகல் 12 மணிக்கு 2-வது "ஜுபிலி" சந்திப்புக்காக அர்ச். சின்னப்பர் தேவாலயத்திற்குச் சென்றோம். சகல பாப்புமார்களுடைய உருவப் படங்கள் வரிசைக்கிரமமாக இக்கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. எப்பக்கமும் தங்க வேலைகளும் அழகான சித்திர வேலைகளும் நிறைந்திருக்கின்றன. சுமார் 75 அடி உயரமுள்ள பளிங்குத் தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவை. மூன்று

பேர் சேர்ந்து ஒரு தூணை அணைக்கமுடியாது. கோவிலின் நீளம், அகலம், உயரமெல்லாம் ஒரே அமைப்பாயிருப்பதால் தூண்கள் சிறிதாகவே தோன்றுகின்றன. கோவிலின் நடுவில் அர்ச். சின்னப்பர் கல்லறை இருக்கிறது. இங்கு எல்லோருக்காகவும் வேண்டிக்கொண்டபின் சாப்பாட்டுக்கு 1 மணிக்கு கன்னியர் மடத்திற்கு திரும்பினோம்.

சாயங்காலம் 4 மணிக்கு பட்டணம் சுற்றிப்பார்க்க மோட்டார்களில் சென்றோம். சமீபத்தில் எடுத்த கணக்கின்படி ரோமையில் 390 பெரிய கோவில்களும், 160 சிறிய கோவில்களும், 53 க்ஷேத்திரங்களும் 44 கிறிஸ்துவக் கல்லறைத் தோட்டங்களும் இருக்கின்றனவாம். கோவில் இல்லாத தெருக்களே கிடையா. மோசேய் நீர் ஊற்று, தியோக்கிலேசியான் அரண்மனை, அமெரிக்கர் விடுதி, விக்டர் எம்மானுவேல் கோபுரம், பூர்வீக ரோமை கோட்டை சுவர்கள், புரோபகண்டா காலேஜ், கான்ஸ்டன்டையின் வாசல், அழகிய பூந்தோட்டங்கள், சர்க்கார் கட்டிடங்கள், இத்தாலிய ஆட்சித் தலைவராய முசலோனியின் வாசஸ்தலம், மற்றும் அநேக மாடமாளிகை கூடகோபுரங்களையும் பார்த்து வியப்படைந்தோம். பூந்தோட்டங்களில் பாப்புமார்களின் உருவங்களும், இத்தாலிய தேசத்து பெரியோர்களின் பளிங்கு சிலைகளும் நிறைய வைக்கப்பட்டிருக்கின்றன. கடைசியாக பூர்வீக கிறிஸ்துவர்களை மிருகங்களுக்கு இரையாகக் கொடுத்த பேரரங்கம் (Amphitheatre) அடைந்தோம்.

ரோமாபுரியே பல வேதசாக்ஷிகளுடைய பாதங்களால் மிதிபட்டும், அவர்களுடைய இரத்தத்தால் அபிஷேகம் பண்ணப்பட்டும் இருந்தபோதிலும் "கொலோசியம்" என்றழைக்கப்படும் இந்த இடம் மிகவும் விசேஷமானது. இக்கட்டிடம் முட்டை வடிவமாக செந்நிற செங்கல்லால் கி. பி. 60-ல் கட்டப்பட்டிருக்கிறது. இதன் குறுக்களவுகள் நீளிய பாகத்தில் 607 அடியும் குறுகிய பாகத்தில் 507 அடியுமிருக்கின்றன. ஒன்றின்மேல் ஒன்றாக நான்கு அடுக்குகளைக்

கொண்டு 160 அடி உயரமிருக்கிறது. இந்த தட்டுகளின் மேல் ஆயிரக்கணக்கான ஜனங்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்க்க ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் சக்கிரவர்த்திக்கும் பிரபுக்களுக்கும் நியமிக்கப்பட்ட தனி இடங்களையும் பார்க்கலாம். ஓர் காலத்தில் ஜனங்கள் ஏராளமாய்க்கூடி சந்தோஷித்து ஆரவாரித்த இந்த இடமானது இப்பொழுது யாதொரு சந்தடியும் ஜனநடமாட்டமு மில்லாத இடமாய் மாறிவிட்டது. இது 6-வது நூற்றுண்டிலிருந்து உபயோகிக்கப்படாமல் பலயிடங்களில் உடைந்து தகர்ந்துப் போய்க் கிடக்கின்றது. இதன் மத்தியில் வேத சாட்சிகளின் ஞாபகார்த்தமாக ஒரு சிலுவை நாட்டப்பட்டிருக்கிறது. 1750-ம் வருஷத்தில் 14-வது பெனடிக்ட்என்னும் பாப்பானவரால் இந்த அரங்கத்தில் சிலுவைப்பாதை ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நாங்கள் சிலுவைப்பாதை செய்யவே இந்த இடத்திற்கு வந்ததால் வந்த காரியத்தை நிறைவேற்றினோம். அப்பொழுது மழை பெய்து கொண்டிருந்தது. சிலுவைப்பாதை முடிந்ததும் மழையில் நனைந்து கொண்டே எங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிவிட்டோம்.

சுரங்க அறைகள்! போரங்கம்!! வேதசாட்சிகள்!!! "நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். மோட்ச இராச்சியம் இவர்களுடையது. என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்து துன்பப்படுத்தி உங்கள்மேல் சகல அவதூறுகளையும் அபாண்டங்களையும் சொல்லும்பொழுது நீங்கள் பாக்கியவான்கள். அப்பொழுது அகமகிழ்ந்து அக்களியுங்கள். ஏனெனில் பரலோகத்தில் உங்கள் சம்பாவனை ஏராளமாய் இருக்கும்".

# அத்தியாயம் 8.

## ரோமாபுரி (தொடர்ச்சி).

### அர்ச். இராயப்பர் தேவாலயம்.

29-ம் தேதி காலை 6-30 மணிக்கு நாங்களெல்லோரும் அர்ச். அந்தோனியார் கோவிலில் பூசை கண்டு நற்கருணை உட்கொண்டோம். 9-மணிக்கு மடத்தில் காலைச் சாப்பாடு முடித்தபின் மோட்டார்களில் ஏறி உலகத்திலேயே பெரியதும் 10 கோடி பவுன்கள் செலவு செய்து கட்டப்பட்டதுமான அர்ச். இராயப்பர் தேவாலயத்தை 3-வது "ஜூபிலி" சந்திப்புக்காக தரிசிக்கச் சென்றோம். இப்பிரமாண்டமான தேவாலயம் 1506-ம் வருஷத்தில் துவக்கப்பட்டு 1626-ம் வருஷத்தில் முடிவடைந்தது. 1775-ல் ஆறுவது பத்திநாதரென்னும் பாப்பானவர் 180,000 பவுன் செலவுசெய்து புது "சக்கிறிஸ்தி" கட்டி முடித்தார்.

ஆகாயத்தை அளாவி நிற்கும் கூண்டையுடைய இக்கோயிலின் முன்முற்றத்தின் அமைப்பே வெகுசிறப்பானது. 650 அடி குறுக்களவும் இரண்டு லக்ஷம் ஜனங்களை உள்ளடக்கக் கூடியதுமான இம்முற்றம் தெற்கேயும் வடக்கேயும் வளைவானதும் தூண்களாலானதுமான மண்டபங்களையுடையதாயிருக்கிறது. 61 அடி தூரத்தில் நான்கு நான்கு தூண்களாக 142 ஸ்தம்பங்களைக்கொண்டு ஒவ்வொரு மண்டபமும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த மண்டபங்களின் மேல் வரிசையாக முற்றத்தைப் பார்த்து சன்னியாச சபைகளை ஸ்தாபித்த அர்ச்சியசிஷ்டவர்களின் 11 அடி உயரமுள்ள 182 அழகிய சுரூபங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. தெற்கேயுள்ள மண்டபம் அர்ச். இராயப்பர் தேவாலயத்தின் படிக்கட்டைத் தொட்டுக்கொண்டும் வடபக்கத்து மண்டபம் வத்திக்கான் மாளிகையோடு முட்டிக்கொண்டும் நிற்கின்றன. முற்றத்தின் கிழக்கே திறப்பும் மேற்கே கோயிலின் படிக்கட்டும் இருக்கின்றன. இம்முற்றத்தின் மத்தியில் எஜிப்திய நான்குமுகக் கூர்நுனிக் கம்பம் ஒன்று

இருக்கிறது. இக்கம்பத்தின் இரு பக்கங்களிலும் தண்ணீர் அலங்காரமாக சதா விழுந்து கொண்டிருக்கும் இரண்டு சூத்திரங்கள் இருக்கின்றன. நம் பரமதயாளு திருச்சபை வழியாய் நமக்கு தேவ இஷ்டப்பிரசாத வரங்களை ஓயாமற் பொழிந்து கொண்டிருப்பதை இச்சூத்திரங்கள் நமக்கு நினைப்பூட்டுவதாக கார்டினல் ஒயிஸ்மென் அறிவித்துள்ளார். கோவிலுக்கு முன் முற்றத்தின் நடுப்பாகத்தில் சிவப்பு சலவைக்கல் பாவி இருக்கின்றது. இந்த இடத்தில் வைத்துதான் முற்காலத்தில் அரசர்களும் சக்கரவர்த்திகளும் முடி சூட்டப்பட்டார்கள். தேவாலயத்தின் முகப்பு 372 அடி அகலமும் 154 அடி உயரமுமாயிருக்கின்றது. இந்த ஆலயத்தின் தலைவாசல் மட்டும் 235 அடி நீளமும் 42 அடி அகலமும் 66 அடி உயரமும் இருக்கின்றது. இந்த முன் கட்டிடத்தின் உள்ளே தூண்களுக்கு மேல் 19 அடி உயரமுள்ள கிறிஸ்துநாதருடையவும் அப்போஸ்தலர்களுடையவும் சுரூபங்கள் இருக்கின்றன. இத்தலைவாசலிலிருந்து கோயிலினுள் செல்ல ஐந்து வாசல்கள் உண்டு. மத்தியிலிருக்கும் இரண்டு வாசல்கள் வெண்கலத்தால் செய்யப்பட்டவை. வலது புறத்திலிருக்கும் கடைசி கதவு "ஜுபிலி" வருஷங்களைத் தவிர மற்ற காலங்களில் அடைபட்டிருக்கும். மத்தியவாசல் வழியாகத் திரையை ஒதுக்கி கொண்டு கோவிலுக்குள் நுழைந்தோம். கோவிலானது ஒரு லத்தீன் சிலுவையைப் போல் சுமார் $5\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கோவிலினுள் நடுப்பாக மட்டும் 619 அடி நீளமும் 84 அடி அகலமும் 133 அடி உயரமுமாயிருக்கிறது. பக்கத்தின் பாகம் 449 அடி நீளமிருக்கிறது. கோவிலின் தளம் பல வர்ணச் சலவைக் கற்களால் பாவப்பட்டிருக்கிறது. கோவிலின் மத்தியில் வலது பக்கத்து தூணோரத்தில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட ஒரு ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் பாவனையாய் அர்ச். இராயப்பருடைய பெரியதோர் வெண்கலச் சுரூபம் இருக்கிறது. கோயிலின் பிரதான பீடம் அர்ச். இராயப்பர் கல்லறை மேலே கூண்டுக்கு நேராக கீழே கட்டப்பட்டிருக்கிறது.

இப்பீடத்தை பாப்பானவர் மட்டும்தான் பூசை செய்ய உப யோகித்துக்கொள்கிறார். இப்பீடத்தின் மேல் ஒரு பெரிய பாலியும் (canopy); அதைத் தாங்கி நாலு முறுக்கு வெண் கலத் தூண்களும் உண்டு. இந்தப் பாலியின் உயரம் 95 அடி. இப்பீடத்திற்கு பின்பக்கம் அர்ச். இராயப்பர் உபயோகித் ததும், இப்பொழுது வெண்கலத் தகடுகளின் உறையிலடை பட்டிருக்கிறதுமான மரச் சிம்மாசனம் வைத்திருக்கும் உய ரமான ஒரு இடம் இருக்கிறது. கோவிலின் மேல் கூண்டு (Dome) 453 அடி உயரம். மனிதர்கள் கட்டி முடித்ததென் பதே ஒரு பெரிய அதிசயம். மேல் கூண்டைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்களும் பீடத்தின் நாலு பக்கங்களிலுமிருக்கின் றன. ஒவ்வொரு தூணின் சுற்றளவு வடக்கன்குளத்தின் கோயிலளவு இருக்கும். இத்தூண்களில் சேசுவின் திரு விலாவில் குத்த உபயோகித்த ஈட்டியும், வெரோணிக்கம் மாள் ஆண்டவரின் திருமுகத்தைத் துடைத்த வஸ்திரமும், திருச்சிலுவையின் ஒரு பாகமும், அர்ச். ஆந்துரு (St. Andrew)வின் தலையும் பூச்சியமாய் வைக்கப்பட்டிருக் கின்றன. இத்தூண்கள் மேலுள்ள வளைவுகளில் நான்கு சுவிசேஷகர்களின் அழகான படங்கள், சித்திரம் வரைவ தில் சிறந்த வல்லுநர்களால் வரையப்பட்டிருக்கின்றன. இதில் அர்ச். லூக்காஸ் கையில் பிடித்திருக்கும் தூவலின் நீளம் மாத்திரம் 7 அடி யென்றால் இப்படங்கள் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று சொல்லாமலே விளங்கும். கோவி லின் நீளத்துக்கும் அகலத்துக்கும் உயரத்துக்கும் தகுந் தாப்போல சுரூபங்களும் படங்களும் பெரிதாகவும் உயர மாகவும் அமைக்கப்பட்டிருப்பதால், நம் கண்களுக்கு இவைகள் எதுவும் பெரிதாகத் தெரியவில்லை.

கூண்டின் உயரத்தைப் பார்க்கப் படிக்கட்டு வழியாகச் ஏறிச் செல்லலாம். படிக்கட்டுகள் கூண்டின் இரண்டு சுவர் களுக்கும் நடுவில் வளைந்து வளைந்து போய்க்கொண்டேயி ருக்கின்றன. அதிக தூரம் சென்றதும் ஒரு கதவு தென் பட அதனுள் சென்றால் கூண்டின் நடுப்பாகத்தில் உள்ளே

இருக்கும் ஓர் உப்பரிகையை அடைகிறோம். அங்கேயிருந்து கோவிலுக்குள் நடமாடும் ஜனங்களைப் பார்த்தால் அவர்கள் ஊரும் எறும்புகளைப் போல் தோன்றுகிறார்கள். திரும்பி மறுபடியும் படிக்கட்டுகளில் ஏற ஏற படிக்கட்டு முடிவதாகத் தெரியவில்லை. கால்கள் அசந்துபோக, மூச்சுத்திணர,.அதிக வருத்தப்பட வேண்டியதிருக்கிறது. "அப்பாடே! ஒரு மட்டும் மேல்பாகத்துக்கு வந்துவிட்டோம். இதென்ன! இவ்வளவு நேரம் நடந்தும் தேவாலயத்தின் மேல்பாகத்தைத் தான் அடைந்திருக்கிறோம். அம்மம்ம! கூண்டின் நுனி இன்னும் எவ்வளவோ உயரத்தில் இருக்கின்றதே. நாம் இப்பொழுதே மூச்சுவிடக் கஷ்டப்படுகிறோம். கால்கள் நோவுகின்றன. சரி சற்றே இளைப்பாறி பின் ஏறுவோம்". தேவாலயத்தின் மேல்பாகத்திலிருந்து ரோமாபுரியையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் நன்றாய்ப் பார்க்கலாம். இன்னும் அநேக படிகளில் ஏறி கூண்டின் உயரமான பாகமாகிய சிலுவையினடியிலிருக்கும் பந்துபோன்ற இடத்தை அடைகிறோம். கீழேயிருந்து பார்க்க இப்பந்தானது ஒரு சிறு இரும்புக் குண்டளவு தெரிகிறது. ஆனால் இப்பந்து எவ்வளவு பெரிதென்றால் அதற்குள் 7 மனிதர்கள் சாதாரணமாய் நிற்கக்கூடிய இடமிருக்கின்றது. இதைப் பார்த்துவிட்டு கீழே இறங்க வேண்டியதுதான். இதற்குள் மூன்று நான்கு மணி நேரமாகின்றது. ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இக்கோவிலின் மகிமையை என்னவென்று சொல்வது. இன்னும் ஒருநாள் பூராவாகவும் தங்கி இக்கோயிலைப் பார்க்க வேண்டுமென்கிற அவா அதிகமாக உண்டாகிறது.

நடுப்பீடத்துக்கு முன்னால் 11 அடிக்கு கீழேயிருக்கும் நில அறையில் அர்ச். இராயப்பருடைய கல்லறை இருக்கிறது. இதை சுற்றி கிராதிகள் வைத்து மிக அழகாய்ச் செய்திருக்கிறார்கள். நில அறைக்குள் இறங்காமலே கோவிலிலிருந்தும் இக்கல்லறையைப் பார்க்கலாம். இதன் பக்கத்தில் பரிசுத்த 10-ம் பத்திநாதரின் கல்லறை இருக்கிறது. இதில் எப்பொழுதும் மெழுகுதிரிகள் எரிந்துகொண்டி

ருக்கின்றன. இதன் பக்கமாய் பல பாப்புமார்களுடையவும் கர்தினல்மார்களுடையவும் கல்லறைகளைக் காணலாம். "ஜூபிலி" பலன்களையடைய உட்கோவில்களைச் சந்தித்தோம். இக்கோவிலினுள் 27 பக்கப்பீடங்களிருக்கின்றன. ஒவ்வொரு பீடமும் ஒவ்வொரு பெரிய கோயிலென்றே சொல்லவேண்டும். இதில் அர்ச். பனிமயமாதாக்கோயில் மிக அழகானது. மாதாவின் சித்திரம் கறுப்பு நிறம். வைரங்கள் இழைத்த தங்க முடி வைக்கப்பட்டிருக்கிறது. வெகு அழகான மொசெயிக் வேலை. இங்கு செபித்த பின் தேவாலயத்தை விட்டு வெளியே வந்தோம்.

---

## அத்தியாயம் 9.

### ரோமாபுரி தொடர்ச்சி.

### காட்சி சாலைகள்—தேவாலயங்கள்.

அர்ச். இராயப்பர் கோவிலிலிருந்து எல்லாரும் பக்கத்திலிருக்கும் வத்திக்கான் கண்காட்சி சாலைக்குப் போனோம். இப்பலபொருட் களஞ்சியம் உலகத்திலேயே பெரியது என்று சொல்லுகிறார்கள். சரியாய்ப் பார்க்கவேண்டுமானால் ஒரு வாரமாகும். ஆனால் நாங்கள் ஒரு மணி நேரத்தில் விரைவாகச் சுற்றிப்பார்த்தோம். அழகாக அமைக்கப்பட்டிருக்கும் மிகவும் பேர்போனதும் விலையுயர்ந்ததுமான கொத்து வேலைகள், சிற்ப வேலைகள், சுரூபங்கள், படங்கள், இன்னும் பல அபரிமிதமான சாமான்கள், ஒருவன் தன் கண்களால் இமைகொட்டாமல் பார்த்து மெச்சத்தக்க விதமாயும், நவமாயுமிருக்கின்றன. அதில் ரபேல் என்னும் உலகப்பிரசித்திபெற்ற சித்திரக்காரர் எழுதிய ஆண்டவரின் மறு ரூபமான படம் அதிக அழகாக இருக்கின்றது. அவசரமாக இவைகளைப் பார்த்துவிட்டு வத்திக்கான் புஸ்தக சாலைக்குச் சென்றோம். உலகிலே பல பாஷைகளிலும் பல தேசங்களிலும் அச்சிடப்படும் வேதப் புஸ்தகங்களின் ஒவ்வொரு பிரதிகள் இங்கே யிருக்கின்றன. இப்புஸ்தக சாலையிலுள்ள

அச்சுப் புஸ்தகங்கள் ஐம்பது லக்ஷத்துக்கு அதிகம்; கையெழுத்துப் பிரதிகள் ஐம்பதினுயிரம். இப்பிரதிகளின் பெயரும் இவைகளை எழுதினவர்களின் பெயரும் 134 புஸ்தகங்களில் அடங்கியிருக்கின்றன. நமது ஆண்டவரின் சுய பாஷையாகிய எபிரேயப் பாஷைப் பிரதிகளும் பலவுள. அர்ச். சவேரியார் இந்தியாவிலிருந்து எழுதிய கடிதமொன்று இங்கேயிருக்கிறது. இப்புஸ்தகசாலை உலகத்தில் முதல் தரமானதும் மிகவும் பழமையானதுமென்பது சாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

இவைகளைப் பார்வையிட்ட பின் முன்அறைக்கு வந்து வத்திக்கான் முத்திரை ஒட்டிய தபால் கார்டுகள் வாங்கி எழுதத் துவக்கினேன். அதற்குள் அநேக ஐரோப்பியர்கள் என்னிடம் வந்து என் கையொப்பத்தைக் கேட்டார்கள். அதனுல் எல்லாக் கடிதங்களையும் என்னுல் எழுதமுடியவில்லை.

பின் நாங்கள் மடத்துக்குத் திரும்பி சாப்பிட்டுவிட்டு சற்று களைப்பாறினேம். மாலை 5 மணிக்கு சேசு சபையாரின் பிரதமக் கோயிலாகிய சேசு இரட்சகரின் கோயிலுக்குச் சென்றேம். இக்கோயிலின் நடுப்பீடம் ரோமாபுரியிலுள்ள எல்லா பீடங்களிலும் அதிக அழகும் விலையுமுள்ளது. பீடத்தின் கீழ் அர்ச். இஞ்ஞாசியாருடைய கல்லறை இருக்கிறது. வலது பக்கமிருக்கும் பீடத்தில் அர்ச். சவேரியாருடைய அழியாத கை ஒரு தங்கப்பேழையில் வைக்கப்பட்டிருக்கிறது. இடது பக்கம் அர்ச். இஞ்ஞாசியாருடைய பீடமிருக்கிறது. நடுப்பீடத்தில் மெழுகுதிரிகள் எரிந்து கொண்டிருந்தன. அன்று பெரிய வியாழக்கிழமை யாதலால் கோவில் நிறைய ஆட்களிருந்தனர். கோயிலில் செபித்த பின் கிரகோரியின் கல்விக்கழகம் சென்று சேசு சபையின் அதிசிரேஷ்ட ஜெனரலாகிய பெரிய குருசுவாமியாரை சர்வ கலாசாலை சபாமண்டபத்தில் சந்தித்து அவர் ஆசீரைப் பெற்றேம். திருயாத்திரிகள் எல்லோரும் அவர் கரங்களை முத்தி செய்தனர்.

68046

Qb:4198
N35

அதன்பின் பக்கத்திலிருக்கும் அர்ச். இஞ்ஞாசியார் கோவிலை யடைந்தோம். அழகான இக்கோவிலின்மேல் அர்ச். ஞானப்பிரகாசியாரும், அர்ச். பெர்க்மான்ஸ் அருளப்பரும் நவசந்நியாசிகளாக இருந்த காலத்து வசித்த அறைகள் இருக்கின்றன. இதில் அர்ச். ஞானப்பிரகாசியாரின் சரியான சாயலுள்ள ஒரு சுரூபம் உளது. அத்தோடு அவருடைய ஐந்தடி சங்கிலி, பாதரட்சை, அவருடையவும் அர்ச். இஞ்ஞாசியாருடையவும் கையெழுத்துக் கடிதங்கள் முதலிய அர்ச்சியசிஷ்ட பண்டங்களுமிருக்கின்றன. இவைகளை முத்திசெய்து செபித்தபின் மேல்மாடியிலிருந்து படிகளின் வழியாக கீழே யிறங்கினோம்.

30-ம் தேதி பெரிய வெள்ளிக்கிழமையன்று காலை 7-30 மணிக்கு அர்ச். அருளப்பர் தேவாலயத்தில் "போந்திபிக்கல்" பூசைச் சடங்கு காண நடந்துபோனோம். அங்கே எங்களுக்கென்று ஒதுக்கிவைக்கப்பட்ட இடத்திலிருந்து நன்றாய் எல்லாவற்றையும் கவனித்தோம். மேற்றிராணிமார்களும் குருக்களுமாக சுமார் 200 பேர் சந்நிதியிலிருந்தார்கள். சடங்கு வெகு பக்தியாகவும் உருக்கமாகவும் இருந்தது. நடுப்பகல் 12 மணிக்கு முடிந்தது.

இக்கோவிலிலிருந்து இதற்கு சற்றெதிராகவுள்ள "காலாசாந்தா" என்னும் தேவாலயத்தை யடைந்தோம். ஜெருசலேமில் பிலாத்துவின் அரண்மனையிலிருந்த 28 படிகள் இங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிகளை வரிசையாக வைத்து இரு பக்கங்களிலும் இதோடு சமமாக சாதாரண படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. நடு வரிசையிலுள்ள மெய்யான திருப்படிகள் மரத்தினால் பொதியப்பட்டிருக்கின்றன. இப்படிகளின் வழியாக நம் யேசு அநேக தடவை ஏறியும் இறங்கியுமிருக்கிறார். நம் இரட்சகர் கற்றூணில் கட்டுண்டு அடிபட்டு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் மட்டும் ஒரே காயமாகி இரத்தம் வடிந்துகொண்டிருக்க, அவரை இப்படிகளின் வழியாக பிலாத்தனண்டை தள்ளிக்கொண்டு போனார்கள். அப்பொழுது

அவருடைய காயங்களிலிருந்து இரத்தம் இப்படிகளின் மேல் இரண்டு இடங்களில் விழுந்திருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் கண்ணுடி மூடிகள் போட்டிருக்கிருர்கள். இப்படிகளில் முழங்காலிலேயே மேலே போய் பக்கத்து படிகளின் வழியாக கீழே நடந்து வர வேண்டும். இப் படிகளில் ஏறும்பொழுது சொல்லவேண்டிய செபங்களைப் பற்றிய ஓர் துண்டுப்பிரசுரம் நாங்கள் கோயிலுக்குள் பிர வேசிக்கும்பொழுது எங்களுக்கு கொடுக்கப்பட்டது. நாங் கள் ஆறு ஆறு பேராக வரிசையாக முழங்காலில் இந்த அர்ச்சிக்கப்பட்ட படிகளில் ஏறி கண்ணுடி மூடிகளை முத்தி செய்து மேல் மட்டத்திற்கு வந்தோம். அங்கு ஓர் தாழ்ந்த மேசையில் பாடுபட்ட சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னுல் சுவரில் கிறிஸ்துநாதரின் அழகிய படம் வரையப்பட்டிருக்கிறது.

மாலை 4-மணிக்கு "சாந்தாகுருஸ்" என்ற தேவாலயத் தில் நடந்த அர்ச்சியசிஷ்ட பண்டங்களின் சுற்றுப் பிரகாரத் திற்குச் சென்ருேம். இந்தத் தேவாலயத்தை ரோமையின் ஜெருசலேமென்றழைக்கிருர்கள். லக்ஷக்கணக்கான ஜனங் கள் குழுமியிருந்தனர். மழைபெய்து கொண்டிருந்ததால் சுற்றுப்பிரகாரம் கோவிலினுள்ளேயே நடந்தது. இவ்வால யத்தில் சிறந்த சில திருப்பாடுகளின் அர்ச்சியசிஷ்ட பண்டங் கள் இருக்கின்றன. உண்மையான திருச்சிலுவையின் பாகத் தைக் கொண்டு 3 அடி உயரத்தில் ஓர் சிலுவைசெய்து தங் கத்தாலும் கண்ணுடியாலுமான ஓர் பேழையில் வைக்கப் பட்டிருக்கிறது. ஆண்டவரின் திரு முள்முடியிலுள்ள இரண்டு முட்கள், 5 அங்குல நீளமுள்ள ஒரு திரு ஆணி, பச்சாத்தாபக் கள்ளனின் சிலுவை முதலியவற்றைப் பார்வை யிட்டோம். மகா மாட்சிமை தங்கிய கர்தினல் பியாண்டி ஆண்டவரவர்கள் திருச்சிலுவைத் துண்டையும், ஓர் இத் தாலிய மேற்றிராணியார் திருஆணியையும், தூத்துக்குடி மேற்றிராணியார் திருமுட்களையும் ஏந்திச் சுற்றுப்பிரகார மாக வந்தனர். இச்சுற்றுப்பிரகாரத்தோடு நாங்களும்

கலந்து கொண்டோம். வரிசையில் முதலாவதாக நான் நான்கு கிளைகளையுடைய ஓர் மெழுகுதிரியை பிடித்துச் சென்றேன். சுற்றுப்பிரகாரம் வெகு பக்தியாகவும் உருக்கமாகவும் இருந்தது.

31-ம் தேதி காலை மடத்தில் பூசைகண்டு நற்கருணை உட்கொண்ட பின் பரிசுத்த தேவதாயின் 'மேஜர்' தேவாலயம் என்னும் பனிமய மாதாக் கோயிலுக்கு 4-வது 'ஜுபிலி' சந்திப்புக்காகச் சென்றோம். இக்கோவில் அதின் பழமையின் பெருமையால் "மேஜர்" என நாமம் பூண்டது. தேவமாதா கி. பி. 352-ல் பாப்பானவருக்கும், ஜோனஸ் என்ற பிரபுக்கும், அவர் மனைவிக்கும் காட்சி கொடுத்து எஸ்குயிலின் மலையில் பனி உறைந்திருக்கும் இடத்தில் ஓர் கோவில் கட்ட கொடுத்த கட்டளைப்படி இந்த தேவாலயம் அப்பிரபுவால் கட்டப்பட்டது. இதுவே நித்திய நகரமாகிய ரோமாபுரியில் தேவதாயின் மகிமைக்கென உயர்த்தப்பட்ட பிரமாண்டமான முதல் தேவாலயம். இது வெகு நேர்த்தியான பெரிய கோவில். இதில் அர்ச். லூக்காஸ் எழுதத் துவக்கி சம்மனசினால் முடிக்கப்பட்ட தேவதாயின் படம் பீடத்தின்மேல் தொங்குகிறது. இது கறுப்பு நிறமானதே. வெகு அழகான இப்படத்தின் முன்னால் நூற்றுக்கணக்கான அப்பரமதாயின் பக்தர்கள் பக்தியோடு செபித்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் முழங்காலிலிருந்து வேண்டிக் கொண்டோம். 36 பளிங்கு கல் தூண்களும், பலவர்ணங்களமைந்த சுவர்களும், தங்க முலாம் பூசிய அழகான மரக் கூரையும் இக்கோவிலைச் சிறப்பிக்கின்றன. பிரதான பீடத்தினடியில் அப்போஸ்தலர் அர்ச். மத்தேயுவின் திருஎலும்புகள் இருக்கின்றன. இப்பீடத்துக்கு முன் தாழ்வாய் கட்டப்பட்ட ஒரு பளிங்குக் குகையில் குழந்தை சேசுவின் குடிலிலுள்ள இரண்டு பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பலகைகள் ஒரு அழகான தங்கப் பேழையில் இருக்கின்றன. பக்கத்தில் லொரொத்தாவில் இருக்கும் தேவமாதா வீட்டின் சாயலாக




அர்ச். மரியாயின் மேஜர் தேவாலயம் — ரோமாபுரி

ஒரு வீடு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இத்தோடு எங்கள் "ஜுபிலி" சந்திப்பு முடிந்தது. இந்தத் திருயாத்திரையில் சேர்ந்து ஜுபிலிப் பலன்களையடைய உதவி செய்த கர்த்தருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்தி தோத்தரித்தோம். அன்று பெரிய சனிக்கிழமை யாதலால் சடங்கும் பூசையும் 8 மணிக்குத் துவக்கி 12 மணிக்கு முடிந்தது.

சாயங்காலம் அர்ச். அருளப்பரின் ஆலயத்தைச் சார்ந்த பிரமாண்டமான மிசினெரி பொருட் காட்சிசாலையைப் பார்வையிட்டோம். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலிருந்தும் வந்த பலவித சாமான்கள் இங்கே அந்த அந்த தேசத்திற்கு குறிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் தனித்தனி இடங்கள் இருக்கின்றன். நாங்கள் பாப்பரசருக்கு பாத காணிக்கையாக அளித்த பல பொருட்களும் இக்காட்சிசாலையில் வைக்கப்படும். இத்தகைய நூதனசாலையை நடப்பிக்கக் கூடிய அரசர் பாப்பானவர் ஒருவரேயாவர். இச்சாலையைப் பார்வையிடுகிறது உலகத்தையே சுற்றிப் பார்ப்பதற்கு சமானமாகும். ஒவ்வொரு தேசத்துக்கும் உரியதான தட்டுமுட்டுச் சாமான்கள், சிற்பவேலைகள், பாத்திரங்கள், படங்கள் மற்றும் பற்பல சாமான்களால் இச்சாலை நிரப்பப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேசத்திலுள்ள ஆண் பெண்களுடைய சிலைகள் செய்து, அவரவர்கள் உபயோகிக்கும் உடைகளை அச்சிலைகளுக்கு உடுத்தி கண்ணாடிக் கூடுகளில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வளவு சாமான்களையும் ஒழுங்காகவும் அழகாகவும் அமைத்திருக்கும் மேரையானது கண்களைக் கவர்கின்றன. பதினைந்து நாட்கள் இச்சாலையில் செலவழித்தாலும் மனம் திருப்தியடையாது. ஒரு மணி நேரத்தில் விரைவாகப் பார்த்துவிட்டு எங்கள் தங்குமிடங்களுக்குத் திரும்பினோம்.

# அத்தியாயம் 10.

## ரோமாபுரி ( தொடர்ச்சி ).

## அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுக்கும் சடங்கு.

முத்திப்பேறு பெற்ற டொன்போஸ்கோவுக்கு அர்ச்சிய சிஷ்ட பட்டம் கொடுக்கும் காட்சியை கண்டு களிகூற அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமாய் நித்திரையிலாழ்ந்த நாங்கள் ஏப்பிரல்மீ 1-ம் தேதி உயிர்த்த ஞாயிறன்று காலை 4-30 மணிக்கு விழித்தோம். கன்னியர் மடத்தில் பூசை கண்டு திவ்விய நற்கருணை அருந்திய பின் காலை போஜனத்தை முடித்தோம். பின் வெகு ஆவலோடு புறப்பட்டு எழு மணிக்கு அர்ச். இராயப்பர் தேவாலயத்தை அடைந்தோம். அத்தேவாலயத்தின் பெரிய முற்றம் ஒரே தலைகள் மயமாக இருந்தது. இரண்டு லக்ஷத்துக்கு அதிகமான ஜனங்கள் அங்கே குழுமியிருந்தார்கள். நாங்கள் தலைவாசலையடைந்து எங்கள் சீட்டைக் காண்பித்ததும் ஒருவர் தேவாலயத்தினுள் எங்களை அழைத்துக் கொண்டுபோய் பிரதான பீடத்துக்கு முன்னால் 60 அடி தூரத்திலுள்ள எங்களுக்காக குறிக்கப்பட்ட இடத்தில் கொண்டு விட்டார். இப் பிரத்தியேகமான இடம் இந்திய திருயாத்திரிகளுக்கு சென்னை சரி. வந். மெதர்லே ஆண்டவரவர்களின் அரிய பிரயாசையால் கிடைத்தது. சுமார் 90,000 ஜனங்கள் கோயிலுக்குள்ளிருந்தனர். அழகுக்கு அழகு செய்வதுபோல் இத்தேவாலயத்தை கண்களைக் கவரவல்ல அழகிய படங்களையுடைய கொடிகளாலும், பலவர்ண தோரணங்களாலும், மலர் மாலைகளாலும் அலங்கரித்திருந்தனர். பொற்சரிகையினால் சித்திரவேலை செய்யப்பெற்ற மிக்க விலையுள்ள பட்டு பீதாம்பரங்களினால் பீடங்கள் எல்லாம் சிங்காரிக்கப்பட்டிருந்தன.

8¼ மணிக்கு குருக்கள் ஆயிரக்கணக்காய் வரிசையாக வந்தனர். பின் டொன்போஸ்கோவின் உருவக்கொடி வெகு விமரிசையாகக் கொண்டுவரப்பட்டது. இரும்பு உடையும்



பரிசுத்த பாப்பரசர் அர்ச். இராயப்பர் தேவாலயத்திற்கு பவனி செல்லுதல்.

தொப்பியும் தரித்த வீரர்களும், சுவிஸ் படைக் காவலரும், பிரபு குல காவலாளர்களும் தங்கள் தங்கள் விசேஷித்த விலை யுயர்ந்த பிரகாசமான உடுப்புகளோடு அணிவகுத்து நின்ற காட்சியை என்னென்று சொல்வது. இராணுவ அதிகாரிகள் அங்கும் இங்கும் திரிந்தார்கள். எல்லாரும் தங்க வேலைப்பாடு செய்த உடுப்புகளும் ஆயுதங்களும் அணிந்திருந்தது வெகு சிறப்பாயிருந்தது. பூலோக அரசர்கள் எவர்களிடத்திலும் இத்தகைய உயர்தர உடை தரித்த காவலாளர்கள் கிடை யாது. $9\frac{1}{4}$ மணிக்கு ஏறக்குறைய 100 அதிமேற்றிராணி மார், மேற்றிராணிமார்களும் அவர்களுக்குரிய ஆடை ஆபர ணங்களோடு அலங்காரமாக உள்ளே வந்தனர். இவர்களுக் குப்பின் இத்தாலி இளவரசரும், சயாம் தேசத்து அரசரும் அரசியும் ஐரோப்பிய உடைகளில் தங்கள் மெய்க்காப்பாள ரோடு விஜயம் செய்தனர்.

வெள்ளி ஊதுகுழல்களின் சப்தங்கள் தொனிக்க, ஜனங் கள் "பாப்பானவர் நீடூழி வாழ்க" என்று குதூகலத்துடன் ஆர்ப்பரிக்க, 25 கர்தினால்மார்கள் அணிவகுத்து முன் நடக்க, நம் பரிசுத்த பாப்பரசரை நாற்காலி போன்ற பொற்சிவிகையின் மேல் தூக்கிக்கொண்டு பவனி வந்தனர். பரிசுத்த பாப்பரசர் தங்கத்தாலும் இரத்தினங்களாலும் இழைத்த முக்கிரீடம் அணிந்திருந்தார். 1100 வருஷங் களுக்கு முன் பெரிய சார்லஸ் சக்கரவர்த்தி எந்த ஆடைகளை அணிந்தாரென்று சொல்லப்படுகிறதோ அந்த ஆடைகளையே நம் பரிசுத்த பிதா அணிந்திருந்தார். இத்தனை சீருடனும் சிறப்புடனும் நம் பரிசுத்த பிதாவைச் சுமந்துகொண்டு வந் தது எங்கள் மனதுக்கு எவ்வளவோ ஆனந்தத்தைக் கொடுத் தது. பாப்பானவர் தனது தெய்வீக ஒளிவீசும் முகத்தில் புன்னகை தாண்டவமாட, இரு பக்கமும் திரும்பித் திரும்பி ஆசிர்வாதம் கொடுத்துக்கொண்டே போனார். இது ஒரு அரிய காட்சியே. பளிச்சென்று தேவாலயத்தினுள் 50,000-க்கு மேலான மின்சார விளக்குகள் ஏற்றப்பட்டு கோவில் ஒரே பிரகாசமாயிருந்தது. பிரஜைகளின் நடுவே இராஜனுகவும்

பிள்ளைகளினூடே நல்ல தகப்பனாகவும், விசுவாசிகளி னிடையே கிறிஸ்துவின் பிரதிநிதியாகவும் இதோ பாப்பரசர் வருகிறார். எங்கள் பக்கமாக வருகிறார். எங்களைப் பார்த்து ஆசீர்வதிக்கிறார். அன்பினால் பிரகாசிக்கும் அவருடைய கூர்மையான கண்களைப் பார்க்கிறோம். தங்க நாற்காலி, தங்கக் கிரீடம், தங்க உடைகள் எல்லாம் மின்சார வெளிச்சத்தில் ஜொலிக்கின்றன. எங்கள் தொண்டை கிழிய "பாப்பான வர் நீடூழி வாழ்க" என்று ஆனந்தத்துடன் கத்துகிறோம். இக்காட்சி மிக்க மாட்சியாயிருந்தது. மனத்தில் ஓர் வகைக் களிப்புத் தோன்றிற்று. தேகத்தில் மயிர்ச் சிலிர்ப்பு உண் டாயிற்று. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. பீடத்தின் பக்கம் சென்றதும் பாப்பானவர் இறங்கி, பின்னால் உயரமான இடத்திலிருக்கும் அர்ச். இராயப்பருடைய நாற்காலியில் அமருகிறார்.

அண்ட சராசரங்களையும் அமைத்த அமலன் அன்பின் தேவத்திரவிய அனுமானத்தில் வீற்றிருக்கிறதையும், பிரதிநிதியாகிய பாப்பானவர், அதிமேற்றிராணிமார், மேற் றிராணிமார்கள், குருக்கள் முதலிய தேவ ஊழியர்களும், ராஜாக்கள், ராணிகள், பிரபுக்கள், சீமாட்டிகள், தனவந்தர் முதலிய பெரியோரும், மெய்க்காப்பாளர், படைவீரர், "சுவிஸ் கார்டு" என்னும் சேனை வீரர், மற்றும் பல இராணுவ உத்தி யோகஸ்தர்களும், அமெரிக்கர், ஜப்பானியர், இத்தாலியர், இந்தியர், பிரஞ்சுக்காரர், இன்னும் பல தேசங்களிலிருந்து வந்திருக்கும் பலபாஷைகள் பேசக்கூடிய பிரஜைகளும், சற் பிரசாதத்தில் இருக்கும் அந்தத் திரிலோக ராயனைச் சுற்றி யிருக்கிறதையும் உலகத்திலே பெரியதும் மேன்மையானதும் சுமார் அரை லக்ஷம் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட் டதுமான இந்தத் தேவாலயத்தில் கண் குளிரக் கண்டு களித்தவர்கள் பாக்கியவான்களன்றோ. எங்கள் இருதயங்கள் உள்ளப் பூரிப்பால் வெடித்துவிடும்போலிருந்தன.

$9\frac{3}{4}$ மணிக்கு சடங்கு துவக்கிற்று. சத்தமும் அடங் கிற்று. பூசை பீடத்தில் 24 மெழுகுவர்த்திகள் மாத்திரம்

எரிந்து கொண்டிருந்தன. அர்ச். இராயப்பர் பீடத்தில் 60 வாடாளண்ணெய் விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந் தன. இரண்டு கர்தினால்மார்களும், பல மேற்றிராணி மார்களும், பாப்பானவருக்கு இச்சடங்கில் உதவி செய் தார்கள். அப்படி உதவி செய்யப் பாக்கியம் பெற்றவர் களில் நம் தூத்துக்குடி ரோச் ஆண்டவரவர்களும் ஒருவர். டொன்போஸ்கோவின் அர்ச்சியசிஷ்ட பட்டத்திற்காக வேண்டிய நடபடிக்கைகளெல்லாம் நடத்திவந்த கர்தினால் ஆண்டவர் பாப்பானவர் சிம்மாசனத்தண்டைபோய் முழங் காலில் நின்று முத்திப்பேறு பெற்ற டொன்போஸ்கோவுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுக்கவேணுமென்று கேட்கிறார். பாப்பானவர் பேரால் ஒரு மேற்றிராணியார் "இப்பேர்ப்பட்ட முக்கியமான காரியங்களுக்கு விசேஷ செபங்கள் செபிக்கப் படவேண்டும்" என்று பதில் சொல்லுகிறார். பாப்பா னவர் சிம்மாசனத்திலிருந்து இறங்கி முழங்காலில் நிற்க எல் லோருமே அவ்விதம் செய்கிறார்கள். அர்ச்சியசிஷ்டவர்கள் பிரார்த்தனை பாடகர்களால் பாடப்படுகிறது. இது முடிந்த தும் பாப்பானவர் சிம்மாசனத்தில் ஏறி உட்காருகிறார். மறுபடியும் அந்தக் கருதினால் மேலே சொன்னவாறு விண் ணப்பித்துக் கொள்கிறார். அதற்கு மேற்றிராணியார், "அதிக செபங்கள் செபிக்கவேண்டும்" என்கிறார். எல்லாரும் முழங் காலில் நின்று "மிசெரெரெ" பாடுகிறார்கள். அதன்பின் மூன் றுவதாக அந்தக் கர்தினால் பாப்பானவரை வேண்டிக் கொள்ள, "இன்னும் அதிக செபங்கள் செபிக்கவேண்டும்" என்று பதில் வருகிறது. அப்பொழுது பாப்பானவர் எழுந்து, உதவிசெய்யும் கர்தினால் தனக்கு முன்னால் பிடித்துக் கொண்டிருக்கும் புஸ்தகத்திலிருந்து "வேனி கிரியேத்தோர்" (Veni Creator) என்னும் கீதத்தை பாடுகிறார். இது முடிந் ததும் அங்கு குழுமியிருக்கும் ஜனங்கள் முன்னாலே வந்து நிற்கிறார். 90,000 ஜனங்களும் நின்றுகொண்டு அவரு டைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளை கிரகிக்க ஆவலு டன் அவரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எங்கும் அமைதியே ஆள்கிறது. தவறுவரம் பெற்ற பாப்பா

னவர் இதோ தனது தீர்ப்பைச் சொல்லப்போகிறார். கடைசி நேரம் வந்துவிட்டது. அவாவுடன் காத்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு வருஷம் போலிருக்கிறது. அன்பே உருவெடுத்து வந்த அந்த நல்ல தந்தை பக்தியும் உருக்கமும் நிறைந்த தொனியில் தெளிவாக "டோன்போஸ்கோ உண்மையாக ஒரு அர்ச்சியசிஷ்டவரே" என்று உரைக்கிறார். வார்த்தைகள் காதில் விழுந்தது தான் தாமதம் ஜனங்களெல்லோரும் ஒரே சத்தமாய் "டொன்போஸ்கோ வாழ்க" என்று உரக்கக் கூவி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கோவிலே அதிர்ச்சி கொள்ளும் பான்மையாய் மங்கள வாழ்த்துகள் உரைத்து களிகூருகிறார்கள். அக்களிப்பால் இவர்கள் இடும் சப்தமானது கோடையிடிக்கு சமானமாயிருக்கின்றது. மனம் பூரித்து, உடல் புளகித்து, அளவிடற்கரிய அகமகிழ்ச்சி அடைந்தவராய்க் கடவுளைத் துதித்தனர். களிப்பின் மிகுதியால் கண்ணீர் சொரிந்தனர். புதிய அர்ச்சியசிஷ்டவரை வாயார வாழ்த்தினர். கோவிலின் பல பாகங்களிலும் வெளியிலும் வைத்திருக்கும் ஒலி பெருக்கும் கருவிகள் இச்சுப செய்தியை எல்லோருக்கும் தெரிவிக்கின்றன. அக்கணமே அர்ச். இராயப்பர் தேவாலயத்தின் உன்னத வில்மாடத்தில் எக்காளங்கள் தொனிக்க, பாடகர்கள் பாட, வாத்தியங்கள் முழங்க, அக்கோயில் மணிகளும் கலகலவெனக் குதூகல ஆரவாரத்துடன் சப்தித்தன. இம்மணிகளின் சப்தத்தினால் எதிரொலி கிளம்புவதுபோல் அந்நகரிலுள்ள 400-க்கு அதிகத் தொகையான கோயில்களின் மணிகளெல்லாம் சந்தோஷமாய் ஒலிக்க, நகர முழுவதும் மணியோசையால் நிரம்பிற்று.

உத்தமனும் பரகதிவாழ் வடைந்த பின்னர்
உந்தமாம் இவன் ஒழுக்கால் உளம்பூரித்த
சத்தியமெய்த் திருச்சபையார் களிக்க வேதத்
தலைவனெனுஞ் சிஷ்டபாப்பு தகையி னாற்கு
நித்திய அர்ச் சியசிஷ்ட பட்டஞ் சூட்டி
நீணிலத்தில் அபிஷேகச் சடங்கும் ஆற்றிப்
பக்தியுடன் இவன்விழவெங் கும்கொண் டாடப்
பணித்திட்டான் உலகோரும் பணிந்திட் டாரே.

என்று ஸ்ரீபகார்த்த விலாசத்தில் பண்டித டி. சவரிராய பிள்ளை பாடியிருப்பதுபோல் சலேசியன் சபையை ஸ்தாபித்தவரும் குருப்பிரசாதியுமான டொன்போஸ்கோவுக்கு திருச்சபையின் மகிமைப்பிரதாபமான பட்டம் கொடுக்கப்பட்டது. சர்வ வல்லபர் தனது திராட்சை தோட்டத்தில், அயராது உழைத்து வந்த நல்ல ஊழியக்காரனுக்கு கொடுக்கும் சன்மானம் இது. இப்பெரிய பட்டத்துக்கு தனது அருமைச் சிநேகிதரான டொன்போஸ்கோவை உயர்த்திய நம் பரிசுத்த பிதா 11-ம் பத்திநாதர் எவ்வளவோ அகமகிழ்ச்சி கொண்டிருப்பர். வானுலகத்தில் தனக்காகவும் தனது மந்தைக்காகவும் ஆண்டவரிடம் மன்றாட இதோ ஒரு அர்ச்சியசிஷ்ட வரைக் கூடச்சேர்த்திருக்கிறார்.

"தே தேயும்" பாடினார்கள். இந்த மகத்தான காட்சியை காண உதவிசெய்த பரமாத்மாவுக்கு நாங்களும் நன்றியறிதல் செலுத்தினோம். பாட்டு முடிந்ததும் பாப்பானவர் பூசை உடுப்பு அணிந்துகொண்டு, பாப்பானவர்கள் மட்டும் பூசை செய்கிற பீடத்தண்டை போகிறார். இப்பீடம் மேலே மட்டமாக பாப்பானவரை எப்பக்கத்திலிருந்தும் ஜனங்கள் பார்க்கக்கூடிய விதமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆறு மெழுகுதிரிகள் மட்டும் பீடத்தின்மேல் எரிகின்றன. வேறு புஸ்பங்கள் பூச்செண்டுகள் ஒன்றும் கிடையா. பாப்பானவர் உபயோகிக்கும் பூசை பாத்திரம் வைரங்களால் இழைக்கப்பட்டு அதிக விலையுயர்ந்ததாய் தோன்றுகிறது. இக்கோவிலுக்கு பாடகர்கள் அமைந்ததே ஒரு விசேஷம். என்ன அருமையான சாரீரம். பேர்போன கவிஞராகிய மென்சிஞ்ஞோர் டோன்லொரென்சோ பிரோசி என்பவரால் பாட்டுகள் கட்டப்பட்டு அவராலேயே பழக்கப்பட்ட பாடகர்கள் பாடுவதென்றால் எத்தனை சிறப்பாயிருக்குமென்பதை நான் சொல்லத் தேவையில்லை. பாட்டுகள் ஒலி பெருக்கும் கருவிகளால் நாற்பக்கமும் கேட்கப்படுகின்றன.

பரிபூரண பலன் கொண்ட ஆசீர்வாதத்தோடு பூசை பகல் $1\frac{1}{2}$ மணிக்கு முடிந்தது. பாப்பானவர் தனது தங்க

சிவிகையில் ஏறி உட்கார்ந்து கொள்கிறார். எங்கள் பக்கமாக இன்னொரு தடவை பாப்பானவர் வருகிறார். இவரை இவ்வளவு சமீபத்தில் இந்தக்கோலத்தில் இனி என்று பார்க்கப் போகிறோம். பாப்பானவரை தூக்கிக்கொண்டு தேவாலயத்தின் பலகணிக்குப் போகிறார்கள். கோவிலிலிருந்த ஜனங்களெல்லாம் வெளியே முற்றத்திற்கு வருகிறார்கள். இப்பொழுது மழை பெய்து கொண்டிருக்கிறது. தேவாலயத்தின் மெத்தை முகப்புக்கு பாப்பானவர் வருகிறதை கீழே முற்றத்தில் கூடியிருக்கும் சுமார் 3 லக்ஷத்திற்கு அதிகப்பட்ட ஜனங்கள், மழையைக்கூட கவனியாது, மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். சாளரத்தில் பாப்பானவர் தோன்றியதும் ஜனங்கள் எல்லோரும் ஆனந்தம் பெருகியவர்களாய் கரகோஷம் செய்கிறார்கள். தங்கள் தொப்பிகளையும் கைக்குட்டைகளையும் எடுத்து வீசுகிறார்கள். எங்கும் ஒரே குதூகலம். அவர்களுடைய கரகோஷம் முடிவடையாதென்று சமுசயிக்கவேண்டியதிருந்தது. அவ்வளவு உற்சாகத்துடன் ஜனங்கள் தங்கள் பேரானந்தத்தை தெரிவித்துக்கொண்டனர். கடைசியில் கரகோஷம் ஒருவாறு நின்று எங்கும் அமைதி எற்பட்டது. அச்சமயத்தில் பரிசுத்த பிதா அங்கு குழுமியிருந்த ஜனங்களுக்கும் உலகத்திலுள்ள மக்களுக்கும் "Urbi et orbi" என்ற ஆசிர்வாதத்தை அளித்தனர். வாத்தியங்கள் முழங்க, ஜனங்கள் "பாப்பானவர் நீடூழி வாழ்க" என்று சப்தமிட்டு ஆர்ப்பரிக்க, பாப்பானவர் சிம்மாசனத்துடன் கொண்டுசெல்லப்பட்டார். சடங்கு இவ்விதம் இனிது முடிந்தது. மழையில் நனைந்துகொண்டே மோட்டார்களில் ஏறி மடத்துக்கு வந்துசேர்ந்தோம்.

---

## அத்தியாயம் 11.

### ரோமாபுரி (தொடர்ச்சி).

மோட்டார்களில் போகும்பொழுதும், மடத்திலும், ஏன்! அன்று முழுதுமே யாபேரும் தாங்கள் அர்ச். இராயப்பர்

தேவாலயத்தில் கண்டதையும் கேட்டதையும் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்படியானால் இந்த மகத்தான காட்சி எங்களிருதயங்களில் எத்தனை ஆழமாய் பதிந்திருக்கிறதென்றும், அதனால் எவ்வளவு சந்தோஷத்தை நாங்கள் அடைந்தோம் என்றும் விவரிக்க வேண்டியதவசியமில்லை என்று எண்ணுகிறேன். இப்பாக்கியமான நாளை நாங்கள் என்றும் மறக்க முடியுமா ?

கன்னியர் மடத்தில் எங்களுக்குத் தயாராயிருந்த உயிர்த்த திருநாளின் பெரிய விருந்துக்குச் சென்று அமர்ந்தோம். அக்கன்னியர் எங்களுக்கு அன்புடன் அளித்த அந்த அமுது அமிர்தமாயிருந்ததென்று சொன்னால் மிகையாகாது. சாப்பாடு முடிந்ததும் எங்கள் சாமான்களையெல்லாம் மூட்டை கட்டி சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு மிகுதியாயிருந்த இரண்டு மணி நேரங்களில் ஏதாவது சுற்றிப் பார்க்கலாமென்று புறப்பட்டோம்.

காப்பேசின் (Capechin) சுவாமிமார்களுடைய கோயிலாகிய சாந்த மரியதெல்லா கொன்சேரியோனுக்குப் (Santa Maria Dilla Concezione) போனோம். மிதமான அளவுகளையுடைய இக்கோயில் வெகு அழகாக இருக்கின்றது. கோவிலின் வலது பக்கத்து பீடத்தினடியிலிருக்கும் குழியில் ஒரு கண்ணாடிக் கூட்டில் முத்திப்பேறு பெற்ற கிரிஸ்பினுடைய அழியாச் சரீரம் இருக்கிறது. 184 வருஷங்களுக்கு முன் இவர் இறந்து போனாலும் அச்சரீரம் இன்று ஒரு சிறு பொடிகூடச் சேதப்படாதிருப்பது அதிசயித்திலும் அதிசயமே. கோவிலின் வலது கோடியிலுள்ள படிகளின் வழியாக கீழே யிறங்கினால் ஒடுக்கமான பாதை வழியாகச் சென்று ஓர் நில அறையை அடைகிறோம். மனிதர்களின் மண்டை ஓடுகளாலும் எலும்புகளாலும் கட்டப்பட்ட ஐந்து அறைகள் இங்கே இருக்கின்றன. சுவர்கள் மண்டை ஓடுகளாலும், வளைவுகள், தூண்கள், கிராதிகள் முதலியன மற்ற எலும்புகளாலும் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு எத்தனை ஆயிரம் மனிதர்களின் எலும்புக் கூடுகள் தேவையா

யிருந்ததோ தெரியவில்லை. கடைசி அறையில் அழகான ஒரு பீடம் அமைக்கப்பட்டு அதன் முன்னால் எலும்புகளால் வெகு திறமையாகச் செய்யப்பட்ட ஒரு எண்ணெ விளக்கு தொங்குகின்றது. இப்பேர்ப்பட்ட இந்த நில அறையில் கோழைத்தனமுள்ளவர்கள் போனால் திகிலடைந்து மூர்ச்சித்து விடுவார்களென்பதில் ஐயமில்லை. நாற்பக்கமும் சுவர்களைப் பார்ப்போமேயாகில் நூற்றுக் கணக்கான மண்டை ஓடுகள் நம்மைப் பார்த்து இளித்துக்கொண்டிருக்கின்றன.

எரி எனக்கென்னும் புழுவோ எனக்கென்னும் இந்த
மண்ணும்
சரி எனக்கென்னும் பருந்தோ எனக்கென்னும் தான்
புசிக்க
நரி எனக்கென்னும் புன்னாய் எனக்கென்னும் இந்நாறுடலை
பிரியமுடன் வளர்த்தேன் இதனால் என்ன பேறெனக்கே

என்றவாறு இம்மண்டை ஓடுகளின் அசங்கிய சிரிப்புகள் நாம் இப்பொழுது அழகாக பேணிவைத்திருக்கும் தலையும் முகமும் நம் சாவுக்குப்பின் எத்தகைய நிலைமையை அடைகின்றனவென்பதை படிப்பிப்பது போலவும், நாம் இப்படி அழிந்துபோகும் சரீரங்களுக்கு எடுத்துக்கொள்ளும் பிரயாசையைக் கண்டு எளனம் செய்வது போலவும் இருக்கின்றன.

இங்கிருந்து அர்ச். இராயப்பருடைய விலங்குகள் வைக்கப்பட்டிருக்கும் கோவிலை யடைந்தோம். பிரதான பீடத்தினடியில் ஒரு கண்ணாடிச் சிமிளில் இச்சங்கிலிகள் இருக்கின்றன. பாலஸ்தீனில் அர்ச்சியசிஷ்டவருடைய மணிக்கட்டுகளில் உபயோகித்த சங்கிலியும் ரோமாபுரியில் மாமெர்த்தீன் (Mamertine) ஜெயிலில் அர்ச்சியசிஷ்டவரை கட்டிவைக்க உபயோகித்த சங்கிலியுமிருக்கின்றன. இவ்விரண்டு சங்கிலிகளும் ஒரே யிடத்தில் வைக்கப்பட்டபொழுது அவைகள் அற்புதமாக ஒன்றித்து போனதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அப்படி ஒன்றித்த விதத்திலேயே இன்றும்

காணப்படுகிறது. இக்கோவிலினுள் வலது பக்கத்தில் பிரசித்திபெற்ற சிற்பியான மிக்கேல் ஆஞ்சலோவால் செதுக்கப்பட்ட பிரமாண்டமான மோயீசனின் சுரூபம் இருக்கிறது. இச்சுரூபம் யூதர்களுடைய விக்கிரக ஆராதனையைக் கண்டு தீர்க்கதரிசியானவர் கோபத்துடன் தன் ஆசனத்தைவிட்டு எழுந்திருக்கும் பாவனையாக செய்யப்பட்டிருக்கிறது. என்னே இதன் சிறப்பு. கோபக்குறிகளுள்ள முகமும், தத்ரூபமான சாயலையுடையதுமான இச்சிலை தன்னைச் செய்தவரையே ஏமாற்றிப்போட்டதாகத் தெரிகிறது. மிக்கேல் ஆஞ்சலோ இதை வெகு திறமையுடன் செய்து முடித்து உற்றுநோக்கிக் கொண்டிருக்குங்கால் தன்னையே மறந்தவராக, "பேசு" என்று சொல்லி தன் கையிலிருந்த கொட்டாப்புளியால் சிலையின் முழங்காலில் அடித்தாராம். அதனால் ஏற்பட்ட பள்ளம் இன்றும் இருக்கின்றது.

பின் இராயப்பர் தேவாலயத்தின் தீபலங்காரங்களைப் பார்க்கச் சென்றவிடத்து அன்று மழையினால் தீப அலங்காரங்கள் இல்லை என்று கேள்விப்பட்டு வருத்தத்துடன் திரும்பினோம். ஆனால் வழியில் கேபிடோலைன் என்னும் மலையினுச்சியில் மின்சார விளக்குகளாலான ஓர் சிலுவையைப் பார்த்து சற்று ஆறுதலடைந்தோம். இரவு 10 மணிக்கு ரோமைவிட்டு லூர்துநகருக்கு புறப்படவேண்டியதிருந்ததால் கன்னியர் மடத்திற்கு திரும்பி பிரயாணத்திற்கு எத்தனமானோம்.

கன்னியர் மடத்தில் இராப்போசனத்துக்குப் பின் "தே தேயும்" நடந்தது. ரோமாபுரியில் இந்த ஆறு நாட்களில் நாங்கள் கண்ட காட்சிகளையும், அடைந்த ஜூபிலி பலன்களையும், உண்ட விருந்துகளையும் மற்றும் நாங்கள் ஆண்டவரிடத்திலிருந்து அடைந்த பல சகாயங்களையும் மனதிலே நினைத்து கருணை வள்ளலுக்கு நன்றியறிந்த தோத்திரம் புரிந்தோம். பின்னர் மடத்திலுள்ள கன்னியர்களுக்கும், பல உதவிகள் புரிந்த ஏனைய இத்தாலிய சகோதர

சகோதரிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்தினோம். எங்களுக்கு விருந்திட்டவர்களும், தங்குவதற்கு இடங்கொடுத்தவர்களும் யாத்திரிகளுடைய நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் கண்டு மெச்சிக்கொண்டார்கள். அவர்களுடைய இந்த புகழ் மாலையைக் கேட்ட எங்கள் தலைவர் சங். லெதெல்லியார் சுவாமிகள் மிக்க சந்தோஷமும் பெருமையும் அடைந்தார். நேரமாகிவிட்டதால் இந்த அன்பான ஜனங்களைவிட்டு ஏக மனதோடு மிக்க சிரமத்துடனும் மனச் சோர்வுடனும் அவர்களுக்கு வந்தனமளித்து எங்கள் மோட்டார்களில் ஏறினோம். ரோமாபுரியின் அழகிய வீதிகளின் வழியாகச் சென்று ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தோம். ரெயில் வருகிறதற்காக காத்துக்கொண்டிருந்த அந்த சொற்ப நேரத்தில் எங்கள் மனதில் தோன்றிய எண்ணங்களை என்னென்றுரைப்பது.

ரோமை நகரில் நாங்கள் இருந்த ஒரு வாரமும் மோட்சத்திலிருப்பது போலவே இருந்தது. பல அர்ச்சியசிஷ்டவர்களின் அழியாச் சரீரங்கள், இரத்தம், அவர்கள் உபயோகித்த சாமான்கள், அவர்கள் அருள் நிறை அண்ணலை ஆராதித்த கோயில்கள், அவர்கள் வாழ்ந்த அறைகள், அவர்கள் நடந்த பாதைகள், அவர்கள் மரித்த இடங்கள், அவர்கள் கல்லறைகள் முதலியவைகளைப்பார்த்து, அவ்விடங்களில் செபித்ததினால் எங்கள் மனதிலுண்டான பக்தியான உணர்ச்சி ஒரு போதும் மனதை விட்டு அகலாது. சாக்ஷாத் எம்பெருமானின் அன்பும், அருளும், ஆசீர்வாதமும் என்றும் இத்தலைநகரின்மேல் இருக்கவேண்டுமென்றும், உலகத்தின் ஒரு கோடிமுனை முதல் மறு கோடி முனை மட்டும் கிறிஸ்துவை ராஜாவாகவும், ரோமாபுரியை வேதத்தின் நடு ஸ்தலமாகவும், பாப்பானவரை தலைவராகவும் ஏற்றுக் கொள்ளும் காலம் சீக்கிரம் வரும்படியாகவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக.

ஒப்புயர்வற்ற இந்த நித்திய நகரமாகிய ரோமாபுரியை விட்டுச் செல்லப்போகிறோமே என்ற எண்ணமானது

எங்களை அதிகமாக வாட்டிற்று. 10 மணிக்கு ரெயில் வந்ததும் ஏறிக்கொண்டோம். கொஞ்சதூரம் சென்றதும் ரோமாபுரி எங்கள் கண்களுக்கு தென்படாமல் மறைந்தது. ஆனால் எங்கள் மனக்கண்கள் முன் ரோமைநகர் என்றுவது மறையக்கூடுமோ? இல்லை, இல்லை, ஒருக்காலுமில்லை.

---

## அத்தியாயம் 12.


### ஜினேவா.

ஏப்பிரல் மாதத்தின் இரண்டாவது நாளாகிய திங்கட்கிழமையன்று காலை 8 மணிக்கு ஜினேவா வந்து சேர்ந்தோம். ஸ்டேஷனுக்கு வெளியே இருக்கும் பெரிய முற்றத்தின் இடது பக்கத்தில் அமெரிக்காவை கண்டுபிடித்த கிறிஸ்டபர் கொலம்பஸ் என்பவரின் உருவச்சிலை நிறுத்தப்படிருக்கிறது. இவ்வூரில்தான் இம்மகான் பிறந்ததாகச் சொல்லுகிறார்கள். இது பெரிய் பிரபுக்கள் வாழும் இடமாதலால், பல அரண்மனைகளையும், தோட்டங்களையும் கொண்டு வெகு அழகாகத் தோன்றுகின்றது.

இப்பட்டணத்தின் பிரதானக் கோயிலாகிய தேவமாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்ன ஆலயத்தில் திவ்விய பூசைகண்டு சற்பிரசாதம் உட்கொண்டோம். கோவிலின் பக்கத்தில் அநேக கடைகள் இருக்கின்றன. அவைகளில் வெள்ளியில் செய்யப்பட்டிருக்கும் அதிக நுட்பமான பொடிச் சித்திரவேலைகள் மிகவும் அழகாக இருக்கின்றன. இங்கிருந்து "காம்போ சாந்தோ" என்னும் கல்லறைத் தோட்டத்துக்கு 80 மோட்டார்களில் ஏறிச்சென்றோம். இது உலகிலுள்ள கல்லறைத் தோட்டங்களிலெல்லாம் மிகவும் சிறந்தது. இத்தோட்டத்தினருகே சென்றதும் பூக்களின் மதுரமான வாசனை வீசிற்று. வாயிலின் வழியாக உட்சென்றதும் 100 அடி அகலமுள்ள ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறது. இக்கட்டிடத்திலிருந்து உயரமான அழகிய தாழ்வாரங்கள் ஆரம்பித்து இத்தோட்டத்தின் நான்கு பக்கங்களையும் அடைத்துக்கொண்டிருக்கின்றன. அதற்குள் வரிசையாக

பிரபுக் குடும்பங்களின் கல்லறைகள் இருக்கின்றன. அனேக அருமையான சிற்ப வேலைப்பாடுள்ள வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு ஒன்றுக்கொன்று அதிக அழகாயிருக்கின்றன. ஒவ்வொரு கல்லறையும் ஒரு குடும்பத்தின் பொதுக் கல்லறை. இக்கல்லறைகள் இப்பட்டண வாசிகளுடையது மட்டுமல்ல. இத்தாலிய தேச உயர் குடும்பங்களுக்கெல்லாம் சொந்தமானவை. நடுவிலிருக்கும் திறந்த இடம் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் புன்கு மரங்களால் சிலுவை அடையாளமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு தட்டையான பளிங்கு கற்களால் மூடப்பட்ட சாதாரண குடும்பங்களின் கல்லறைகள் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினிடையே நறுமணங்கமழும் நானுவித மலர்ச் செடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இக் கல்லறைத் தோட்டத்தை வெகு அபூர்வமாய் கவனித்து வருகிறார்கள். எல்லா கல்லறைகளும் நாள்தோறும் புஷ்பங்களினுல் அலங்கரிக்கப்படுகின்றன. அநேக கல்லறைகளில் வெளிச்சமும் வைக்கப்பட்டிருக்கின்றது. இத்தோட்டத்திற்குள்ளே பளிங்கு கற்களால் கட்டப்பட்ட அழகிய கோவில் ஒன்றுண்டு. சூரிய வெளிச்சத்தில் மினுங்கிக்கொண்டிருக்கும் வெண்ணிறப் பளிங்குக்கற்களும், பலவித வர்ணங்களையுடைய சுகந்த வாசனை வீசும் புஷ்பங்களும், அநேக அருமையான சிற்ப வேலைகளும், உயரமான அழகிய கட்டிடங்களும் அமைந்துள்ள இக்கல்லறைத் தோட்டம் ஒரு காட்சி சாலையாகத் தோன்றுகிறதேயன்றி, மானிட சரீரங்களை அடக்கம் செய்யும் இடமாகத் தோன்றவில்லை.

இங்கிருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் லூர்து நகருக்குப் போக 10-30 மணிக்கு ரெயிலில் ஏறினோம். கடலோரமாய்ப் போகும் இந்த ரெயிலில் பிரயாணம் செய்த நாங்கள் மனோரம்மியமான அழகான காட்சிகளைக் கண்டோம். நீர்வளம், நிலவளம், குடிவளம் முதலியன நிரம்பிய பல ஊர்களைப் பார்த்தோம். இயற்கையழகோ பெரிதும் மனதைக் கவரக்கூடிய பொலிவு உள்ளதாகவே இருந்தது. மரங்கள்



கல்லறைத் தோட்டத்தின் ஓர் பகுதி — ஜினேவா

அடர்ந்த குன்றுகளும், பயிரிடப்படும் வயல்களும், தோட்டத்தினடுவே அழகாக அமைக்கப்பட்டிருக்கும் மாளிகைகளும், பசுமையான புல்தரைகளும், அகன்ற கடற்கரைகளும், இயற்கை விநோதங்களும், நாட்டின் செழிப்பும், எங்கள் உள்ளத்தை பூரிக்கச் செய்தன. கடற்கரை மணலில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். சிலர் தோணிகளில் ஏறி உல்லாசமாய் கடலில் அவைகளை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் கரையிலும் தண்ணீரிலும் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

வேன்ட்ரிமிக்லியாவில் (Ventrimiglia) ரெயில் வந்து நின்றது. இப்பட்டணத்தை அடுத்து இத்தாலியாவின் எல்கை முடிந்து போகிறது. ஆதலால் இந்த ரெயிலைவிட்டு இறங்கி பிரஞ்சு தேசத்தின் ரெயில் வண்டிக்கு மாறினோம். பிரஞ்சு ரெயில்கள் இத்தாலியா ரெயில்களைவிட அதிக வசதியானவை.

கொஞ்சதூரம் சென்றதும் மான்றி கார்லோ (Monte carlo) என்னும் பட்டணத்தின் வழியாக ரெயில் சென்றது. இது ஒரு சிறு மலைமேல் இருக்கிறது. ஐரோப்பா கண்டத்திலுள்ள செல்வவந்தர்களில் அநேகர் தங்கள் ஆஸ்திகளை தொலைக்கிற இடமிது. குதிரைப் பந்தயம் போன்ற பற்பல சூதாட்டங்கள் இங்கு அதிகம். ஆனால் ஆரோக்கியத்துக்கு அருமையான இடம். எங்கு பார்த்தாலும் பணக்காரர்களும் பிரபுக்களும் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். துறைமுகத்தில் அலங்கரிக்கப்பட்ட சிறு படகுகளும், கரையில் அநேக அழகிய மோட்டார்களும் இருந்தன. நாங்கள் இவ்வழியாய் போகும்பொழுது மோட்டார் பந்தயம் நடந்துகொண்டிருந்தது. மோட்டார்கள் ஒன்றின் பின் ஒன்றாய் விரைவாகச் செல்வதையும், பந்தயம் ஓடுமிடத்தைச் சுற்றிலுமுள்ள அளிகள் பக்கமாக எண்ணிறந்த ஜனங்கள் நின்று வேடிக்கை பார்ப்பதையும், பக்கத்தில் இவர்களுடைய மோட்டார்கள் ஆயிரக் கணக்காய் நின்றுகொண்டிருப்பதையும் பார்த்தோம்.


இப்பட்டணத்திற்கு அடுத்தாப் போல் மோனக்கோ (Monaco) என்ற ஊர் இருக்கிறது. இதுவும் பணக்காரர் வாழுமிடமே. நாங்கள் போகும் பொழுது ஒரு கூட்டம் படைக்கப்பல்கள் துறைமுகத்தில் அமர்ந்து நின்றன. ஜினோவாவிலிருந்து இப்பட்டணம் வரை ரெயிலுக்கு இடது பக்கம் கடலும் வலது பக்கம் மலைத்தொடர்ச்சிகளாயுமிருக்கின்றன. அநேக இடங்களில் சுரங்கங்களின் வழியாய் ரெயில் செல்லுகிறது. இன்னும் பல ஊர்களைக் கடந்து மார்சேல்ஸ் பட்டணம் வந்து சேர்ந்தோம். இது பிரான்ஸ் தேசத்துக்கு முக்கியமான துறைமுகம். நாங்கள் திரும்பும் பொழுது இந்த இடத்தில்தான் கப்பல் ஏறவேண்டும். மார்சேல்ஸ் பக்கம் மலைகள் உறைந்த பனியால் மூடப்பட்டிருந்தன. இவைகளைக் கடந்து லூர்து நகர் வந்ததும் ரெயில் நின்றது.

---

## அத்தியாயம் 13.

### லூர்து நகர்.

பரிசுத்த தேவதாய் அர்ச். பெர்நதெத் அம்மாளுக்கு பதினெட்டு தடவை காட்சி கொடுத்த லூர்து நகரை ஏப்பிரல் மாதம் 3-ம் தேதி காலை $8\frac{1}{2}$ மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். லூர்து பட்டணத்திலிருந்து அமலோற்பவ மாதா காட்சி கொடுத்த மசபியேல் குகை சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கின்றது. ஸ்டேஷனிலிருந்து மோட்டார்களில் சென்று திருஸ்தலம் ஆரம்பமாகுமிடத்திலுள்ள பெரிய வாசலை அடைந்தோம். இவ்வாயிலின் ஓர் பக்கம் ரபேல் சம்மனசு சுரூபமும், மற்றொரு பக்கம் கபிரியேல் சம்மனசு சுரூபமும் வைக்கப்பட்டிருக்கின்றன. அமலனைப்பெற்ற அன்னையின் திருஸ்தலத்துக்கு இவ்விரு சம்மனசுகளும் சரியான வாயிற் காப்போரே. சற்று தூரத்திற்கு அப்புறம், கட்டிலில் கிடத்தப்பட்டிருக்கும் ஒரு வியாதியஸ்தன் பக்கத்தில் ஒரு குருவானவரும் ஒரு தாதியும் முழங்காலில் நின்று வேண்டிக் கொண்டிருக்க, பிணியைப் போக்கும் பரமதாய் தனது



லூர்து நகர் தேவாலயம்

கரங்களை நீட்டி அந்த நோயாளியைக் குணப்படுத்துகிற பாவனையாய் சிலைகள் வெண்ணிறச் சலவைக் கல்லில் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சுரூபங்கள் செபத்தையும் பிற சிநேகத்தையும் நமக்குப் படிப்பிக்கின்றன.

இவைகளைக் கடந்து லூர்து நாயகியின் கோயிலை யடைந்தோம். மலைமேல் மூன்று கோவில்கள் ஒன்றின் மேல் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கின்றன. தரை மட்டத்தில் செபமாலை மாதாக்கோயிலும், அதற்கு மேலே கிரிப்ட் கோயிலும், இவ்விரு கோயில்களுக்கு மேலே பெரியதோர் தேவாலயமுமிருக்கின்றன. 1858-ம் வருஷம் மார்ச்சு மாதம் 2-ம் தேதி அர்ச். பெர்நதெத்தம்மாளுக்கு 14-வது தடவையாக தேவதாய் காட்சி கொடுத்து, "இந்த இடத்தில் ஒரு கோயில் கட்டவேண்டுமென்றும், ஜனங்கள் இங்கு சுற்றுப் பிரகாரமாக வரவேண்டுமென்றும், போய் குருக்களிடம் சொல்" என்று ஆஞ்ஞாபித்தபடி இக்கோயில்கள் கட்டப்பட்டு சுற்றுப்பிரகாரமும் ஒழுங்காக இன்றும் நடந்து வருகிறது. ஒவ்வொரு மணி நேரத்திலும் இக்கோயில்களின் மணிகள் "ஆவே, ஆவே, ஆவே, மரியா" என்று இன்பமாய் பாடும் இராகமானது காதுக்கு எவ்வளவோ இனிமையாய் இருக்கின்றது.

செபமாலை மாதாக்கோயில் முன்முற்றத்து நடுவில் கோவிலைப்பார்த்து பரம தாயின் பெரிய சுரூபம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. சிறந்த சிற்பி ஒருவரால் அர்ச். பெர்நதெத்திடம் தரிசனமான தாயின் உயரம், வடிவம் முதலிய சகலத்தையும் கேட்டறிந்த பின் அவள் கற்பித்தபடியே இச்சுரூபம் செய்யப்பட்டது. தன்னை உற்று நோக்கும் எவரையும் வசீகரிக்கக்கூடிய அன்பும், அழகும், மாசற்றதனமும், புன்சிரிப்பும் கொண்ட இச்சுரூபம் எங்கள் உள்ளங்களை கவர்ந்து நின்றது. ஆனால் அர்ச். பெர்நதெத் இச்சுரூபத்திற்கும் தரிசனமான தாய்க்கும் மட்டற்ற வித்தியாசம் உண்டு என்றனளாம். ஆம், வித்தியாசமில்லாமலா

இருக்கும். இச்சுரூபம் மனிதன் கைவேலை. காட்சி கொடுத்த நாயகியோ சர்வ வல்லபரின் உன்னத வேலைப்பாடு.

செபமாலை மாதாக்கோயில் படிவழியாக ஏறி வந்ததும் வாசலுக்கு மேலே திவ்விய பாலனைக் கையில் ஏந்திய மாதா அர்ச். டொமினிக் என்பவருக்கு செபமாலை கொடுக்கும் மேரையாய் இருக்கும் சுரூபங்களைப் பார்க்கிறோம். உட் சென்றதும் கோவிலின் மத்திய பாகத்தில் சுமார் 6000 ஜனங்களுக்கு ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சலவைக்கல்லால் நடுப்பீடம் செய்யப்பட்டு அதன்மேல் கிரீடம் அணிந்த பரலோக அரசியின் வெண்கலச் சுரூபம் விளங்குகிறது. இப்பிரதான பீடத்தைச்சுற்றி 15 பீடங் கள் இருக்கின்றன. இப்பீடங்களுக்குப் பின்னுலுள்ள சுவ ரிலும் மேல்வளைவிலும் செபமாலையின் 15 தேவ இரகசி யங்களைப் பற்றிய மிகவும் அழகான படங்கள் வரையப்பட் டிருக்கின்றன. தேவ இரகசியங்களைத் தியானித்து செப மாலை செபிக்க இக்கோவில் மேன்மையான ஓர் இடம்.

கிரிப்ட் கோயிலானது கற்பாறையிலேயே கொத்தப் பட்டிருக்கிறது. இதன் நடுப்பாகம் 75 அடி நீளமும் 10 அடி அகலமும் இருக்கின்றது. இதற்கு மேலேதான் வெண்மையான சலவைக் கற்களாலாக்கப்பட்ட பெரிய தேவாலயம் இருக்கிறது. இதன் உட்பாகம் வெகு அலங் காரமாக இருக்கின்றது. வில்வளைவான மரத்தாலான மேற் கூரை இயற்கை வர்ணங்கள் கொடுக்கப்பட்டு வெகு அழ காக தோன்றுகிறது. லூர்து நாயகியின் சரிதையைப் பற் றிய சித்திரங்கள் வரையப்பட்ட கண்ணாடி ஜன்னல்கள் அனேகம் இருக்கின்றன. நடுவில் அருமையான சித்திர வேலைப் பாடுகளுள்ள பளிங்கு கல் பீடமிருக்கிறது. பீடத் தின் மேல் தங்க முலாம் பூசிய சிம்மாசனத்தில் அமல உற் பவி அமர்ந்திருக்கிறுள். இப்பீடத்தைச் சுற்றி 15 அர்ச் சியசிஷ்டவர்களுடைய பீடங்கள் இருக்கின்றன. இக்கோயி லின் மேலிருந்து பார்த்தால் சற்று தூரத்திலிருக்கும் லூர்து பட்டணமும், திருஸ்தலத்திலுள்ள மடங்கள்,

வைத்திய சாலைகள், மற்றும் கட்டடங்களும், காவு நதியும், ஜனங்களின் கூட்டமும், கண்களுக்கு இனிமையான காட்சியை தரக்கூடியனவாயிருக்கின்றன.

கீழேபிறங்கி செபமாலை மாதாக்கோயிலின் முற்றத்தி லிருந்து வலது பக்கம் சென்றால் தேவமாதா அர்ச். பெர்ந தெத்துக்கு காட்சி கொடுத்த குகையிருக்கின்றது. இதன் பக்கத்தில் வியாதிக்காரர் குளிக்கும் அறைகள் பெண்களுக் கும் ஆண்களுக்கும் தனித்தனியாய் அமைக்கப்பட்டிருக் கின்றன. கெபியின் முன் ஜனங்கள் பூசை காணவும் செபம் செய்யவும் சுத்தமான கல் பாவப்பட்ட ஒரு பெரிய முற்றம் இருக்கிறது. கெபி ஓரமாய் காட்சி கண்ட சிறு ஏழைப் பெண் முழங்காலிலிருந்து செபித்த இடத்தில் ஒரு ஞாபகக் கல் போடப்பட்டிருக்கிறது. பீடத்தின் வடபக்கமாய் ஒன் பது குழாய்கள் வழியாக எப்பொழுதும் தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது. இப்புதுமைத் தீர்த்தத்தை விசுவாசி கள் ஆவலுடன் தங்கள் தங்கள் ஊர்களுக்கு எடுத்துக் கொண்டு போகிறார்கள். பீடத்தின் முன்னால் அநேக மெழுகுதிரிகள் எரிந்து ஒளிர்கின்றன. கெபியின்மேல் இடது பக்கத்தில் வரிசையாக தொங்கவிடப்பட்டிருக்கும் கணக்கற்ற கட்கதண்டங்கள் (crutches) இங்கு வந்து சௌக்கியமானவர்களின் தொகைக்கு வாய் பேசாத சாட்சி களாயிருக்கின்றன. இவைகள் உலகின் பெரும்பாலருக்கு குருடன் கண்முன் வைத்தபடம் போல் ஆனது மிகவும் வருந்தத்தக்கதே. தேவதாய் நின்று காட்சி கொடுத்த இடத்தில் வெள்ளைப் பளிங்குக்கல்லாலான லூர்து நாயகி யின் சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. அச்சுரூபத்தை அக் குகையில் பார்த்த மாத்திரத்தில் அப்பொழுதுதான் தேவ தாய் நமக்கு தரிசனம் கொடுப்பதுபோலிருக்கிறது.

வேதபோதகரும் செந்தமிழ்ப்புலவர் சிரோமணியும் தேம்பாவணி யாசிரியருமாகிய வீரமாமுனிவர் இயற்றிய திருக்காவலூர்க் கலம்பகத்தில் தேவ தாயைப்பற்றி


தொக்க நலமெலாம் பெய்திடியாதருடோய் முகிலாப்
புக்கநிழல் கொண்டிருள் புகவில் பொழில் பொங்கலைநீ
ரொக்க வரையா வரங்கொண்டு வரிலவோர் நிலையா
வக்கம் மகிழக் கண்டேன் றிருக்காவலூரங்கனையே

என்று எழுதியுள்ளார். அதாவது இடி ஒன்றும் இடியாமல் மிகுந்த நன்மைகளனைத்தையும் பெய்து தயையைக் கொண்ட வோர் மேகமாகவும், நிழலைத்தன்னிடத்திற்கொண்டும் இருளைக் கொள்ளாத ஓர் சோலையாகவும், பொங்குகின்ற கடல் நீரைப்போல் அளவிடக்கூடாத வரத்தைக் கொண்ட உவர்ப்பில்லாத வோர் நிலைக்கடலாகவும் இருக்கிற ஓர் நங்கையைத் திருக்காவலூருனிடத்தே தான் கண்டுகளித்ததாகக் கூறுகிறுர். அப்பேர்க்கொத்த ஒரு மாதுசிரோமணியை நானும் இந்த மலைமேல் கண்டு மனமுவந்தேன்.

இச்சுரூபம் நிற்கும் இடத்திற்கு சற்று கீழே ஒரு குகைபோன்ற இடத்தில் அழகான பீடம் ஒன்றுஅமைக்கப்பட்டிருக்கிறது. இப்பீடத்துக்கு முன்னுல் உயரமான இரும்பு அளி போடப்பட்டிருக்கிறது. இக்கிராதியின் வலது பக்கத்து வாசல் வழியாக உள்ளே போய் இடது பக்கத்து வாசல் வழியாக வெளியே வரவேண்டும். நாங்கள் உள்ளே சென்று லூர்து மாதா நின்றுகொண்டிருந்த பாறையை முத்தி செய்தோம். பின் முழங்காலில் நின்று லூர்து நாயகியை அண்ணுந்து பார்த்து அன்னவள் செய்த அருட் செயல்களை உன்னி யுன்னி புகழ்ந்து புகழ்ந்து தேகம் புளகாங்கிதம் கொள்ளவும், கண்களில் ஆனந்த பாஸ்பம் உண்டாகவும், கைகளைச் சிரசின் மேலுயர்த்தி,

தோத்திரஞ் சேசுவென்னுந் தூயவர்க்கினிய தாயே
தோத்திரம்பிணியைப் போக்கிச் சுகந்தரும் அருமருந்தே
தோத்திரம் எளியேந்தந்த சுடர்முடியணிந்த மின்னே
தோத்திரம் லூர்துகுன்றிற் றேன்றுபே ரொளியே
தோத்ரம்]

என்று அந்த அமல உற்பவியைத் தோத்தரித்து செபம் செய்தோம்.




லூர்து கெபி

ஓர் குக்கிராமமாயிருந்த இந்த இடம் லூர்து கோயி லால் ஓர் பட்டணமாகிவிட்டது. இதில் ஆச்சரியமொன்று மில்லை. ஏனெனில் இந்த மசபியேல் குகையில் காட்சி கொடுக்க கிருபை பாலித்த அந்த அன்னை ஓர் சாதாரண மகளல்ல. பிதாவாகிய சர்வேசுரனுடைய குமாரத்தியும், சுதனாகிய சர்வேசுரனுடைய தாயாரும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய பிரியமுள்ள நேசமும், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் அரசியுமாயிருக்கிறாள் அந்த அமலோற்பவமாதா. ஒவ்வொரு நாளும் உலகத்தின் பல பாகங்களிலிருந்து பலபாஷை பேசுகிறவர்களும், நானுவித நடை யுடை பாவனையுள்ளவர்களும், பலஜாதி ஜனங்களும், வயோதிகரும், வாலிபரும், எளியாரும், பணக்காரரும் இந்த இராக்கினியை ஆயிரக்கணக்காய் தரிசிக்க வருகின்றனர். இதை ஒரு குட்டி மோட்சமென்றே சொல்லவேண்டும். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எல்லோரும் செபித்துக்கொண்டும், தேவகீர்த்தனைகள் பாடிக்கொண்டு மிருக்கிறார்கள். தேவதாயின் மகிமையை இவ்விடத்தில் கண்குளிரப் பார்க்கலாம். பரிசுத்த தேவதாயை பரிகசிக்கும் பதிதர் இவ்விடத்திற்கு வருவார்களேயாகில் வெட்கி நாணி தலை குனிய வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவர்கள் இப் புதுமைப் புகழ்களை யெல்லாம் கேட்டும் கேளாதவர் போலிருப்பதன் கருத்தென்ன!

1854-ம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ம் தேதி திருச்சபையானது, "பரிசுத்த கன்னிமரியம்மாள் ஜென்மப்பாவ மில்லாமல் உற்பவித்தாள்" என்னும் சத்தியத்தை விசுவாசப் பிரமாணமாக தன் மக்கள் அங்கீகரிக்கும்படி கற்பித்தது. அப்பொழுது திருச்சபையின் தவறு வரத்தை சந்தேகித்து சிலர் அவிசுவாசிகளானார்கள். இவர்களுக்குப் பாடம் கற்பிக்கவே 1858-ம் வருஷம் மார்ச்சு மாதம் 25-ம் தேதி தேவ தாய் இதே லூர்து கெபியில் தரிசனமாகி "அமலோற்பவம் நாமே" என்று பகர்ந்தனள் போலும். பாவிகளுக்கு அடைக்கலமே, பதிதர் அவிசுவாசிகள் மனந்திரும்ப வேண்டிக் கொள்ளும்.

மாலை $4\frac{1}{2}$ மணிக்கு திவ்விய நற்கருணை சுற்றுப்பிரகாரம் நடந்தது. சுற்றுப்பிரகாரம் குகையிலிருந்து புறப்பட்டு வெகுதூரம் சுற்றி கோவிலில் வந்து முடியும். திருயாத்திரையாக இந்த இடத்திற்கு வந்த ஜனங்கள் எல்லோரும் இதில் கலந்துகொள்கிறார்கள். சுற்றுப்பிரகாரத்தின்போது "ஆவே மரியா" என்ற கீதம் பாடப்படுகின்றது. என்ன விந்தை! பாட்டின் இனிய நாதம் பக்கத்திலிருந்து பாடுவதுபோல் தெளிவாக கேட்கப்படுகிறதேயன்றி, பாடகர்களை அங்கு ஒருபக்கமும் கண்டுபிடிக்க முடிகிறதில்லை. கோவிலுக்குள்ளிருந்து பாடகர்கள் பாட, சுற்றுப்பிரகாரம் போகும் ஒவ்வொரு இடத்திலும் ஒலி பெருக்கும் கருவிகளால் சத்தம் நன்றாகக் கேட்கப்படுகின்றது. இந்த அருமையான பாட்டைக் கேட்டதும் திருயாத்திரிகள் பரவசமாகி உடனே கூடவே பாடுகிறார்கள். சுமார் 5000 பேர் பக்தியோடு பாடிக்கொண்டு அணிவகுத்துச் செல்லும் காட்சியைக் கண்டவரே அறிவர் அதன் மாட்சியை. இச்சுற்றுப்பிரகாரத்தை பார்க்கும் எப்பேர்ப்பட்ட பாவியும் மனந்திரும்பாதிரான். கோயில் முற்றவெளியில் மூன்று பக்கமும் சுற்றி பெஞ்சுகள் போடப்பட்டிருக்கின்றன, இவைகளில் வியாதியஸ்தர்கள் குந்தியிருக்கிறார்கள். பெஞ்சில் உட்காரமுடியாத வியாதியஸ்தர்களை நாற்காலிபோன்ற தள்ளுவண்டிகளில் கொண்டு வைத்துவிடுகிறார்கள். சுற்றுப்பிரகாரம் இவர்களண்டை வந்ததும் ஒவ்வொரு வியாதியஸ்தன் முன்னிலையிலும் ஒவ்வொரு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது. வியாதியஸ்தர்கள் சேசுவினிடம் சகல நம்பிக்கையும் வைத்து, தங்களையே தாழ்த்தி பக்தியுடனும், வியாதியின் அகோரத்தால் சோர்வடைந்த முகத்துடனும், மிகவும் இரக்கமான பார்வைகளுடனும், தலையின் மேல் உயர்த்திய கைகளுடனும் சற்பிரசாதநாதரின் ஆசீரைப் பெறுகிறார்கள். இந்த நேரத்தில் தான் சிற்சில சமயங்களில் புதுமையாக வியாதியஸ்தர்கள் சுகமடைகிறார்கள். இப்படி ஆசீர்வதிக்கும்பொழுது ஒரு குருவானவர் உரத்த குரலில் சில மனவல்லய செபங்களைச் சொல்லுகிறார். அங்கு கூடியிருப்போர் எல்லோரும் இந்த

செபங்களைத் திருப்பிச் சொல்லுகிறார்கள். எல்லா வியாதியஸ்தர்களையும் ஆசிர்வதித்தபின் பொது ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு சுற்றுப்பிரகாரம் முடிவடைகிறது. இவ்வளவு பக்தியோடும் தெய்வ பயத்தோடும் நடக்கும் சுற்றுப் பிரகாரத்தை நான் வேறு எங்கும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. மிக்க மாட்சி பெறுகாட்சி யென்பதற்கு யாதொரு சாட்சியும் வேண்டியதில்லை.

சமீபத்திலிருக்கும் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் சகலரும் பரலோக நாயகியிடமிருந்து தாங்களடைந்த உபகாரங்களுக்கு நன்றியறிதலாகவோ, அல்லது நேர்ச்சையை நிறைவேற்றவோ, அல்லது பிறருக்கு பணிசெய்து கிடப்பதே தங்கள் தொழிலாகக்கொண்டோ யாதொரு பிரதிபலனையும் எதிர்பாராது தாமாகவே சகல பணிவிடைகளையும் செய்கிறார்கள். இவர்களுக்கென்று தனி உடை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலர் பெரிய அந்தஸ்திலுள்ள பிரபுக்கள். இவர்கள் திருயாத்திரைக்காரர்களுக்கு செய்யும் உதவிகள் அனந்தம்.

இரவு 8½ மணிக்கு எல்லாத் திருயாத்திரைக்காரர்களும் ஏற்றிய மெழுகுதிரிகளை கைகளிலேந்தி பாடிக்கொண்டும் செபித்துக்கொண்டும் சுற்றுப்பிரகாரமாக வருகிறார்கள். எத்தனையோ ஆயிரம் ஜனங்கள் வரிசை வரிசையாக பலவித வர்ண காகிதங்களால் சூழப்பட்ட மெழுகுதிரிகளுடன் செல்லும் இந்த அரிய தோற்றத்தை கிரிப்ட் கோவிலிலிருந்து பார்க்க வேண்டும். என்ன அழகு! கண்களையன்றி உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் இக்காட்சியை காணக்கொடுத்துவைக்க வேண்டுமே. சூரிய வெளிச்சத்தில் நவரத்தினங்கள் ஜொலிப்பதுபோல் மின்சார விளக்குகளின் பிரகாசத்தில் பச்சை, சிகப்பு, ஊதா முதலிய வர்ணக் காகிதங்களில் பொதியப்பட்ட மெழுகுதிரிகள் ஜொலிக்கின்றன. இன்னும் ஒவ்வோரிடத்தில் சுற்றுப்பிரகாரத்தை இந்த நானாவித வர்ண ஜோதியுடன் S, M, U போன்ற பலவடிவங்களில் காண உடல் பூரித்துப்

போகிறது. அத்தோடு அன்னவர்கள் செல்லும் மேரையானது பரலோகத்திலிருந்து சம்மனசுகளும் அர்ச்சியசிஷ்டவர்களும் கீழேயிறங்கி வந்து ஆண்டவனை யீன்றவளைக் கொண்டாடிப் பெருமைப்படுத்துகிறார்களோ என்று ஐயுற வேண்டியதிருக்கிறது. இச்சுற்றுப்பிரகாரம் கெபியிலிருந்து புறப்பட்டு முந்தின சுற்றுப்பிரகாரத்தைப்போல் கோவிலின் முன் வந்து முடிகிறது. இதோடு திவ்விய நற்கருணை கொண்டு போகிறதில்லை. ஆனதால் கடைசியில் பலதடவை பிரிய தத்த மந்திரம் சொல்லி அத்தோடு முடித்துவிடுகின்றனர்.

இந்த இரண்டு சுற்றுப்பிரகாரங்களும் வருஷத்தில் எல்லா நாட்களிலும் நடைபெறும். அதிக மழையாயிருந்தால் மட்டும் நடைபெறாது. "இங்கே ஜனங்கள் சுற்றுப்பிரகாரமாக வரவேண்டும்" என்ற தேவதாயின் கட்டளை இவ்விதமாய் நிறைவேற்றப்படுகிறது.

4-ம் தேதி காலை கெபியில் பல பூசைகள் கண்டோம். கோயிலுக்கு இடது பக்கத்தில் "கல்வாரி" என்றழைக்கப்படும் குன்றின் மேல் சிலுவைப்பாதை ஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 10 மணிக்கு நாங்கள் அங்குசென்று சிலுவைப்பாதை செய்தோம். ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒரு ஆள் உயரமுள்ள சுரூபங்களாலான சித்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. இச்சுரூபங்கள் தத்ரூபமாகவும் உயிருள்ளவைகள் போலவும் தோன்றுகின்றன. மிகவும் பரிதாபத்துக்குரிய முகத்துடனிருக்கும் திவ்விய சேசுவையும், கர்ணக்கடூர முகங்களுடன் கல் நெஞ்சராயும் இரக்கமற்றவர்களாயும் நிற்கும் யூதர்களையும், தனது பிரிய ஏக குமாரனை பரிகொடுத்ததால் சொல்லொண்ணுத் துயரடைந்து, சோர்வுற்று, கண்ணீர் பெருக்கிக்கொண்டு நிற்கும் வியாகுலத்தாயையும் இந்த ஸ்தலங்களில் பார்க்கும் மனிதனின் இருதயம் வெயிலில் வைக்கப்பட்ட வெண்ணைபோல் இளகுகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின் எப்பேர்ப்பட்ட ஈரமில்லாத நெஞ்சும் கசிந்து உருகும் வண்ணம் இந்த ஸ்தலங்கள் உருக்கமாயிருக்கின்றன. முதலாவது ஸ்தலத்தில் ரோமாபுரியில்

"காலா சாங்தா" கோயிலில் இருப்பதுபோலவே 28 படிகள் அமைக்கப்பட்டு இவைகளின் மேல் முழங்காலில் போகிறவர் கட்கு விசேஷ பலன்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருச் சுதனின் திருப்பாடுகளைத் தியானிக்க இதைவிட நல்ல இடம் எங்கும் கிடையாது. ஜெருசலேமில் ஊரின் ஊடே சிலுவைப்பாதை செய்யவேண்டியதிருப்பதால் இவ்வளவு பக்தியாயில்லை. இந்த விசேஷமான சிலுவைப்பாதையை நாங்கள் சங். லெடெதல்லியார் சுவாமிகளின் திறமையான தலைமையின் கீழ் செய்துமுடித்தோம். பின் கோவிலின் முன் எங்களைப் புகைப்படம் எடுத்தார்கள்.

எங்களில் சிலர் பாரீஸ், லண்டன் முதலிய பட்டணங்களைப் பார்க்க விரும்பினார்கள். மற்றவர்கள் விசியே பட்டணம் பார்த்துவிட்டு கொழும்புக்கு "எதேஸ் ii" என்னும் கப்பலில் திரும்பவேண்டியிருந்தது. இக்கூட்டத்தை சங். லெடெதல்லியார் சுவாமிகள் அழைத்துச்சென்று கப்பலேற்றி விட்டு லூர்து நகர் திரும்பிவரும் வரைக்கும் மீதியானவர்கள் இந்த நகரிலேயே தங்கியிருக்க வேண்டுமென்று ஏற்பாடாயிருந்தது. பகல் 1 மணிக்கு இவர்கள் எங்களிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

மகிமை பிரதாபம் நிறைந்த மரியாயின் மலரடிபோற்ற எங்களுக்கு அதிகமாக மூன்று நாட்கள் கிடைத்தன. தேவ தாய்க்குத் தோத்திரம். மாலை 4½ மணிக்கு சரி. வந். லாரென்ஸ் பெறைரா மேற்றிராணி ஆண்டவரவர்கள் திவ்விய சற்பிரசாதநாதரை கதிர் பாத்திரத்தில் ஏந்திச்செல்ல நாங்கள் திவ்விய நற்கருணை சுற்றுப்பிரகாரம் செய்தோம். அப்பொழுது சிறிதுநேரம் கிறிஸ்து பரமாத்மாவுக்கு பாலி பிடிக்கும் பாக்கியம் பெற்றேன் யான்.

5-ம் தேதி காலையில் கெபியில் பூசைகண்டு நற்கருணை உட்கொண்டோம். பிறகு அற்புத தீர்த்தத்தில் மூழ்க நீராடு அறைகளுக்குச் சென்றோம். பெரிய தொட்டிகளில்

புண்ணிய தீர்த்தம் நிரப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பக்கத்தில் ஸ்வேச்சையாக திருயாத்ரீகர்கட்கு உதவிசெய்யும் சாரணர் தங்கள் விசேஷ உடுப்புகளுடன் நிற்கின்றார்கள். எதிர்த்தாப்போல் சுவரில், குளிக்கும்பொழுது சொல்ல வேண்டிய சிறு மனவல்லய செபங்களைக் கொண்ட ஒரு அட்டை தொங்குகிறது. அச்சாரணர் ஸ்நானம் செய்பவருடைய உடுப்புகளைக் களைய உதவிசெய்து இடுப்பில் ஒருதுணியைக் கட்டுகிறார்கள். பின் தங்கள் கைகளாலேயே பிரயாணிகளைத் தொட்டியில் இறக்கி மூன்றுதடவை நீரில் அமிழ்த்தி உடனே வெளியே எடுத்துவிடுகிறார்கள். பரிசுத்த லூர்து அன்னையின் சிறு சுரூபம் ஒன்று முத்திசெய்யக் கொடுக்கப்படுகிறது. பின் துவட்டாமலே தண்ணீரோடே உடுப்புகளை அணிந்துகொள்ள உதவி செய்யப்பட்டு வெளியே அனுப்பப்படுகிறார்கள். தண்ணீர் பனிக்கட்டிபோல் ஜில் என்று இருந்தபோதிலும், மூழ்கி எழுந்ததும் வெகு ஆரோக்கியமாகவே தோன்றிற்று. கடின வியாதியஸ்தரை சுகப்படுத்தினதும், குருடர்களுக்குப் பார்வை கொடுத்ததும், லூர்து நாயகியின் அற்புத ஊற்று நீருமான இந்தத் தண்ணீரில் ஸ்நானம் செய்ததால் நாங்களடைந்த மனமகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லாதிருந்தது.

11 மணிக்கு கல்வாரி மலையில் தமிழில் சிலுவைப்பாதை செய்தோம். பின் அர்ச். பெர்நதெத் குடியிருந்த வீட்டைப் போய்ப்பார்த்தோம். சிறிய வீடாயிருந்தாலும் அதற்கு மெத்தை இருக்கிறது. வீட்டிற்குள் அர்ச்சியசிஷ்டவளின் பெற்றோர்களுடையவும், சகோதரர்களுடையவும் படங்கள் தொங்குகின்றன, அந்த வீட்டின் பக்கத்தில் வேதச் சாமான்கள் விற்கும் ஒரு கடை இருக்கிறது. அது அர்ச்சியசிஷ்டவளின் மதினியார் கடை. அந்தப் பெரியம்மாள் கடையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மாலை 6½ மணிக்கு, கெபியில் தமிழ்ப் பாட்டும் செபமும் நடந்தது.

7-ம் தேதி காலை கெபியில் பூசைகண்டு சற்பிரசாதம் உட்கொண்டபின் 8 மணி ரெயிலில் பாரீஸ் நகருக்கு

புறப்படலானோம். விசுவாசம், பிறசிநேகம், செபம், தபம் முத லிய நற்கிரிகைகளுக்கு பிறப்பிடம்போன்ற|ஓ, லூர்து நகரே! செபத்துக்கும் பக்திக்கும் உன்னைவிட சிறந்த பட்டணம் இவ்வுலகில் வேறு உளதோ ? நாங்கள் இங்கே தங்கிய ஐந்து தினங்களாக கண்குளிரக்கண்ட காட்சிகளும், காதாரக்கேட்ட அருமையான பாட்டுகளும், இருதய பூர்வமாக உணர்ந்த உணர்ச்சிகளும் எங்கள் மனத்தைவிட்டு என்றும் அகலா. எங்கள் திருயாத்திரையிலேயே இந்த ஐந்து நாட்கள்தான் திவ்விய பலி பூசைகள் காணுவதிலும், சிலுவைப்பாதை சேவிப்பதிலும், செபமாலை செபிப்பதிலும், சுற்றுப் பிரகாரங்களில் கலந்துகொள்வதிலுமே முழுதும் செலவழிக் கப்பட்டன. எங்கள் மனம் வேறொன்றையும் நாடவில்லை. வானுலகர்க் கரசியின் பாதாரவிந்தங்களில் இந்த ஐந்து நாட் கள் ஐந்து நிமிஷங்களாகவே கடந்துபோய்விட்டன. யாருக் கும் தாயென்றால் விசேஷ அன்புதானே. அதிலும் பாவிக் கும் பரமனுக்கும் தாயாகிய இன்னவளைவிட்டுப் பிரிவதென் றால் அதிக வருத்தந்தான். என் செய்வது. ரெயிலோ புறப்பட்டுவிட்டது. எ, அலகை தலை மிதித்தவளே, ஆண்டவனை யீன்றவளே, இராஜேஸ்வரியே, தோத்திரம், அம்மா, தோத்திரம்.

---

## அத்தியாயம் 14.

### லிசியே.

இரவு 8-30 மணிக்கு பாரீஸ் நகர் வந்து சேர்ந்தோம். திருச்சி மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். கிராஞ்நவ் சுவாமி எங்களை வரவேற்று எங்களுக்காக நியமித்துவைத்திருந்த (Royal Hotel) அரச விடுதிக்கு அழைத்துச் சென்றார்கள். இந்த விஸ்தீரணமான பெரிய விடுதியில் சாப்பாடெல்லாம் சௌகரியமாயிருந்தது.

8-ம் தேதி காலையில் விடுதிப் பக்கத்திலிருக்கும் அர்ச். தோமாஸ் அக்குபினஸ் கோயிலில் பூசை கண்டு சற்பிரசாதம்

உட்கொண்டோம். பகல் ஒரு மணிக்கு 90 மைலுக்கப்பா லிருக்கும் சேசுவின் சிறிய புஷ்பமாகிய அர்ச். தெரெசம் மாளுடைய லிசியே பட்டணத்திற்கு மோட்டார்களில் புறப் பட்டோம். கொழும்புக்குத் திரும்பின முதல் கூட்டத்துடன் 5-ம் தேதி லிசியேவுக்கு வந்த வீரபாண்டியன் பட்டணத்து வாசியான ஒருவர் மோட்டாரில் அடிபட்டு அந்த ஊர் ஆஸ்பத்திரியில் படுக்கையிலிருந்தார். நாங்கள் லிசியே ஊருக்கு $5\frac{1}{4}$ மணிக்கு போய்ச் சேர்ந்தோம். அயலூரில், அன்னியர்கள் நடுவே, அவ்வூரார் பேசும் பாஷையும் அறியாது, தன்னந்தனியே, தனது 60-வது வயதில் நோயுற்றுக் கிடக் கும் அன்னவரைப் போய்ப் பார்க்க நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றோம். அவர்களுக்கு காலில் பலத்த அடிபட்டிருந்த போதிலும் முறிவு ஒன்றுமில்லை. திரு இருதயத்திற்கும் சிந்தாத்திரை மாதாவுக்கும் தோத்திரம். சீக்கிரம் குணமாகி எங்களுடன் கொழும்புக்குத் திரும்ப சேசுவின் சிறிய புஷ்பம் உதவி செய்யும்படியாக வேண்டிக்கொண்டோம்.

அவருக்கு சில ஆறுதலான வார்த்தைகள் சொன்னபின், அர்ச். தெரெசம்மாள் கோவிலுக்குப் போனோம். தங்க முலாம் பூசிய கண்ணாடிக் கூட்டுக்குள் அர்ச்சியசிஷ்டவள் மரணப் படுக்கையிலிருக்கும் பாவனையாக ஒரு நேர்த்தியான பெரிய சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. தலையில் ரோசா மலர்களாலான கிரீடமும், கையில் பாடுபட்ட சுரூபமும் இருக்கின்றன. "பூலோகத்திலுள்ளோர்க்கு நன்மை செய் வதே பரலோகத்தில் என் ஓயாத அலுவலாயிருக்கும்," என்ற வார்த்தைகள் பிரஞ்சு பாஷையில் கூட்டின் மேலே தங்க எழுத்துக்களால் வரையப்பட்டிருக்கின்றன. சுரூபத் துக்கு சற்று மேலே ஒரு குகையில் ஒரு சிறு தேவமாதாச் சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நேச மாதா உலகின் மேல் நின்றுகொண்டு சேசுவின் சிநேக பத்தினியும் தனது பிரிய மகளுமாயிருக்கிற சிறிய புஷ்பத்தைப் பார்த்து, "சபாஷ், எனது பிரமாணிக்கமுள்ள நேச புத்திரியே" என்று சொல்கிறதுபோல் இருக்கிறது. இச்சுரூபங்களை

உற்று நோக்குகிறவர்கள் உலக வாழ்வு நிலையற்றதென உள்ளத்துணர்ந்து தேவ நேசத்தையே தேடி திவ்விய சேசுவுக்கு சதா ஊழியம் செய்ய ஆகிப்பார்கள். இவ்வுலக துன்பங்களை பொறுக்கக் கூடாதவர்களாய் அழுது புலம்புகிறவர்களுக்கு நிச்சயமாய் ஆறுதல் கிடைக்கும்.

கோவில் பக்கமாய் ஒரு இடத்தில் அர்ச்சியசிஷ்டவளுடைய சில வஸ்துக்கள் பூச்சியமாய் வைத்து காப்பாற்றப் பட்டு வருகின்றன. அப்பாக்கியவதியின் ஞானஸ்நான உடுப்பு, புது நன்மை உடுப்பு, சாதாரண உடுப்பு, நவ கன்னியாஸ்திரி உடுப்பு, கன்னியாஸ்திரி உடுப்பு முதலிய பலவித உடுப்புகளும், சப்பாத்தும், வார்த்தைப்பாடு கொடுத்த பொழுது கத்தரிக்கப்பட்ட அவளுடைய நீண்ட அடர்த்தியான தலை மயிரும் அந்த இடத்தில் இருக்கின்றன. கோவிலின் பக்கத்தில் கன்னியர் மடமிருக்கிறது. இந்த கார்மேல் மடத்துக்கு சிரேஷ்ட தாயார் அர்ச். சிறிய புஷ்பத்தின் நேச அக்காள் சங். அஞ்ஞேஸ் அம்மாள். கார்மேல் சபையின் ஒழுங்குப்படி அவர்கள் திரை மறைவிலிருந்து சில வார்த்தைகள் எங்களுடன் பேசினார்கள். சத்தத்தை மாத்திரம் நாங்கள் கேட்டோம்.

சற்று தூரத்தில் ஒரு சிறு மலையின்மேல் அர்ச். தெரெசம்மாளுக்காக புதிதாய் ஒரு பெரிய கோயில் கட்டுகிறார்கள். வேலை இன்னும் பூரா முடியவில்லை. கோயிலுக்கு முன்னும் அநேக கட்டிட வேலைகள் நடக்கின்றன. எல்லாம் முடிந்தால் உலகத்தில் அதிக முக்கியமான கோவில்களில் இது ஒன்றாயிருக்கும். இதற்கெல்லாம் பணம் உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் சிறிய புஷ்பத்தின் வழியாக தங்களுக்கு கிடைத்த பேருபகாரங்களுக்கு நன்றியறிதலாக விசுவாசிகளால் அனுப்பப்படுகின்றது. சிறிய புஷ்பம் என்னும் இனிய பெயரை இவ்வுலகில் கேட்டிராத கத்தோலிக்கர் வெகு சிலரே. நாமும் இந்த அர்ச்சியசிஷ்டவளிடம் நம்பிக்கையோடு போனால் நமக்கும் வேண்டியதையெல்லாம் பெற்றுக் கொடுப்பள் அந்த சின்ன ராணி.

ஓ, சேசுவின் சிறிய புஷ்பமே, அன்பின் சிறு வழியை அறிந்துணர்ந்த அர்ச்சியசிஷ்டவளே, கற்பினணிகலமே, கபடு களங்கமற்ற கன்னிகையே, மறைந்த ஜீவியத்தின் மாட்சியே, "பூமியிலுள்ளோர்க்கு ரோசா மலர் மாரி பொழிவேன்" என்று அன்புடன் உரைத்த உத்தமகுண சீலியே, நாங்கள் நன்றாய் செபிக்கவும், இவ்வுலகத்தில் வரும் சகல துன்பங்களையும் பொறுமையுடன் அனுபவிக்கவும், தேவனுடைய சித்தத்துக்கு அமைந்து நடக்கவும், அவருக்கு உகந்த பிரமாணிக்கமுள்ள பிள்ளைகளாக இருக்கவும், பாக்கிய மாய் மரித்து, பரகதி சேரவும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.


கோயிலிலிருந்து ஒரு மைலுக்கப்பால் அர்ச்சியசிஷ்டவளின் பெற்றோர்கள் வசித்த வீடு இருக்கிறது. இரண்டு அடுக்குள்ள இச்சிறு வீட்டைச் சுற்றிப் பார்த்தோம். மெத்தையில் அவளுடைய படுக்கை அறை இருக்கிறது. வீட்டுக்கு பின் பக்கத்து முற்றத்தில் சிறிய புஷ்பம் தனது தகப்பனரிடம் மடத்துக்குபோக உத்தரவு கேட்பது போலவும், தந்தை வானத்தைப் பார்த்து தேவசித்தத்தை அறிவது போலவும் வெள்ளைச் சலவைக் கல்லில் சுரூபங்கள் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்த்தபின் மோட்டார்களில் ஏறி பாரீஸ் நகருக்கு இரவு $11\frac{1}{4}$ மணிக்கு வந்து சேர்ந்தோம்.

---

## அத்தியாயம் 15.

### பாரீஸ்—லண்டன்.

9-ம் தேதிமுதல் 13-ம் தேதிவரை பாரீஸ் பட்டணத்தின் பல பாகங்களையும் சுற்றிப் பார்த்தோம். அர்ச். சப்புருஸ் கோயில், ஜெயமாதாக் கோயில், திருச்சிலுவைக் கோயில், நோத்தர்தோம் கோயில், சேசுவின் திரு இருதயக்




திரு இருதயக் கோயில் — பாரீஸ்

கோயில், புதுமை மாதாக்கோயில் இன்னும் பல கோயில்களைச் சந்தித்தோம். ஜெயமாதாக் கோவிலில் சிறிய புஷ்பத்தைப் பார்த்து சிரித்த தேவ மாதாவின் சுரூபம் இருக்கிறது. நம் அர்ச்சியசிஷ்டவள் வார்த்தைப்பாடு கொடுத்தது இக்கோவிலில்தான். தேவதாய் அர்ச். லபூரே என்ற கன்னிகைக்கு காட்சி கொடுத்த கோவிலை புதுமை மாதாக்கோவில் என்றழைக்கிறார்கள். சேசுவின் திரு இருதயக் கோயில் இப்பட்டணத்தை அடுத்து ஒரு மலைமேலிருக்கிறது. இது ஓர் பிரமாண்டமான அழகிய கோவில். முற்றத்திலிருந்து கோவில் வாசலுக்கு 250 படிகள் ஏறவேண்டும். இக்கோவிலின் சிறப்பு என்னவென்றால் திவ்விய நற்கருணை ஸ்தாபகம் இராப்பகலாய் வருஷம் பூராவும் இருக்கின்றது. இம்மாதிரி ஸ்தாபகம் உலகத்தில் ஒரு சில கோவில்களில் மட்டும் உண்டு. "வருந்தி சுமை சுமக்கிறவர்களே, என்னிடம் வாருங்கள்" என்று அன்பாய் அழைக்கும் அமலன் அடியார்களுக்காக அமர்ந்திருக்கிற இக்கோயிலானது எத்தனை சிறப்பாயிருக்குமென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். இக்கோவிலின் மேல் பல கூண்டுகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று முற்றத்திலிருந்து 500 அடி உயரமிருக்கிறது. இந்தக் கோவிலிலிருந்து பார்த்தால் பாரீஸ் பட்டணம் முழுதும் தெரியும். இந்தக்கோவில் இருக்கிற இடத்தில் முன்னால் இதே பேரால் ஒரு சிறு கோவில் இருந்ததாம். அக்கோவிலில் அர்ச். இஞ்ஞாசியாரும் அவரது சகாக்களும் தங்கியிருந்தார்களாம். இப்பட்டணத்தில் கோவில்களெல்லாம் பெரிதாகவும் அழகாகவும் இருந்தபோதிலும் ரோமாபுரி கோவில்களைப் பார்த்தபின் இவைகளை விசேஷித்துச் சொல்லமுடியாது.

இப்பட்டணம் ஐம்பது லக்ஷம் ஜனத்தொகையுடையது. அதாவது இலங்கைத் தீவிலுள்ள மொத்த ஜனத்தொகைக்கு சமானம். பட்டணம் பார்க்க வெகு அழகாயிருக்கிறது. ரஸ்தாக்களெல்லாம் வெகு சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் கட்டிடங்கள் சற்று கறுப்பாகவே காணப்படுகின்றன

எபல் கோபுரம், நெப்போலியன் கம்பீரமாய்ச் சென்ற கோட்டைவாசல், முன் காலத்து பிராஞ்சு தேசத்து சக்கரவர்த்திகளின் அரண்மனை, நெப்போலியன் கல்லறை, சண்டையில் இறந்த ஒருவருக்கும் இனம் தெரியாத யுத்த வீரர்களின் கல்லறை முதலிய இடங்களைப் பார்த்தோம். இவைகளில் ஏபல் கோபுரம் உலகத்தின் அதிசயங்களில் ஒன்று. இதன் உயரம் ஆயிரம் அடி, முழுவதும் இரும்பினாலேயே கட்டப்பட்டிருக்கிறது. இவ்வூரில் பூமிக்கு கீழே 8 மைல் தூரத்திற்கு ரெயில் போகிறது. அந்தச்சுரங்கம் ஓர் நேர்த்தியான பாதைபோல மின்சார விளக்குகளால் ஒளியேற்றப்பட்டு எப்பொழுதும் பட்டப்பகல்போல் விளங்குகின்றது. இராக்காலங்களில் இப்பட்டணம் வெகு அழகாயிருக்கிறது. பலவர்ண மின்சார விளக்குகள் எங்கும் ஏராளமாய் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. ஏபல் கோபுரத்தில் கணக்கற்ற மின்சார விளக்குகள் பல வர்ணமாய் மாறி மாறி வருவது வெகு விநோதம்.

14-ம் தேதி காலை $10\frac{1}{4}$ மணிக்கு பாரீசிலிருந்து ரெயில் மார்க்கமாகப் புறப்பட்டு பிராஞ்சு தேசத்தின் கடலோரமாகிய டியப்பா என்ற இடத்துக்கு போனோம். இவ்விடத்தில் கப்பலேறி இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து இங்கிலாந்து தேசத்தின் துறைமுகங்களில் ஒன்றாகிய நீயு காவனுக்கு 4-30 மணிக்கு போய்ச் சேர்ந்தோம். ஆனால் அப்பொழுது இங்கிலாந்தில் 3-30 மணி. பின் நீயு காவனிலிருந்து ரெயில் ஏறி லண்டன் விக்டோரியா ஸ்டேஷனை அடைந்தோம்.

உலகத்திலேயே பெரிய பட்டணமாகிய லண்டனில் நாங்கள் எப்பிரல் மாதம் 15-ம் தேதியிலிருந்து 29-ம் தேதி வரைக்கும் தங்கினோம். இந்த நாட்களில் நாங்கள் பார்வையிட்ட அநேக இடங்களில் முக்கியமான சிலவற்றை மட்டும் சுருக்கமாக கீழே குறிப்பிடுகிறேன்.

வெஸ்ட்மினிஸ்டர் மேற்றிராசன தேவாலயமானது கர்தினால் வான் ஆண்டவரவர்களுடைய முயற்சியால் கட்டப்பட்டு 1910-ம் வருஷம் ஜுன் மாதம் 28-ம் தேதி அபிஷேகம்




திரு இருதயக் கோவிலின் உட்புறம் — பாரீஸ்

பண்ணப்பட்டது. இந்த ஆலயம் இன்னும் முற்றுப்பெற வில்லை. சுவர்களை அழகிய சலவைக் கற்களினல் பொதிந்து கொண்டும், பல இடங்களில் நேர்த்தியான சித்திரங்களை வரைந்துகொண்டுமிருக்கிருர்கள். சிலபாகங்களில் மட்டும் பூர்த்தியாக வேலை முடிந்திருக்கிறது. முற்றிலும் வேலை முடிய இன்னும் பல வருஷங்கள் ஆகும். அப்பொழுது இத்தேவாலயம் லண்டனில் பார்க்கவேண்டிய அதிசயங் களில் ஒன்ருக ஆகிவிடும்.

டசாட் அம்மாளுடைய மெழுகினல் செய்யப்பட்ட அருமையான வேலைகளைப் பார்த்தோம். பெரியார்களின் உரு வங்கள் வெகு நேர்த்தியாக செய்து வைக்கப்பட்டிருக்கின் றன. இது ஒரு அபூர்வமான வேலையாதலால் லண்டனுக்கு வருபவர்கள் இக்காட்சி சாலையை அவசியம் பார்க்கிருர்கள்.

தேம்ஸ் நதி லண்டன் மத்தியில் ஓடுகிறது. கப்பல்கள் ஏராளமாய் இங்கு கிடக்கின்றன. இந்த நதியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் அநேக பாலங்களில் விசேஷமான ஒரு இரும்புப் பாலத்தைப் பார்த்தோம். நாங்கள் போன சமயத் தில் ஒருகப்பல் இந்தபாலத்தின் பக்கமாக வந்தது. உடனே பாலம் இரண்டாகப் பிரிந்து வில்போல் மேலே வளைந்து நிற்க கப்பல் இதைக் கடந்து சென்றது. இதற்கு 5 நிமிஷங்கள் தான் பிடித்திருக்கும். ஆனல் இந்த சொற்ப நேரத்தில் ரஸ்தா வில் நூற்றுக்கணக்கான மோட்டார்கள் நதியின் இருகரை களிலும் வந்து, பாலம் ஒன்றித்த பின் நதியைக் கடக்க, காத்துக்கொண்டிருந்தன.

எலிசபெத் ராணி காலத்தில் கத்தோலிக் கிறிஸ்தவர் களை அடைத்து வைத்து துன்புறுத்தின இடமாகிய லண்டன் கோபுரத்தைப் போய்ப் பார்த்தோம். இதில் அநேகர் வேத சாட்சிகளாக மரித்தனர். இதைக் கோபுரம் என்றழைத்த போதிலும் பெரிய கட்டிடங்களைக் கொண்ட ஒரு கோட்டை போல் இருக்கின்றது. விலையுயர்ந்த, பேர்பெற்ற ஆதிகாலத்து சாமான்கள் இங்கு அநேகம் இருப்பதால் யுத்த வீரர்

உள்ளும் புறமும் இதைக் காவல் புரிந்து வருகின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக உள்ள யுத்த தளவாடங்கள் பல இங்கு இருக்கின்றன. ஒரு அறையில் இங்கிலாந்து தேசத்து மன்னர்களுக்கு சொந்தமான ஆபரணங்கள் நிறைய வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. கிரீடங்கள், சிலுவைகள், ஊன்றுகோல்கள் முதலியன அநேகாயிரம் வைரங்களால் இழைக்கப்பட்டு ஜொலிக்கின்றன. ஒரு ஊன்றுகோலில் உலகத்திலுள்ள வைரங்களிளெல்லாம் பெரிதான ஒருவைரம் பதிக்கப்பட்டிருக்கிறது. கிரீடங்களில் நம் மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் கிரீடம்தான் வெகு அழகாக இருக்கிறது. ஞானஸ்நானத் தொட்டிகள், உப்பு பாத்திரம், தண்ணீர் பாத்திரம் முதலியவைகள் வெகு அழகாக இருக்கின்றன. இவைகள் ராஜ குடும்பத்தாருக்கு ஞானஸ்நானத்துக்கு உபயோகிக்கப்பட்டவைகள். இவைகள் நீங்கலாக, பெரிய பிரபுக்கள் தங்கள் அந்தஸ்துக்கு தக்கவாறு அணியும் பல பதக்கங்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

பாராளும்மன்றக் (Parliament) கட்டிடங்களைப் பார்வையிட்டோம். மந்திர மன்றம் (Privy Council) அதின் ஒரு பக்கத்திலிருக்கிறது. இவ்விசித்திர மண்டபங்களை மட்டும் பார்க்க 2½ மணி நேரமாயிற்று.

பாரீஸ் பட்டணத்தைப்போல் இங்கேயும் பூமியின்கீழ் ரெயில்கள் ஓடுகின்றன. பட்டணத்தின் ஓர் பாகத்திலிருந்து மற்றொரு பாகம் செல்ல ஜனங்கள் சதா ஓடிக்கொண்டிருக்கும் இந்த ஆச்சரியமான ரெயில்களைத்தான் உபயோகித்துக் கொள்கிறார்கள். இவைகள் சில இடங்களில் மூன்று அடுக்காய் ஒன்றின்கீழ் வேறொன்றாய் ஓடுகின்றன. சில ரெயில் பாதைகள் ஆற்றின் கீழே இருக்கின்றன. இப்பாதைகளை இவர்கள் எப்படித்தான் உண்டாக்கினார்களோ தெரியவில்லை. நம்மால் கண்டுபிடிப்பதே கஷ்டம்.

ஒவ்வொரு வருஷத்திலும் சிலவாரங்கள் மாத்திரம் நடைபெறும் ஒலிம்பிக்காட்சிக்குப் போயிருந்தோம். இக்

காட்சியில் இங்கிலாந்து தேசத்திலுள்ள சகலவிதமான சாமான்களும் யந்திரங்களும் காண்பிக்கப்பட்டன.

இங்கிலாந்து சபை என்ற பதித ஸ்தாபனத்துக்கு முக்கியமான கோயிலாகிய வெஸ்ட்மினிஸ்டர் ஆபியைப் பார்த்தோம். இக்கோவில் அர்ச். எட்வர்டு ராஜாவால் கட்டப்பட்டு கத்தோலிக் கோவிலாகவே இருந்தது. எட்டாவது என்ரி என்ற மன்னர் காலத்தில் இது அபகரிக்கப்பட்டு பதிதருக்கு முக்கியமான கோவிலாக மாறிவிட்டது. 1066-ம் வருஷமுதல் இங்கிலாந்து ராஜாக்களெல்லாம் இந்த ஆலயத்தில்தான் முடிசூட்டப்படுகிறார்கள்.

19-ம் தேதி லிவர்பூல், மான்செஸ்டர் என்ற இடங்களுக்குப் போனோம். இவை துணி நெய்யும் ஆலைகளுக்கு கீர்த்தி பெற்ற யிடங்கள்.

நானும் R. G. பெறைரா அவர்களும் ஜெர்மன் தேசத்திற்குப் போனோம். 21-ம் தேதி இரவு 11 மணிக்கு லண்டனைவிட்டு புறப்பட்ட நாங்கள் ஜெர்மனியில் ஆம்பர்க் என்ற பட்டணத்தை மறுநாள் பிற்பகல் 3½ மணிக்கு அடைந்தோம். இந்த அழகிய பட்டணத்தில் உணவுப்பொருட்களின் விலை அதிகம். லண்டனில் ஒரு வாரத்தில் செலவாகும் பணம் இங்கே இரண்டே நாட்களில் செலவாகிவிடும். இங்கிருந்து புறப்பட்டு லண்டனுக்கு 25-ம் தேதி திரும்பிவந்து திருயாத்திரைக்காரரோடு சேர்ந்துகொண்டோம்.

29-ம் தேதி காலை யாவரும் லண்டனைவிட்டு காலை 10 மணிக்கு புறப்பட்டு பாரீஸ் நகர் வந்து சேர்ந்தோம். மறுநாட்காலையில் ஆகாய கப்பலில் ஏறி பாரீஸ் நகர் மேலே பறந்தோம். அன்று மாலை சுரூபங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றைப் பார்வையிட்டு இரவு 10½ மணிக்கு பாரீஸை விட்டுப் புறப்பட்டு பாரெலமோனியா என்ற இடத்துக்குப் போனோம்.

## அத்தியாயம் 16.

பாரேலமோனியா — லேயன்ஸ் — ஆர்ஸ் — மார்சேல்ஸ்.

பாரேலமோனியாவில்தான் அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கு ஆண்டவர் காட்சி கொடுத்து திருஇருதய பக்தியை பிரபல்யப்படுத்தும்படியாக சொன்ன யிடம். இந்த ஊருக்கு நாங்கள் 30-ம் தேதி காலே 6 மணிக்கு வந்து சேர்ந்தோம். திருஇருதயம் தரிசனம் கொடுத்த கன்னியர் மடத்துக் கோவிலிலேயே பூசைகண்டு பரிகார நன்மையையும் வாங்க பாக்கியம் பெற்றோம். பக்கத்து பீடத்தில் அர்ச். மார்கரீத் மரியம்மாளின் கல்லறை இருக்கிறது. பற்பல இடங்களிலிருந்து! காணிக்கையாக அனுப்பப்பட்ட கொடிகள் அநேகம் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. முதல் இந்திய மேற்றிராசனமாகிய தூத்துக்குடியின் கொடி ஒன்றைத் தவிர, நம் தாய்நாட்டிலிருந்து வேறு கொடிகளை அங்கு காணோம். கன்னியாஸ்திரீகள் இக்கோவிலிலிருந்து செபிக்குமிடம், மற்றவர்கள் அவர்களைக்காணக்கூடாத விதமாய் ஓர் வகை இரும்புக்கிராதியால் மறைக்கப்பட்டிருக்கிறது.

பின் முத்திப்பேறுபெற்ற தெ லா கொலம்பியாவின் கல்லறை இருக்கும் சேசுவின் திரு இருதயக் கோயிலுக்குப் போனோம். இது அழகான பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட ஒரு சிறு கோவில். இக்கோவிலில் அர்ச். கூரேதார்ஸ-டைய தலே ரோமமும் மெய்யான சிலுவையின் ஒரு பாகமும், இன்னும் சில அர்ச்சியசிஷ்ட பண்டங்களுமிருக்கின்றன. இதன் பக்கத்தில் சற்பிரசாத காட்சி சாலே ஒன்றிருக்கிறது. இங்கு திவ்விய நற்கருணே பக்திக்கு அடுத்த பற்பல சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கோயில் நெருப்பு பற்றிக்கொண்டபோது, திவ்விய நற்கருணேப் பெட்டியும் தீப்பிடித்துக்கொள்ள, அப்பெட்டியின் உட்பாகமட்டும் யாதொரு பழுதில்லாமல் அற்புதமாக காப்பாற்றப்பட்டிருக்கிறது. இக்காட்சிசாலேயில் இந்த விசேஷமான திவ்விய நற்கருணேப் பெட்டியை ஆச்சரியத்துடன் உற்று நோக்கினேம்.

இங்கிருந்து மேற்றிராசனக் கோயிலுக்குப் போனோம். இக்கோவிலில் அர்ச். பிலேசுடைய கரம் இருக்கிறது. தொண்டையைச் சார்ந்த சகல வியாதிகளுக்கும் இன்னவரை வேண்டிக்கொண்டவர்கள் அற்புதமாக குணமடைந்திருக்கிறார்கள் என்பதை கத்தோலிக்கர் மறக்கலாகாது. இன்னும் பல வேத சாட்சிகளின் அர்ச்சியசிஷ்ட பண்டங்களும் இங்கு இருக்கின்றன.

நடுப்பகல் $12\frac{1}{2}$ மணிக்கு அவ்விடத்திலிருந்து புறப்பட்டு லேயன்ஸ் பட்டணத்தை யடைந்தோம். பட்டுத்துணி செய்வதில் அதிக கீர்த்தி வாய்ந்த இடமாகிய இப்பட்டணம் பிரான்ஸ் தேசத்திலேயே இரண்டாவது பட்டணமாகக் கருதப்படுகிறது. மலைமேலிருக்கும் புதுமை மாதாக்கோவில் முழுமையும் கொத்துவேலைப்பாடுள்ள சலவைக் கற்களால் கட்டப்பட்டு கண்களைக் கவர்ந்து நிற்கின்றது. இக்கோவிலின் தாழ்வாரத்திலிருந்து வெகுதூரம் நன்றாயப் பாக்கலாம்.

பின் அர்ச். அருளப்பர் மேற்றிராசனக் கோவிலுக்குப் போனோம். பழைய கட்டிடமாதலால் பார்க்க அவ்வளவு அலங்காரமாயில்லை. அர்ச். வின்சென்ட் சின்னப்பருடைய இருதயம் வெகு பூச்சியமாக இங்கு வைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்புக்குக் காரணம். இதை முத்திசெய்து வேண்டிக்கொண்டோம்.

மே மாதம் 2-ம் தேதி அர்ச். ஜாண் மரி வியான்னி கூரேதார்ஸ் தன் ஜீவியகாலத்தின் பெரும் பாகத்தை செலவழித்த ஆர்ஸ் பட்டணத்துக்குப் போனோம். இவ்விடத்தில் நேர்த்தியான பளிங்கு கற்களால் புதிதாகக் கட்டப்பட்ட திருஇருதயக்கோவில் ஒன்றிருக்கிறது. இக்கோவிலில் அர்ச். கூரேதார்ஸுடைய அழியாச்சரீரம் ஒரு அழகான கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பாவசங்கீர்த்தனத் தொட்டி, கதிர்பாத்திரம், பூசைப்பாத்திரம், நாற்காலி, மேசை முதலிய பற்பல சாமான்கள் இருக்கின்றன.

இவைகளில் அர்ச்சியசிஷ்டவர் 40 வருஷ காலமாய் உபயோகித்த ஒரு கட்டில் அதிக விசேஷமானது. ஓர் இரவு இவருடைய அர்ச்சியசிஷ்டதனத்தின்மேல் காய்மகாரம் கொண்ட பிசாசு, அவர் தூங்கும் சமையத்தில் இக்கட்டிலில் நெருப்பு வைத்துவிட்டதாம். கட்டிலின் அடிப்பாகம் நெருப்பில் வெந்திருந்தபோதிலும் அர்ச்சியசிஷ்டவருக்கு அனல் முதலாய்ப் படவில்லையாம். இங்குள்ள அர்ச்சியசிஷ்ட பண்டங்களையெல்லாம் முத்திசெய்து செபித்தபின் அங்கிருந்து புறப்பட்டு இரவு 9½-மணிக்கு மார்சேல்ஸ் வந்து சேர்ந்தோம்.

மார்சேல்ஸ் ஒரு பூர்வீக பட்டணம். 3000 வருஷங்களுக்கு முன்னதாகவே இது ஒரு பெரிய துறைமுகப்பட்டணமாயிருந்திருக்கிறது. ஆண்டவர் அற்புதமாய் கல்லறையிலிருந்து எழுப்பிய லாசர் இவ்விடத்தில் முதல் மேற்றிராணியராயிருந்து அர்ச்சியசிஷ்டவரானார். இவருடைய சகோதரிகளான அர்ச். மார்த்தாளும், மரிய மக்தலேனம்மாளும் இங்குதான் ஜீவித்து வந்தார்கள். லாசருடையவும் மார்த்தாளுடையவும் அர்ச்சியசிஷ்ட பண்டங்கள் இங்கு இருக்கின்றன. இவ்விருவரும் இங்கேதான் மரித்தார்கள். லாசருடைய மரணத்துக்குப்பின் அர்ச். மரிய மக்தலேனம்மாள் இங்கிருந்து 100 மைலுக்கப்பாலுள்ள ஒரு காட்டில் 20 வருஷங்கள் தவம்புரிந்து மரித்தனள். அந்த இடத்தில் ஒருகோவில் கட்டப்பட்டிருக்கிறது. ஜனங்கள் இன்றும் திருயாத்திரையாக அங்கே போய் வருகிறார்கள்.

இந்த மார்சேல்ஸ் பட்டணத்தில் பிரமாண்டமான பல கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் சிறந்தது கடற்கரையோரத்தில் ஒரு மலைமேலிருக்கும் பிரயாணிகளுக்கு பாதுகாவலரான தேவமாதா கோவில். கீழே யிருந்து மின்சார யந்திரத்தின் உதவியால் மேலே கோவிலுக்குப் போனோம். பிரமாண்டமான இந்தக் கோவிலின் நடுப்பீடத்தில் அழகாக அமைக்கப்பட்டிருக்கும் பலவித புஷ்பச் செடிகளின் நடுவில் சுகந்த பரிமளம் வீசும் தூய வெண் லீலியாகிய கற்புக்கரசி கம்பீரமாக வீற்றிருக்கிறாள். பக்கத்து பீடத்தில்

அதே மாதாவின் சிறியதோர் புதுமைச் சுரூபம் இருக்கின்றது. இதற்கு முன் நூற்றுக்கணக்கான மெழுகுதிரிகள் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கோவிலின் மேலே இதே அளவில் இன்னொரு கோவில் இருக்கிறது. இதுவும் கீழ் கோவில்போல நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில்களுக்குப் பக்கத்தில் 1870-ம் வருஷம் சண்டை சமாதானமான ஞாபகச் சின்னமாக ஒரு சிறு கோபுரம் கட்டி இருக்கிறார்கள். அச்சண்டையில் உபயோகிக்கப்பட்ட பீரங்கி முதலியவைகளை உருக்கி 150 அடி உயரத்தில் ஒரு பெரிய தேவமாதா சுரூபம் செய்து இக்கோபுரத்தின் மேல் வைத்திருக்கிறார்கள். இச்சுரூபம் எவ்வளவு பிரமாண்டமாயிருக்கிறதென்றால் அதன் உள்ளேயிருக்கும் படிகள் வழியாக ஏறி தலைமேலிருக்கும் கிரீடத்திற்குப் போனால் அங்கே 12 பேர் நிற்கப் போதுமான இடம் இருக்கிறது.

மேமீ 4-ம் தேதி $2\frac{1}{2}$ மணிக்கு "ஆந்திரலெபோன்" என்ற கப்பலில் ஏறி கொழும்புக்கு புறப்பட்டோம். யாழ்ப்பாணம் மேற்றிராணியாரும் 4 குருக்களும் எங்களுடன் பிரயாணஞ் செய்தார்கள். தினம் கப்பலில் பூசைகள் நடந்தன. மிகவும் வசதியுள்ள அழகிய இக்கப்பலில் பிரயாணம் செய்வது மனதுக்கு மிகவும் இனிமையாயிருந்தது.

---

## அத்தியாயம் 17.

### சுவேஸ் கால்வாய் — ஏடன்.

9-ம் தேதி காலை 8 மணிக்கு கப்பல் போர்ட்செயிட் துறைமுகத்தை அடைந்தது. கப்பல்யந்திரங்களில் ஏதோ சற்று பழுதுபார்க்க வேண்டியதிருந்ததால் அன்று நடுநிசிக்கு அப்புறமே கப்பல் துறைமுகத்தை விட்டது.

இத்துறைமுகத்திலிருந்து, மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் சுவேஸ் கால்வாய் ஆரம்பமாகின்றது. நாங்கள் பாலஸ்தீனுக்கு போகும்பொழுது சுவேஸ்

துறைமுகத்திலிருந்து கெயிரோவுக்குப் போய் போர்ட் செயிட் துறைமுகத்திற்கு ரெயில் மார்க்கமாய் சென்றதால் இக்கால்வாயில் நாங்கள் பிரயாணம் செய்யவில்லை. இக்கால்வாய் 72 மைல் நீளமும், 330 அடி அகலமும், 20 அல்லது 26 அடி ஆழமுமுள்ளது. இது உலகத்தின் அதிசயங்களில் ஒன்று. ஐரோப்பிய நாடுகளுக்கும் நம் தேசத்திற்கும் போக்கு வரத்துக்கு இது சுலபமான சுருக்கு வழியாதலால், ஒவ்வொருநாளும் அநேக கப்பல்கள் இதன் மார்க்கமாய்ச் செல்லுகின்றன. கால்வாய் போதுமான அளவு அகலமாயிருந்தாலும் இரண்டு கப்பல்கள் எதிர்த்துப் போகிறதில்லை. எதிரே கப்பல்கள் வந்தால், கால்வாய் உத்தியோகஸ்தர்கள், போகிற கப்பலை கரையின் ஒரு ஓரத்தில் கட்டிவிடுகிறார்கள். நாங்கள் வந்த கப்பல் இவ்வாறு மூன்று தடவை கட்டப்பட்டது. சுவேஸ் கால்வாயின் இரு பக்கங்களும் வனாந்தரங்களாக இருக்கின்றன. சிற்சில இடங்களில் மாத்திரம் கொஞ்சம் மரங்களையும் தண்ணீரையும் பார்க்கலாம். பேரீச்சம் பழத்தைத் தவிர வேறு எவ்வித சாகுபடியும் இவ்விடங்களில் கிடையா.

இக்கால்வாயைக் கடந்து செங்கடலில் பிரயாணம் செய்யும்பொழுது அதிக கஷ்டப்பட்டோம். இந்த உஷ்ணமான கடலில் பயணம் செய்த ஐந்து நாட்களும் நாங்கள் பட்ட துன்பங்கள் சொல்லுந்தரமன்று. மேசையில் வைத்த வெண்ணெய் அரை நிமிஷத்திற்குள் நெய்யாக உருகி விடுகிறது.

15-ம் தேதி காலை 5 மணிக்கு ஏடன் துறைமுகத்தில் கப்பல் நின்றது. நாங்கள் கரையில் இறங்கி மோட்டார்களில் ஊரைச்சுற்றிப் பார்த்தோம். இது அரேபியாவுக்கு முக்கிய துறைமுகப் பட்டணம். இங்கிலீஷ் அரசாட்சியின் கீழ் இருக்கிறது. இங்கே மழை வெகு அபூர்வமாதலால், மழை பெய்யுங் காலங்களில் தண்ணீர் தெப்பக்குளங்களில் தேக்கப்பட்டு உபயோகிக்கப்படுகின்றது. அநேக தெப்பக்குளங்கள் இருந்த போதிலும் எங்கள் கண்ணுக்கு தென்பட்ட

குளங்களெல்லாம் வறண்டுபோய்க்கிடந்தன. பட்டணத்தை அடுத்து மலையின் பக்கமாய் 2500 அடி ஆழத்திலிருந்து யந்திரத்தின் உதவியால் தண்ணீர் பட்டணத்துக்கு இறைக்கிறார்கள். இங்கு ஒட்டகங்களைத் தவிர வேறு வாகனங்களை காண முடிகிறதில்லை. அவைகளே வண்டிகளை இழுத்துச் செல்கின்றன.

இதிலிருந்து ஏடன் குடாக்கடலும் அதன்பின் இந்து மகா சமூத்திரமும் துவக்குகிறது. 18-ம் தேதி கப்பல் வேலையாட்கள் ஏழைக் கடல்தொழிலாளர் சங்கத்திற்காக பிரயாணிகளிடம் ஒரு நிதி வசூல் செய்தனர். அன்று மாலையில் வேடிக்கை கூத்துகளும் இரவில் கொடைச் சீட்டும் (Lottery) நடாத்தினர். கப்பல் பிரயாணிகள் மனமுவந்து கொடுத்த சாமான்களே கொடைச்சீட்டில் வைக்கப்பட்டன. தங்களுக்கு சீட்டில் விழுந்த சாமான்களை சில பேருபகாரிகள் திரும்ப சங்கத்திற்கே இனமாகக் கொடுத்துவிட்டனர். கப்பலதிகாரிகள் இப்படித் திருப்பப்பட்ட சாமான்களை ஏலம் கூறினார்கள். அவைகள் அவர்களுக்குத் திரளான திரவியத்தைத் தேடிக்கொடுத்தன.

---

## அத்தியாயம் 18.

### திருயாத்திரையின் முடிவு.

கரும்பை நுனியிலிருந்து அடிவரையில் தின்பானொருவன் எவ்வாறு வர வர சாற்றின் மிக்க இன்சுவையை அனுபவிப்பானோ, அவ்வாறே எங்களுக்கு இந்த திருயாத்திரையின் முடிவு வர வர இன்பத்தைத் கொடுத்தது. இத்திருயாத்திரையினால் நாங்கள் அடைந்த பலன்கள் அனந்தம். "பரலோகத்தில் உங்கள் பொக்கிஷத்தை சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். அங்கே அந்தும் துருவும் அரிக்கிறதுமில்லை. திருடன் அங்கே கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை," என்ற

கிறிஸ்து பரமாத்மாவின் கட்டளையை சிரமேற் தாங்கி எங்க ளால் சேர்க்கக்கூடிய ஞான திரவியத்தை இத்திருயாத்திரை யின்போது சேர்த்து வைத்திருக்கிறோம். அத்தோடு இந்த யாத்திரை அறிவு வளர்ச்சிக்கும் மிக்க ஏதுவாயிருந்தது.

நான் இந்த திருயாத்திரையைப் பற்றிய விபரங்களை எழுதி முடிக்கு முன்னரே, இத்திருயாத்திரையை வெற்றி கரமாக முடிக்க காரணர்களாக இருந்தோர்க்கு என் தாழ்மை யான நன்றியைச் செலுத்த கடமைப் பட்டுள்ளேன்.

நான் இத்திருயாத்திரையில் கலந்து கொள்ள கிருபை செய்த எம்பிரான் யேசு ரட்சகருக்கு நன்றி செலுத்த பொருத்தமான வார்த்தைகள் என் சிற்றறிவுக்கு இச்சமயம் எட்டாததால் அவர் பாதங்களில் விழ்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, "அன்பு நிறை அமலனே, இவ்வுலகில் அடி யேன் பக்தியாய் வாழ்ந்து பாக்கியமாய் மரித்து பரகதி சேர்ந்து, அங்கே தேவரீர் எனக்குச் செய்த பேருபகாரங் களுக்காக, சிலநாட்கள் மட்டுமல்ல, சில வருஷங்கள் மட்டு மல்ல, ஆனால் நித்தியத்திற்கும் உம்மை வாயார வாழ்த்தி துதிக்க அனுக்கிரகம் பண்ணியருளும், அண்ணலே" என்று வேண்டிக் கொள்கிறேன்.

நீண்ட இத்திருயாத்திரையில் யாதொரு வியாதி துன்பமில்லாது என்னை அன்புடன் காத்தருளிய சிந்தாத் திரை மாதாவுக்கு என் அற்ப நன்றியை இரு கரங்களையும் குவித்து சமர்ப்பிக்கின்றேன்.

இத்திருயாத்திரைக்கு காரணரும், அதன் தலைவராக இருந்து அதை வெற்றியுடன் நடத்தினவருமான சங். லெதெல்லியார் சுவாமிகளின் செப்பற்கரிய செயல்களுக்கு என் நன்றி இன்றும் என்றும் உரித்தாகுக.

இன்னும் இத்திருயாத்திரையில் கலந்துகொள்ள என்னை வற்புறுத்திய திவான்பகதூர் I. X. பெறைரா அவர் களுக்கும் எனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மே மாதம் 21-ம் தேதி எங்கள் கப்பல் இலங்கைக்கு சமீபமாக வந்துகொண்டிருந்ததை யறிந்தோம். மாலையில் தான் கொழும்புக்குப் போய்ச் சேருவோமென்று எங்களுக்குத் தெரிந்தபோதிலும் பகல் போஜனம் முடிந்ததுமே கரையில் இறங்க ஆயத்தமாய்விட்டோம். சாமான்களை யெல்லாம் பெட்டிகளில் ஒழுங்காக வைத்து பூட்டியபின் கரையில் இறக்குவதற்கு வசதியானயிடத்தில் வைத்துக்கொண்டோம். மேல் தட்டில் வந்து ஆவலுடன் உற்று நோக்கினோம். கப்பல் ஒரே வேகத்தில் போனாலும் அது இப்பொழுது சற்று மெதுவாகவே செல்வதாக எங்களுக்குத் தென்பட்டது. ஒருவேளை கப்பல் வேகமாகச் சென்றாலும் இலங்கை தீவு தான் நகர்ந்துகொண்டு போகிறதோ என்று ஐயுறலானோம். ஒரு நிமிஷம் ஒரு மணியளவாகவும், ஒரு மணி ஒரு நாளளவாகவும் எங்களுக்குத் தோன்றிற்று.

இவ்வாறு ஆத்திரத்தோடும் அவாவோடும் பிரயாணிகள் காத்துக்கொண்டிருந்தபோதிலும் அவர்கள் தாங்கள் செய்த தூர பிரயாணத்தின் கஷ்டத்தையும் அதனாலுண்டான களைப்பையும் மறந்தவர்களாக ஏதோ ஓர் நினைவால் அளவில்லாத ஆனந்தம் கொண்டிருந்தனர். அத்தகைய நினைவு யாதாயிருக்கலாம்? சுமார் மூன்று மாதகாலமாக தாங்கள் காணாத உற்றார், உறவினர், மனைவி, மக்கள், முதலியோரைப் பார்க்கப்போகிறோமென்ற எண்ணமோ? தன் குடும்பத்தில் இத்திருயாத்திரையில் கலந்துகொள்ள தனக்கு மாத்திரம் கிடைத்த பெரும் பாக்கியத்தை நினைத்ததனால் உண்டான பெருமையோ? பிரயாணத்தில் யாதொரு தீங்கும் நேரிடாது சுகமே திரும்பி வந்ததினால் அடைந்த அக்களிப்போ? மேல் நாடுகளுக்குச் சென்று பல இடங்களை தரிசித்து வந்ததினால் உண்டான பூரிப்போ? வீடு சென்றதும் தன் அருமை மக்களுக்கு தான் தன்னுடன் கொண்டு வந்த திருப்பண்டங்களை கொடுக்கிறதாகவும் அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு ஆனந்தத்தால் நர்த்தனம் செய்வது போலவும் தான் காணும் கனவோ? இவைகளில்


யாதோ அவர்கள் உள்ளத்தை உவகையால் நிரப்பியிருக்கிறது. யாதாயிருந்தாலும் சரி. கப்பல் கொழும்பு துறை முகத்தில் வந்து நின்றுவிட்டது. உடனே இறங்கி கரையில் எங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த நண்பர்களுடன் எங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தோம்.

மூவுலக முதல்வனுக்கு என்றும் மங்களம் பொங்குக.

68046

Q6:4198
N35

Printed at the Hilal Press, Tinnevelly Town—10-'35.



பரிசுத்த ஜூபிலி வருஷத்தின்
இரண்டாவது திருயாத்திரை
3-3-34 - 21-5-34
பாலஸ்தீன
நாடு
லண்டன்
பாரிஸ்
பிரான்சு
ஜெர்மனி
ஜினேவா
வெனிஸ்
ரோமாபுரி
நேப்பிள்ஸ்
மத்தியதரைக் கடல்
துர்க்கி
நாசரேத்
ஜெருசலேம்
ஆப்பிரிக்கா

7A
10-51